

நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்

பிறெம்மன், ஜெர்மனி | 07-10 டிசம்பர் 2013

# சிறிலங்கா தொடர்பான மக்கள் தீர்ப்பாயம்

பதிப்புரிமை © நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் & சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு - பிறெம்மன் 2014

இலங்கை மீதான நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் தீர்ப்பில் (PTSL) உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை அச்சடிப்பதற்கும், பிரசுரம் செய்வதற்குமான முழுமையான பதிப்புரிமையை, நிரந்தர மக்கள் தீர்ப்பாயமும், சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு - பிறெம்மன் (IMRV) என்பன மட்டுமே கொண்டிருக்கிறன என்பதனைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்

**நிறுவுனர்**

லெலியோ பாஸ்ஸோ (இத்தாலி)

**தலைவர்**

சல்வடொரே செனெசி (இத்தாலி)

**பொதுச் செயலாளர்**

ஜியான்னி ரொக்னோனி (இத்தாலி)

சர்வதேச லெலியோ பாஸ்ஸோ ஸெஸியோன் நிறுவகம், வியாடெலா டோனனா வெக்கியா, 5 - 00186 ரோம், இத்தாலி

Tel/Fax: 0039 066877774

E-mail:pptribunal@internazionaleleliobasso.it | tribunale@internazionaleleliobasso.it | filb@iol.it

Web: http://www.internazionaleleliobasso.it

# நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்

## சிறிலங்கா தொடர்பான மக்கள் தீர்ப்பாயம்

07-10 டிசம்பர் 2013

அனுசரணையாளர்கள்

**டெமெய்ன்டெஸ்ஸென்றும் உண்ட் கேர்ச்சே செயின்ற் போள்**

பிறெம்மன், ஜெர்மனி

ஒழுங்கமைப்பாளர்கள்

**சர்வதேச மனிதஉரிமைகள் சங்கம் - பிறெம்மன்**

imrvbremen@gmail.com

**சிறிலங்காவிலான அமைதிக்கான அயர்லாந்து மன்றம்**

irishpeaceforum@gmail.com

நடத்துனர்கள்

**நிரந்தர மக்கள் தீர்ப்பாயம்**

சர்வதேச லெலியோ பாஸஸோ ஸெஸியோன் நிறுவகம்

வியா டெலா டோனனா வெக்கியா

5—00186 ரோம், இத்தாலி

pptribunal@internazionaleleliobasso.it

# உள்ளடக்கம்


முறைகாண் ஆயத்தின் உறுப்பினர்கள் 05

1. நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் தகுதி. 07

2. சிறிலங்கா தொடர்பான 1வது அமர்வின் தீர்ப்பு –டப்பிளின், ஜனவரி 2010. 09

3. முறைப்பாடுகள். 11

4. எதிர் தரப்பு வாதம். 14

5. தீர்ப்புகள். 16

6. பரிந்துரைகள் 48

7. முடிவுறுத்தும் குறிப்புகள் 51

8. இணைப்பு I : முறைப்பாட்டு தரப்பின் தொகுப்புரையின் சில பகுதிகள் 52

9. இணைப்பு II : புகைப்பட, வீடியோ மற்றும் எழுத்து மூலமான 60

# முறைகாண் ஆய உறுப்பினர்கள்



**பியஸ்ரெய்ன், டானியல்** (கூட்டுத் தலைமை.)

ட்ரெஸ் டி பாப்ரேறோ தேசிய பல்கலைக்கழக, இனப்படுகொலை கற்கை மையத்தின் பணிப்பாளர், புவனஸ் அயர்ஸ் பல்கலைக்கழகத்தின் இனப்படுகொலைசார் பீடத்தின் பேராசிரியர் மற்றும் கல்விமான்களுக்கான ஆர்ஜென்ரினா தேசிய மையத்தின் உறுப்பினர். இவர் இனப்படுகொலைசார் கல்விமான்களின் சர்வதேச சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டவர்.



**ஹாலிடே, டெனிஸ்** (கூட்டுத் தலைமை)

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் உதவிச் செயலாளர் நாயகம். ஈராக்குக்கு எதிரான பாதுகாப்புச்சபையின் பொருண்மிய தடைகளை எதிர்த்து, ஐ.நா. வில் 34 வருடம் வகித்த தமது பதவியை விட்டு விலகியவர். காந்தி சர்வதேச சமாதான பரிசு பெற்றவர்.



**குரிபியன், ஸெவான்னே**

இனப்படுகொலைகள் மற்றும் சர்வதேச சட்டங்களில் நிபுணர். ஜெனிவா பல்கலைகழகத்தில் உதவி விரிவுரையாளராகவும் நியுசட்டெல் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் இருக்கிறார். பின்னையதில் அவர் சட்டம் சார்ந்த தத்துவம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டம் கற்பிக்கிறார். அவருடைய ஆய்வுகள் அரச குற்றங்களை எதிர்கொள்ளும் சட்டங்கள் தொடர்பான விடயங்களின் மீது கவனம் செலுத்துவதாக அமைந்திருக்கின்றன.



**கேகர், ஹாலுக்**

மதிக்கப்படும் கல்விமானும் மத்திய கிழக்கு விவகாரங்கள் தொடர்பான ஆய்வாளருமான இவர், தன், துருக்கியிலான விறுவிறுப்பான அரசியல் செயல்பாடு காரணமாகச் சிறையிடப்பட்டார். குர்திஷ் மக்களுடைய சுய நிர்ணய உரிமையின் ஆதரவாளர் என்ற வகையில் நன்கு அறியப்பட்டவர்.



**உறின்ஸ், மான்பிறெட் ஓ**

பிறெம்மென் பல்கலைக்கழகத்தில் பொதுச் சட்டம், அரசியல் சமூகவியல், சட்டத்தின் சமூகவியல் ஆகிய துறைகள் சார்ந்த பேராசிரியராக இருக்கிறார். ஆபிரிக்காவில், சிறப்பாக, நமிபியா மற்றும் மேற்கு சஹாராவிலான, விடுதலை போராட்டங்களுடனான ஒருமைப்பாட்டுடன் தொடர்பு பட்ட விவகாரங்களில் ஈடுபடுவதைப் பொறுத்தவரை, ஒரு நீண்ட வரலாற்றை கொண்டிருக்கிறார். நமீபிய பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கும் பொழுதே அப் பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் மற்றும் சனநாயகத்துக்கான யுனெஸ்கோ பீடத்தின் தலைவர் பதவியை பல வருடங்களாக வகித்தார்.



**ஜாவிஸ், ஹெலன்**

ஐ.நா. வின் கெமர்ரூச் விசாரணைகளுக்கான அனுசரணை ஊடாக சர்வதேச நிதி உதவிகளைப் பெறும் சிறப்பு கம்போடிய நீதிமன்றமான கம்போடிய நீதிமன்றின் அசாதாரண நடுவர் தனியறை (ECCC) நிறுவப்பட்ட நாளில் இருந்து பொதுமக்கள் விவகாரப் பிரிவின் தலைவராக பணியாற்றியவர். இந்த நீதிமன்றமானது, பொதுவாக கெமர்ரூச் தீர்ப்பு மன்று அல்லது கம்போடிய தீர்ப்பு மன்று என மரபுசாரா முறையில் அழைக்கப்படுகிறது.



### மோல்ரோ, ஜோஸ் எலியாஸ் எஸ்ரீவ்

இவர் ஒரு சர்வதேச சட்டவாளரும் திபெத் தொடர்பான சட்டங்களில் நிபுணருமாவார். திபெத்தில் நிகழ்த்தப்பட்ட சர்வதேச குற்றங்கள் மற்றும் அண்மையில் பர்மாவிலான குற்றங்கள் ஆகிய இரண்டையும் ஆய்வு செய்து உரிமைக் கோரிக்கை வழக்கை தயார் செய்த சட்டவாளர்களில் அவர் பிரதான சட்டவாளர் ஆகும். வலென்ஸியா பல்கலைக்கழகத்தில் சர்வதேச சட்டத் துறைப் பேராசிரியராக இருக்கிறார்.



### மொறீனோ, ஜாவியர் கிறால்டோ

கொலம்பியாவின் இறையியலாளரும் மனிதஉரிமைகள் செயற்பாட்டாளருமான இவர் போகொட்டாவில் இருந்து செயற்படுகிறார். இனப்படுகொலைகளினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை சூழிசைவு சார்பானதாக்குவதில், இவரது பகுப்பாய்வின் ஆழம் காரணமாக நன்கு அறியப்பட்டவராக இருக்கிறார். நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தினுடைய உதவித் தலைவராக அவர் இருக்கிறார்.



### மோர்ட்டே கபிரியேல் டெலா

மிலான் கத்தோலிக்க பல்கலைக்கழகத்தில் சர்வதேச சட்டத்துறை பேராசிரியராகவும் சர்வதேச அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் விதிகளில் இணைப் பேராசிரியராகவும் இருக்கும் இவர், ஜெனிவாவின் Academie de droit international humanitaire et des droits de l'homme பீடாதிபதியாகவும் (2007—2008) முன்னைய யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்துக்கான வழக்கு தொடுனர் அலுவலகத்துக்கான சட்டவரைஞராகவும் (2000) ருவாண்டாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தின் ஆலோசகராகவும் (ICTR) (2003-004) பணியாற்றியுள்ளதோடு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை அமைப்பதற்கான அரசின் குழுவிலும் உறுப்பினராக இருந்தார் (1998).



### ரொக்னோனி, ஜியான்னி

நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் - ரோம் - இன் செயலாளர் நாயகம்.



### ருவெற்றர், ஒயிஸ்ரெய்ன

நோர்வேயை சேர்ந்த இவர் ஒரு சர்வ தேச சட்டத் துறை கல்விமானாகும். பிலிப்பைன்சிலான சட்டத்துக்கு புறம்பான கொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் உறுப்பினராகவும் இவர் இருக்கிறார்.



### ஸார்ணி, மோங்

பர்மிய சனநாயக செயற்பாட்டாளரான இவர், 1995இல் சுதந்திர பர்மா கூட்டணியைத் நிறுவினார். றோஹிங் முஸ்லிம்களுக்கு எதிரான, அதிகரித்த பாகுபாடு மற்றும் வன்செயல்களை எதிர்க்க, எந்த நிபந்தனைகளுமின்றி முன்வந்த, சில பர்மிய புத்திசீவிகளுள் இவரும் ஒருவர் என்பதோடு, இந்த விவகாரம் தொடர்பாக ஆங் ஸான் ஸூ சீயை பகிரங்கமாக கண்டித்தவராகவும் இருக்கிறார்.

## 1. நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் தகுதி

நிரந்தர மக்கள் தீர்ப்பாயமானது (PPT), ஒரு சர்வதேச கருத்துக் கூறல் தீர்ப்பாயமாகும். அது எந்த அரசு அதிகார பீடத்திற்கும் உட்படாமல் சுயாதீனமாக செயற்படுகிறது. மனித உரிமைகள் மீறல் மற்றும் பல்லின மக்களின் உரிமைகள் தொடர்பான சம்பவங்களை அது ஆராய்கிறது.

மக்களினுடைய விடுதலை மற்றும் உரிமைகளுக்கான லெலியோ பாஸ்ஸோ சர்வதேச நிறுவனத்தினால் ஆதரவளிக்கப்படும் PPT ஆனது 1979 யூன் மாதத்தில் 31 நாடுகளைச் சேர்ந்த, பரந்த ஒரு வீச்சில் அடங்கிய, சட்டத்துறை வல்லுனர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஏனைய கலாச்சாரம் மற்றும் சமூக தலைவர்களால் இத்தாலியின் பொலொக்னோ நகரில் உருவாக்கப்பட்டது.

வியட்னாம் (1966-67) மற்றும் லத்தீன் அமெரிக்காவிலான (1974-1976) சர்வாதிகாரங்கள் தொடர்பான றஸ்ஸலின் தீர்ப்பாயத்தின் வரலாற்று சிறப்பான பட்டறிவுகளில் PPT வேர்கொண்டுள்ளது. PPT யினுடைய முடிவுகளின் முக்கியத்துவமும் வலுவும், அதனால் நம்பகத் தன்மை வழங்கப்படும் காரணங்கள் மற்றும் வாதங்களின், அறநெறிரீதியான கனத்திலும் அதைப் போலவே தீர்ப்பாய உறுப்பினர்களின் நேர்மை மற்றும் மதிப்பீடு செய்யும் இயலுமையிலும் தங்கியிருக்கின்றன.

புவிசார் அரசியல் காரணங்கள் அல்லது வேறு உள்ளார்ந்த நோக்கங்களால், அரசுகளும் சர்வதேச அமைப்புகளும் இனக் குழுமங்களின் உரிமைகளைப் பாதுகாக்க தவறினால், மக்களினுடைய அதிகாரத்தை மீளப்பெற்றுக் கொடுப்பதே, நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் நோக்கமாகும். இத் தீர்ப்பாயத்தினால் ஆராயப்படும் முறைப்பாடுகள், பாதிக்கப்பட்டவர்களால் அல்லது அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தனிநபர்கள் அல்லது குழுக்களால் முன்வைக்கப்படும். PPT யானது குறித்த சம்பவத்தோடு தொடர்புபடும் தரப்பினரை ஒன்றாக அழைத்து, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு, அவர்களது தரப்பு வாதங்களை முன்வைக்கும் வாய்ப்பை வழங்குகிறது. ஒரு நிரந்தரமான பட்டியலில் அடங்கியிருக்கும் உறுப்பினர்கள் மற்றும் தங்களுடைய தகைமைகள் மற்றும் நேர்மையின் காரணமாக அங்கீகாரம் பெற்றிருக்கும் தனிப்பட்ட நபர்கள் முதலியோரிலிருந்து, உறுப்பினர்களை ஒன்றிணைப்பது மூலம் ஒவ்வொரு சம்பவங்களுக்குமென, வேறு வேறு தீர்ப்பாய நீதியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

1979 யூனில் இருந்து இற்றை வரைக்குமான காலப் பகுதியில் PPT ஆனது கிட்டத்தட்ட 40 அமர்வுகளை நிகழ்தியிருப்பதோடு, அவற்றினுடைய பெறுபேறுகளையும் தீர்ப்புகளையும் www.internazionaleleliobasso.it இல் பெற்றுக் கொள்ளமுடியும்.

சிறிலங்கா தொடர்பான இந்த இரண்டாவது அமர்வுக்கென, PPT யானது, பரந்து பட்ட வீச்சிலான அரச சார்பற்ற நிறுவனங்களால் 2012 டிசம்பரில் முதலில் அணுகப்பட்டது. சர்வதேச ஊடகங்களின் கவனத்திலிருந்து தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை "மறையச் செய்தல்" உடன் இணைந்திருக்கும், இவ்விடயம் தொடர்பான சர்வதேச நிறுவனங்களின் கணிசமான அலட்சியங்களின் அடிப்படையில், PPT கொண்டிருக்கும் குறிப்பான தகைமையானது அவசியமானது என கருதப்பட்டது.

PPT யினுடைய அமர்வொன்றைக் கூட்டும்படியான வேண்டுகோளுக்கு ஆதரவான ஆவணமானது மகாநாட்டுக்கு முந்திய மாதங்களின் போது அனுப்பப்பட்டது. பிறெம்மனில் இடம்பெறவிருந்த அமர்வுகளின் செயல்முறைகள் மற்றும் பங்கு கொள்வதற்கான அழைப்பு முதலியவை தொடர்பான அறிவித்தல்கள் 12 நவம்பர் 2013 அன்று பெர்லினிலும் ரோமிலும் இருக்கும் தூதரகங்கள் ஊடாக சிறிலங்கா, இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சிய அரசுகளின் பிரதிநிதிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

PPT இனுடைய நிரந்தர விதிகளின்படியும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருப்பதன் படியும் தங்கள் தங்கள் நிலைப்பாட்டை முறைப்படி முன்வைக்கும் படியான வேண்டுகோளுக்கு, ஒரு காத்திரமான பதில் வினையொன்று இல்லாத படியால், PPT யானது குற்றம் சாட்டப்பட்ட நான்கு அரசுகளினதும் நோக்குகளை முன்வைப்பதற்கென இணக்கப்பாட்டாளர் ஒருவருக்கு ஆணை வழங்கியது. PPT, இன் இந்தப் பணியானது ஜெர்மனியின் பிறெம்மெனில் உள்ள புனித பவுல் ஜெமின்டேயின் வசதிகளில் இடம்பெற்றது.

பாதுகாப்பு காரணங்களுக்காக, சில விவரமான கண்கண்ட சாட்சியங்களை PPTயின் தீர்ப்பாயத்தினர், தனியறையில் வைத்து (மூடப்பட்ட அமர்வுகள்) கேட்டறிந்தனர்.

இந்த அமர்வுகளுக்கான ஒழுங்கமைப்பு ரீதியான, நிதிரீதியான தேவைகளை நிறைவு செய்த வளமூலங்கள், பிரதானமாக, இந்த முன்முயல்வுக்கு ஆதரவு வழங்கும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்களது தன்னார்வ பணிகளாலேயே வழங்கப்பட்டது என்பதை PPT உறுதிப்படுத்துகிறது.

வாய் மூலமான சாட்சியம் பெறுதல் மற்றும் குறுக்கு விசாரணைகள் முதலியவற்றுக்கு அப்பாலானவையும் PPT க்கு சமர்பிக்கப்பட்டு அவர்களால் ஆராயப்பட்டவையுமான எழுத்து மூலமான மற்றும் காணொளி-வழி ஆவணப்படுத்தல்கள், பின்னிணைப்பு 2இல் பட்டியலிடப்பட்டிருப்பதோடு இவற்றை ptsrilanka.org இணையத்தளத்தில் பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

## 2. ஜனவரி 2010 இல் டப்ளினில் நடைபெற்ற சிறிலங்கா தொடர்பான 1வது அமர்வின் தீர்ப்பு.

2010 ஜனவரியில் டப்ளினில் நடைபெற்ற சிறிலங்கா தொடர்பான 1வது அமர்வில், சிறிலங்கா அரசால் போர் குற்றங்களும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்களும் புரியப்பட்டிருப்பதும் இந்த தீர்ப்பு வழங்கப்பட்ட காலம் வரை அவை தொடர்ந்து கொண்டிருப்பதும் உறுதிப்படுத்தப்பட்டன.[1]

1வது தீர்ப்பாயம் தன் அறிக்கையிலே, இனப்படுகொலை பற்றிய குற்றச்சாட்டு இந்த தீர்ப்பாயத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையுள் அடக்கப்படாவிட்டாலும், சாட்சியமளித்த அமைப்புகளில் சிலவும் தனிநபர்களும் சிறிலங்காவின் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைகள் நிகழ்ந்தன அல்லது நிகழ்திருக்கலாம் என்பது அங்கீகரிக்கப் படவேண்டும் என வலியுறுத்தினார்கள். போர்க்குற்றங்கள் மற்றும் மனித இனத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளுள் இனப்படுகொலை குற்றச்சாட்டை சேர்க்கலாம் என நிர்ணயிப்பதற்கு போதுமான சாட்சியங்கள் தீர்ப்பாயத்தின் முன் வைக்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[2]

எனவே டப்ளின் தீர்ப்பாயமானது இது தொடர்பான தன் முடிவை பின்வருமாறு தெரிவித்துள்ளது: “முன்வைக்கப்பட்ட உண்மைகளில் சிலவற்றை அவை இனப்படுகொலை செயற்பாடுகளாக இருப்பது சாத்தியமானதா என நிர்ணயிக்கும் விதத்தில் முழுமையாக ஆராயப்படவேண்டும். இவ்வாறான செயற்பாடுகளில் பின்வருவன அடங்குகின்றன.

தமிழ் சமூகத்தின் முக்கிய உறுப்பினர்கள் (ஊடகவியலாளர்கள் மருத்துவர்கள், அரசியல்வாதிகள்) மீது, லெம்கின் சொல்லியிருப்பது போல் அந்த குழுவினுடைய வாழ்வை தொடர்வதற்கான ஆதாரங்களை (இச்சந்தர்ப்பத்தில் தமிழ்குழு ) அழிப்பதற்கென அரசின் இணக்கப்பாட்டுடன் சிறிலங்கா ஆயுதப்படையினராலும் துணைப்படையினராலும் நிகழ்த்தப்பட்ட தமிழ் தனிநபர்களின் வலிந்த காணாமல் போதல்களை காட்டும் சாத்தியம் கொண்ட கோலங்கள் மற்றும் உள்ளக இடப்பெயர்வுக்குள்ளானோர் முகாம்களில் உள்ள தமிழ் மக்களின் நிலைமைகள் தொடர்ந்தும் நிலவுதல், சூட்டுச் சம்பவங்கள், திட்டமிட்ட பாலியல் வல்லுறவுகள்

---

1. சிறிலங்கா தொடர்பான மக்கள் தீர்ப்பாயம் திருத்துவக் கல்லூரி டப்ளின் அயர்லாந்து 14—16 ஜனவரி 2010 ரோம்: நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் (2010)

2. மேலே உள்ள நூல், பக்: 18—19

மற்றும் வலிந்த காணாமல் போதல்கள், நாட்டில் தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளின் உட்கட்டமைப்புகளின் பரவலான அழிப்பு, தமிழ் மக்களின் தொடர்ச்சியான வாழ்வுக்கு தேவையான உணவு, மருந்துகள் மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகள் இல்லாமை."

டப்ளின் தீர்ப்பாயம் பின்வருமாறு அதனது முடிவைத் தெரிவித்தது:

"மேலே பட்டியலிடப்பட்டிருக்கும் உண்மைகள் நிகழ்காலத்துக்குரியவை தானெனினும் இவற்றைக் குற்றச்சாட்டுகளாக உள்ளடக்கப் போதுமான சான்றுகள் எமக்கு கிடைக்கவில்லை. எனினும் இனப்படுகொலை நிகழ்ந்ததற்கான சாத்தியம் பற்றிய விசாரணைகள் தொடரப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை தீர்ப்பாயம் ஏற்றுக்கொள்கிறது."[3]

மூன்று வருடங்களாக சான்றுகள் சேகரிப்பதைதொடர்ந்த பின்னும் சிறிலங்காவில் உள்ள ஈழத் தமிழ் குடிமக்களினுடைய பாரதூரமான நிலைமைகள் தொடர்ந்தும் நிலவுவதாலும் சிறிலங்காவிலான அமைதிக்கான அயர்லாந்து மன்றம் மற்றும் Internationaler menschenrechtsverein - Bremen ஆகியவை சிறிலங்காவில் நிகழ்ந்த இனப்படுகொலைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள், அவற்றை அங்கே நிகழ்த்துவதில் வேறு நாட்டு அரசுகள் வகித்திருக்கக்கூடிய பங்கு முதலியவை பற்றி ஆராயவென சிறிலங்கா தொடர்பான PPTஇன் இரண்டாவது அமர்வுக்கு வேண்டுகோள் விடுத்தன.

3. மேலே உள்ள நூல், பக். 19.

## 3. முறைப்பாடுகள்

சிறிலங்காவிலான அமைதிக்கான அயர்லாந்து மன்றம் மற்றும் Internationaler menschenrechtsverein, Bremen ஆகியவை, தீர்ப்பாயம் கருத்தில் எடுப்பதற்கென பின்வரும் குற்றச்சாட்டுகளைச் சமர்பித்தன.[4]

"1 சிறிலங்கா தீவில், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள்மீது ஒரு இனப்படுகொலை நிகழ்த்தப்படுகிறது. இந்த இனப்படுகொலை கட்டம் கட்டமாக நிகழ்ந்திருப்பதுடன், தொடர்ந்து கொண்டுமிருக்கிறது.

**"2. சிறிலங்கா அரசும் அதனுடைய ஆயுதப்படைகளும் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை குற்றத்தை நிகழ்திய குற்றவாளிகளாகும்.**

சிறிலங்கா அரசினால் நிகழ்த்தப்படும் பன்முகப்படுத்தப்பட்ட வலிந்த தாக்குதல்கள், மக்களை அவர்களது மண்ணிலிருந்து களைந்தெறிவதனை நோக்கமாக கொண்டிருப்பதானது, வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் தேசிய வாழ்வின் அத்திவாரங்களை அழிக்கும் உத்தேசத்தை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. சிறிலங்கா அரசினுடைய இந்த இனப்படுகொலை ரீதியான உத்தேசமானது, தீவிலுள்ள தமிழர் தாயகப்பகுதிகள் மீது சிங்கள ஆட்சியை ஏற்படுத்தும் உள்நோக்கத்தை அடிப்படையாக கொண்டுள்ளது.

**"3. தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை நிகழ்த்திய குற்றத்தில் பங்கு கொண்ட வகையில் பிரித்தானிய அரசும் குற்றவாளிதான்**

குடியேற்ற வாத ஆட்சிக்காலத்தின் போது, கடல் வழிகளின் மீதும் இந்தியாவிலான தமது ஆட்சியின் மீதும் கட்டுப்பாட்டை பேணுவதற்கான கேந்திர முக்கியத்துவ நிலையமாக, இலங்கையை, பிரித்தானிய அரசு கருதியது. திருகோணமலையில் உள்ள படைத்துறை ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஆழ்கடல் துறைமுகமானது, (உலகத்திலேயே சிறந்த துறைமுகம் என லோர்ட் நெல்சனால் அழைக்கப்பட்டது.) தமிழர்கள்

---

4. டப்பிளின் தீர்ப்பாயம் இனப்படுகொலை பற்றியும் அதில் சர்வதேசம் வகித்த பங்கு பற்றியும் தொடர்ந்து ஆராய்கிறது சிறிலங்கா தொடர்பான தீர்ப்பாயம்-அமர்வு 2 பிறெம்மன், சிறிலங்காவிலான அமைதிக்கான அயர்லாந்து மன்றம் மற்றும் Internationaler menschenrechtsverein.Bremen ஒக்ரோபர் 2013 (இப்பகுதி குற்றச்சாட்டுப் பத்திரத்திலிருந்து நேரடியாக மேற்கோள் காட்டப்படுகிறது)

குடியிருக்கும் தீவின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ளது. அவற்றுக்கிடையே இருந்த புவியியல்சார் அண்மைத் தன்மை காரணமாக இந்தியாவும் இலங்கையும் நெருக்கமானதும் வலுவானதுமான கலாச்சார மற்றும் அரசியல் பிணைப்புகளை கொண்டிருந்தன. இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயான வரலாற்று பிணைப்பானது, தற்பொழுது இத் தீவில் வாழும் தமிழ் மக்களுக்கும் தென் இந்திய தமிழ் குடிமக்களுக்கும் உள்ள உறவுகள் மூலம் எடுத்துக் காட்டப்படுவதாக இருக்கின்றது. பிரித்தானியரைப் பொறுத்தவரை, இந்தத் தீவை மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த சொத்தாக மாற்றும் அவர்களது குறியிலக்குக்கு அச்சுறுத்தல் விடுப்பவையாக இந்தக் காரணிகள் இருந்தன.

இந்தச் சூழ்நிலை அமைவில், இத்தீவில் இருக்கும் மக்களை, இந்திய மக்களிடமிருந்து பிரிக்கும் விதத்திலான, தனித்துவமான அடையாளத்தை கொண்ட, ஒருங்கிணைக்கப்பட்ட கட்டமைப்பு அலகு ஒன்றை உருவாக்குவதன் மூலம், இந்த படைத்துறை நிலையானது, தீவாக இருப்பதன் காரணமாக கொண்டிருக்கும் புவியியல் ரீதியான தனிமைப் படுத்தலை, இன்னும் அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை பிரித்தானியர் முன்னுணர்ந்தனர். இந்த முக்கியமான பணியை பூர்த்தி செய்ய “தெரிந்தெடுக்கப்பட்ட மக்களாக” சிங்களவர்கள் இருந்தார்கள். 1833ம் ஆண்டிலே வலிந்த இணைப்பொன்றின் மூலம், மரபுவழி தமிழ் தாயக நிலங்களை, சிங்களப் பகுதிகளுடன் இணைப்பதன் மூலம், ஒருங்கிணைத்த கட்டமைப்பொன்றை பிரித்தானியர் ஏற்படுத்தினார்கள். இவ்வாறாக, சிங்கள மேலாதிக்கம் கொண்ட ஒற்றையாட்சி முறைக்கான அடிப்படையை உருவாக்கினார்கள்.

இதன்பின்னர் வரலாற்று எழுத்தாண்மை, தொல்பொருளியல் மற்றும் மானிடவியல் துறைகளில் அவர்கள் மேற்கொண்ட பணிகளின் மூலம் இந்தியாவை “ஆக்கிரமிப்பாளர்”ஆகவும் தமிழர்களை “ஆக்கிரமிப்பாளர்களின் வழித் தோன்றல்கள்” ஆகவும் நோக்கும் புதிய “சிங்கள பௌத்த ஆரிய” தேசிய அடையாளம் ஒன்றை பிரித்தானியர் உருவாக்கினார்கள். கடலுக்கப்பால் இந்திய மக்களை கொடூரமாக நடத்தியமையோடு ஒப்பிடும்போது, கூர்மையாக முரண்படுகிற விதத்தில், பெரும்பான்மை உணர்வு விழிப்புடன் கூடிய சிங்கள அடையாளத்தை மனங்களில் பதிக்கும் விதத்தில், முழுத் தீவளாவிய குடிசனத்தொகை மதிப்பீட்டை நிகழ்தி, அதனுடன் இணைந்ததாக வயது வந்தோர் அனைவருக்குமான வாக்குரிமையையும் வழங்கினார்கள். ஒரு இனம் என்ற வகையில், தமது கூட்டு உரிமைகளைப் பேணக்கூடிய அரசியலமைப்பு ரீதியான காப்புகளை கோரி, திரும்ப திரும்ப தமிழர்கள் விடுத்த வேண்டுகோள்களுக்கு மத்தியிலும், பிரித்தானியர் சிங்கள மேற்தட்டு வர்க்கத்தினரிடம் அதிகாரத்தை கையளித்து தமிழர்களை “அன்னிய அச்சுறுத்தல்” ஆகக் கருதும், புதிதாக உருவாக்கப்பட்ட, சிங்களவர் மேலாதிக்கம் கொண்ட அரசின் கைகளில் அவர்களை விட்டுச்சென்றனர். ஒற்றையாட்சி கட்டமைப்பும் சிங்கள பௌத்த ஆதிக்க வெறியும் அத் தீவின் வடக்கு மற்றும் கிழக்கில் வாழ்ந்த, தமிழ் மக்களுக்கு எதிரான இனஒழிப்பு செயல் முறைக்கான, அடிப்படையை உருவாக்கிய இரண்டு அடிப்படை ஆக்கக்கூறுகளாக அமைந்தன. தங்களது மூலோபாய கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது தங்களுடைய நடவடிக்கைகள் இன ஒழிப்பை உருவாக்கும் நிகழ்தகவு பற்றி, எந்தக் கவலையுமில்லாத அசட்டை மனப்பான்மையுடன் செயல்பட்டார்கள். இதன்மூலம் இனஒழிப்பை நிகழ்த்துவதற்கான செயல் நோக்கத்தை அவர்கள் சிங்களவர்களுக்கு உருவாக்கி விட்டார்கள்.

### 4. தமிழ் மக்களுக்கு எதிரான இனஒழிப்பில் பங்கெடுத்த அமெரிக்கா குற்றவாளி

2ம் உலகப் போருக்குப்பின், இப் பிராந்தியத்தின் மேலாதிக்கமான சக்தி என்ற வகையில், பிரித்தானியாவை அமெரிக்கா மாற்றீடு செய்திருந்தது. பிரித்தானியாவின் பங்காளியாக செயற்பட்ட அமெரிக்கா, இத்தீவின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு, ஆதரவளித்து பேணும் ஈடுபாட்டை, அமெரிக்கா மேம்படுத்தி பேணியது. 70 களிலும் 80களிலும் இன ஒழிப்பு செயல்முறைக்கு, தமிழ்ஈழம் அமைப்பதற்கான சுயநிர்ணய உரிமையை கோரி தமிழர்கள் தங்கள் அரசியல் ரீதியான எதிர்ப்பை வெளிப்படுத்திச் சவால்விட்டபோது, அமெரிக்காவின் ஈடுபாடும் ஆழமானதாக ஆகியது. தீவின் ஒற்றையாட்சி முறை கட்டமைப்பிற்கு, தமிழர்களின் எதிர்ப்பியக்கம் பாதகமானதாக ஆகியபொழுது, அத்தீவில் நிகழ்ந்த இனஒழிப்பு செயல்முறையில், அமெரிக்கா, கட்டுப்படுத்தும் விதத்திலான பங்கை எடுத்தது. படைத்துறை மற்றும் அரசியல் ஆதரவுகளை வழங்குவதன் மூலம் அதனை

செய்தது. தான் அளிக்கும் ஆதரவுகள், இனஒழிப்பு செயல் முறையை தொடரவே பயன்படுத்தப்படும் என்று நன்கு தெரிந்துகொண்டே, அதனைச் செய்தது. 2002 பெப்ரவரியில், சர்வதேச ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதான செயல் முறைகளின் போது, அமெரிக்காவானது, இங்கிலாந்தின் உதவியுடன், சிங்கள அரசுக்கும் உண்மையானதை ஒத்த தமிழ் நிர்வாகத்துக்கும் இடையேயான, வலுச்சமநிலையை குழப்புவதற்கு, திட்டமிட்ட ரீதியிலான, தொடர் நகர்வுகளை எடுத்தது. இனஒழிப்பு செயல்முறைகளால் பாதிக்கப்பட்டோருக்கு ஒரு இடைவரவு நிம்மதியை கொடுத்த, பேச்சு வார்த்தை செய்முறையை நாசமாக்குவதில் வெற்றியும் பெற்றது. அமெரிக்க, ஐக்கிய இராச்சிய நகர்வுகள் போர் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கி, தமிழ் எதிர்ப்புகள் பௌதீக ரீதியாக ஒழித்துக்கட்டப்படும் வரை, இன ஒழிப்பு ரீதியான பெறுபேறுகளுடன் தொடர்வதையும் உறுதி செய்தன. சிறிலங்கா அரசு மற்றும் அதன் முதல் நிலை ஆதரவளிப்பவர்களினதும் செயற்பாடுகளை தடுத்து நிறுத்தும் இயலுமையை, இதுவரை காட்டிவந்த, அரசியல் பௌதீக சக்தி அழிக்கப்பட்டு விட்டதுடன், இந்த இனஒழிப்பு செயல்முறையானது, மீள ஆரம்பிக்கப்பட்டிருப்பதோடு, முன்னெப்போதும் இல்லாத விசைவேகத்துடன் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதன் மூலம், பிரதான குற்றவாளியின் குற்றப்பழியில் இருந்து, அமெரிக்கா இரவல் பெற்றுக்கொண்டதோடு, தமிழ் மக்களுடைய தேசிய அத்திவாரத்தை அழிக்கும் உத்தேசத்திலும் பங்கு கொண்டது, தங்களுடைய உலகளாவிய படைத்துறை வல்லமை விரிவாக்கத்தின் ஒரு அங்கமாக, மூலோபாய ரீதியான சொத்து என்ற வகையில், அத்தீவின் கட்டுப்பாட்டை பெறுவதே, அமெரிக்காவின் உள்நோக்கமாக இருந்தது.

**5. தமிழ் மக்களுக்கு எதிரான இனஒழிப்புக் குற்றத்தில் பங்கெடுத்த வகையில் இந்திய அரசும் குற்றவாளிதான்.**

1980 களின் முற்கூறுகளில், மூலோபாய ரீதியான சொத்து என்ற வகையிலே, தமிழ் மக்கள்மீது கட்டுப்பாட்டை பெறும் விதத்தில், த.வி.புலிகளுக்கு எதிராக இந்தியா தலையீடு செய்தது. இதன் பெறுபேறாக 12000 தமிழ் மக்கள் உயிரிழந்தனர். 90 களிலே இந்தியாவானது, ஒரு கனிஷ்ட பங்காளர் என்ற வகையிலே, அமெரிக்காவுடனான, மூலோபாய ரீதியான கூட்டில் இணைந்து கொண்டதோடு, சிறிலங்கா தொடர்பான தனது மூலோபாய கொள்கை அணுகு முறையை அமெரிக்காவின் போர் வாய்பாட்டிற்கு, அதிகரித்த அளவில் கீழ்படுத்தியது. இந்த வகையில் தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒழிப்பு செயல் முறையில் பங்காளராகவும் மாறியது.

## 4. எதிர் தரப்பு வாதம்

தீர்ப்பாய செயற்பாடுகளில் பங்கு கொள்ளும்படி விடுவிக்கப்பட்ட அழைப்பை அலட்சியம் செய்வதென குற்றம் சாட்டப்பட்ட நான்கு அரசுகளும் முடிவு செய்ததன் காரணமாக, இக்குற்றச்சாட்டுகள் எழுப்பப்படும்வரை, பகிரங்கமாக குறிப்பிடப்பட்ட அதேவிதத்தில், இந்த விடயத்தில் தொடர்புபட்ட நிலைமைகள் தொடர்பாக, அந்தந்த நாடுகளின் நோக்குகளை சமர்பிக்கும்படி, ஒரு இணக்கப்பாட்டாளரை தீர்ப்பாயம் கேட்டுக்கொண்டது. நடுநிலை அறிவுரையாளராக செயற்பட்ட குறித்த இணக்கப்பாட்டாளரும், டப்ளின் திரித்துவக் கல்லூரியிலுள்ள சர்வதேச சமாதான கற்கைகளின் உதவி விரிவுரையாளருமான கலாநிதி அயன் அற்ரக், அந்த நாடுகளுடைய நிலைப்பாடுகளுடைய சுருக்கங்களை முறையே பின்வருமாறு தந்திருக்கிறார்.

**4.1. சிறிலங்காஅரசின் நிலைப்பாடு**

1. த.வி. புலிகளிடமிருந்து வடக்கு கிழக்கை மீட்கவே போர் நடத்தப்பட்டது (பாதுகாப்பு அமைச்சு இணையத்தளம்)

2. ஏற்பட்ட எந்த ஒரு குடிசார் ஆளிழப்பும் போரின் உடனிகழ்வாகும். திட்டமிட்டு செய்யப்பட்டதல்ல (கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) அறிக்கை

3. த.வி. புலிகள் வெளியேற்றப்பட்ட இடங்களில் மீளக்குடியமர்த்தல் இடம்பெறுகிறது (சிறிலங்கா சனாதிபதியின் விசேட தூதுவர் ஐ.நா. மனித உரிமைகள் கவுண்சில் 2012, 2013, இன் முன்னால் வெளியிட்ட கூற்று)

4. வடக்கு கிழக்கில் அரசு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது. அவற்றிலிருந்து தமிழர்கள் நன்மை பெறுவார்கள்.

5. எந்த ஒரு விசாரணையும் நாட்டின் உள்ளேயே மேற்கொள்ளப்படலாம். எனவே சர்வதேச விசாரணை ஒன்றுக்கான தேவை இல்லை.

**4. 2. இந்திய அரசின் நிலைப்பாடு**

(இந்திய நாடாளுமன்றத்தில் 2013 ஒகஸ்ற் 04ம் திகதியன்று வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா வெளியிட்ட கூற்று)

1. த.வி. புலிகள் அமைப்பு இந்திய சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட அமைப்பாகும்.

2. போரின் இறுதிக்கட்டங்களில் நிகழ்ந்த வன்செயல்கள் தொடர்பான சுயாதீனமான விசாரணையை சிறிலங்கா அரசு ஆரம்பிக்கவேண்டும்.

3. வடக்கு கிழக்கு மாகாணசபை தொடர்பான அரசியலமைப்புக்கான திருத்தமான, 13வது திருத்தம் முழுஅளவில் நடைமுறைப் படுத்தப்படவேண்டும். எந்த தீர்வும் ஒன்றிணைந்த, பிரிக்கப்படாத சிறிலங்காவுக்குள் இருப்பதாக அமையவேண்டும்.

### 4.3. ஐக்கிய இராச்சியத்தின் நிலைப்பாடு

(ஐக்கிய இராச்சிய அரசினுடையவும், வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகம், 2013 நவம்பரில் சிறிலங்காவில் இடம்பெற்ற பொதுநலவாய அரசுத் தலைவர்கள் மகாநாட்டில் டேவிட் கமரூனால் முன்னரே தெரிவிக்கப்பட்ட கூற்றுகளிலிருந்து)

1. த.வி. புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு.

2. 2014 மார்ச் அளவிலே, சிறிலங்கா அரசு ஒரு சுயாதீனமான விசாரணையை ஆரம்பிக்க வேண்டும். அந்த அரசு அப்படி செய்யாவிட்டால், ஒரு சுயாதீனமான சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். (ஐ.நா. வின் அனுசரணையின் நடத்தப்படுவது விரும்பத்தக்கது.)

3. எந்த தீர்வும் ஒன்றிணைந்த, பிரிக்கப்படாத சிறிலங்காவுக்குள் இருப்பதாக அமையவேண்டும்.

### 4.4 அமெரிக்காவினுடைய நிலைப்பாடு.

(இராசாங்க திணைகளத்தின் பத்திரிகை செய்தி வெளியீடு மற்றும் இராசாங்க திணைகளம் 2009ம் ஆண்டில் மக்களவைக்கு வழங்கிய அறிக்கை)

1. த.வி.பு. ஒரு பயங்கரவாத அமைப்பு. போர் முடிவுற்றதை நாங்கள் வரவேற்கிறோம்.

2.. 2009 இல் இடம்பெற்ற போரின் இறுதிக் கட்டங்களில் இடம் பெற்ற வன்செயல்கள் தொடர்பாக, சுயாதீனமான உள்ளக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

3. LLRC இன் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப் படவேண்டும்.

4. எந்த தீர்வும் ஒன்றிணைந்த பிரிக்கப்படாத சிறிலங்காவுக்குள் இருப்பதாக அமையவேண்டும்.

# 5. தீர்ப்புகள்

## 5.1. இனஒழிப்புக் குற்றச்சாட்டு

### 5.1.1 **இன ஒழிப்பு என்பது, ஏன்?**

இந்த தீர்ப்பாயம் விளக்கம் கொடுக்கவேண்டிய பிரதான கேள்விகளுள் ஒன்றாக, தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா அரசு போர்க் குற்றங்களையும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்களையும் புரிந்திருக்கிறது என, 2010 ஜனவரியில் டப்ளினில் இடம்பெற்ற PPT இன் முதலாவது அமர்வு கண்டறிந்த பின்னும், இந்த விவகாரத்தில் தொடர்புபட்ட அமைப்புகள் (மற்றும் அந்த செயல்முறைகளினாலும் பாதிக்கப்பட்டவர்கள்), இரண்டாவது அமர்வை ஏன் கேட்கிறார்கள்? என்பது இருக்கிறது

பாதிக்கப்பட்டவர்கள், தாங்கள் அடைந்த பாதிப்புகளை இனப்படுகொலை என வகைப்படுத்துவதால், அது சர்வதேச மற்றும் தேசிய அமைப்புகள் எடுக்கும் சாத்தியம் கொண்ட நடவடிக்கைகள்மீது, எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாதெனினும் அதில் உள்ள முக்கியத்துவம் என்ன?

வேறு பல வரலாற்று ரீதியான சூழ்நிலைகளில் எழுவதை ஒத்த, இந்த கேள்வியைப் புரிந்துகொள்வதற்கு, இனஒழிப்பு ரீதியான சமூகசெயற்பாடுகள், தனிநபர்களை மட்டும் அழிப்பதற்கான முயற்சிகள் அல்ல. இனஒழிப்பு என்பது ஒரு குழுமத்தினுடைய அடையாளத்தை அழித்தல், அதற்கு அனுபவமாகக் கூடியவற்றிலிருந்தும் வரலாற்றில் இருந்தும் அன்னியப்படுத்துதல், அது தனது சொந்த கடந்த காலம், நிகழ்காலம், மற்றும் எதிர்காலங்களின் மீது கொண்டிருக்கும் கட்டுப்பாட்டை களைவதற்கு முயற்சிசெய்தல், ஆகியவை அடங்கியதாகும்.

இன ஒழிப்பினுடைய கட்டங்கள் ஒரு தொடர் வரிசையை உருவாக்குகின்றன. அதனுடைய மைய இலக்காக ஒரு குறிப்பிட்ட இனக் குழுமத்தினர் வரித்துக்கொண்டிருக்கும், வாழ்கை முறையை, அழிப்பதன்மூலம், இனஒழிப்பு நிகழ்கின்ற சமூகத்தை உருமாற்றம்செய்து, அந்த வகையில் சமூகத்தின் எஞ்சிய பகுதிக்குள் நிலவும் சமூக உறவுகளை, மீளஒழுங்கமைத்து இருக்கிறது. அதற்கு பலியானவர்களின் நினைவுகள் "காணாமல்போவது" மேற்படி தொடரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஒரு முயற்சியாகும்

சிறிலங்காவினுடைய தமிழ்மக்கள், அட்டூழியங்களுக்கு உள்ளாக்கப்பட்டு தொல்லை கொடுக்கப்பட்டு, தனிநபர் என்று இல்லாமல், அதற்கென்று ஒரு அடையாளத்தை கொண்டிருக்கிற குழுமமாக கொல்லப்பட்டார்கள், என்பதை ஏற்றுக்கொள்வதானது, அடையாளத்தை அழிப்பது என்ற, இனஒழிப்பு ரீதியான குறியிலக்குகளை எதிர்கொள்ளும் எந்த முயற்சிக்கும், அடிப்படையானதாகும் என்பதோடு, எந்த ஒரு மக்களினது சுயநிர்ணய உரிமையை செல்லுபடியான தாக்குவதற்கான ஒரு வழியாகவும் அது இருக்கிறது.

### 5.1.2. ஒரு சமூக செய் முறையாக இன ஒழிப்பு

ஒரு சமூகரீதியான செய்முறை என்ற வகையில் இனஒழிப்பை, அதனை விட குறைந்த தீவிரம் கொண்ட தீடீரென்று தானாக நிகழ்கின்ற அல்லது குறைந்த முன் உத்தேசத்துடன் நிகழ்கின்ற கொலைகள் அல்லது பெரும் தொகையில் கொல்லுதலில் இருந்து வேறுபடுத்திக் காட்டுபவையாக, அதனுடைய ஒழுங்கமைப்பு, பயிற்சி, சட்டபூர்வமாக்கல், கருத்தொருமைப்பாடு முதலியன இருக்கின்றன. சமூக செயல்பாடுகள் என்பவை, தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருப்பவையாகவும் நிரந்தரமான நிர்மாணத்தின் கீழிருப்பவையாகவும் இருக்கின்றன.

இனஒழிப்பு எண்ணக்கருவின் தோற்றுனரான றபாயேல் லெம்கின் "சுருக்கமாக சொல்வதானால் இனஒழிப்பு என்பது, ஒடுக்கப்படும் இனத்தின் தேசிய அடையாளத்தை அழித்து, ஒடுக்குபவரின் தேசிய அடையாளத்தை ஒடுக்கப்படுபவர் மீது திணிப்பதாகும்"[5] என்று கூறியிருக்கிறார்.

இனஒழிப்பை ஒரு செயல்வகை என்ற வகையில் நாம் பகுப்பாய்வு செய்தால், சில செயற்பாடுகள் தம்மட்டில் இனஒழிப்பு சார்ந்தவையாக இல்லாவிட்டாலும், இனஒழிப்பை செய்தகுநிலை நிலைகொண்டவையாக மாற்றும் சூழ்நிலைகளை கட்டியெழுப்புபவையாக இருப்பதை மறைமுகமாக சுட்டிக்காட்டுபவையாக இருப்பதை நாம் புரிந்துகொள்ளலாம். தமிழ் குடிமக்களை, ஒற்றையாட்சி முறை சிறிலங்கா அரசுக்கு அன்னியமானவர்களாக கட்டியெழுப்புவது, நீண்ட ஒரு செயல்முறையாக இருக்கிறது. இதில் சட்ட ரீதியான, அரசியல் ரீதியான முடிவுகள், எண்ணிக்கையிலடங்கா மனித படுகொலைகள், பாகுபாடுகாட்டும் செயல்முறைகள், ஆயுதம் தரித்த முரண்பாட்டுக் காலங்கள் மற்றும் இறுதியாக, பூண்டோடு அழிக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ஆகியவை அடங்குகின்றன.

இன ஒழிப்பை செய்தகு நிலை கொண்டவையாக உருவாக்கும், கட்டமைப்பு ரீதியான, சமூக ரீதியான காரணிகள், 1833 அளவிலான முற்பட்ட காலபகுதியில் பிரித்தானியரே உள்கொணர்ந்தாக தெரிவிக்கும் சாட்சியங்களை தீர்ப்பாயத்தினர் பெற்றுக் கொண்டதோடு, நேரடியாகவும் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். இந்தக் காரணிகளில் முதலாவதாக, மரபு வழித் தமிழர் தாயகப் பகுதிகளையும் மரபுவழி சிங்களப் பகுதிகளையும் ஒன்றிணைத்து ஒற்றையாட்சி கட்டமைப்பு ஒன்றை உருவாக்கியது இருக்கிறது. அடுத்ததாக, சிங்கள மக்களிடையே ஆரிய –பௌத்த அடையாளத்தை உருவாக்குவதற்கான அடிப்படைகளை இணைத்து உருவாக்கிய வரலாற்று எழுத்தாண்மை, தொல்பொருளியல் மற்றும் மானுடவியல் காரணிகளை உள்ளீடு செய்வதன் மூலம் திட்டமிட்ட ரீதியாக சமூக ரீதியான அமைப்பை மாற்றியமைத்தது இருக்கிறது. இதன்போது இந்தியாவை "ஆக்கிரமிப்பாளராகவும்" தமிழர்களை "ஆக்கிரமிப்பாளர்களின் வழித்தோன்றல்கள்"[6]ஆகவும் சித்தரிப்பது நிகழ்ந்தது.

இந்த ஒவ்வொரு செயல்முறையும் அதற்கென ஒவ்வொரு கால்வழிகளை கொண்டிருந்ததோடு, இனஒழிப்பு போன்ற ஒருவிடயத்தை புரிந்து கொள்வதை தொடங்குவதற்கான ஒரு கணத்தை தெரிந்தெடுப்பது எப்போதுமே ஒரு கடினமான விஷயமாக இருக்கிறது. ஆனால், முந்திய சந்தர்ப்பங்கள் பல இருந்தபோதும், சிறிலங்காவிலே ஒரு ஒற்றையாட்சி முறையை அமைப்பதற்கென கைக்கொள்ளப்பட்ட அடக்குமுறை ரீதியான, பாகுபாட்டு ரீதியான முறைகள், 1956ம் ஆண்டில் ஒரு திருப்பு முனையை அடைந்தன. அந்த ஆண்டிலேதான்,

---

5. றபாயேல் லெம்கின் -ஆக்கிரமிக்கப்பட்ட ஐரோப்பாவில் அச்சு நாடுகளின் ஆட்சி சர்வதேச சமாதானத்துக்கான கார்ணேகி அறக்கொடை, வோஷிங்ரன் டி.ஸி, 1944, பக் 79

6. உதாரணமாக, இலங்கைக்கான பிரித்தானிய குடியேற்ற செயலாளர் (1845-1850) J.E. ரெனென்ற் சுதேசிகள் ஆக்கிரமிப்பாளர் எனபிரிக்கும் விதத்தில் வரலாற்று உண்மைகளை வேண்டுமென்றே சூழ்ச்சி திறத்துடன் திரிபு படுத்தினர். இந்தப் பிரிப்பானது சிங்களவர்களை இந்த தீவை மேன்மைபடுத்துவதை நாகரீகமடைய செய்வதை அழகாக்குவதை, வளமடையச் செய்வதை அவாவுகின்றவர்களாகவும் சித்தரித்த அதேவேளை தமிழர்களை கொள்ளைக்காரர்களாகவும் ஆக்கிரமிப்பாளராகவும் தீவை ஏழ்மையான தாக்குபவர்களாகவும் அலங்கோலப்படுத்துகிறவர்களாகவும் சித்தரித்திருக்கிறது (ஜே.ஈ ரெனென்ற், இலங்கை: தீவு பற்றிய ஒரு பதிவு, - பௌதீக, வரலாறு நிலக்கிடப்பியல் (தொகுதி1, பக.394—396) லண்டன், லோங்மான் கறீன், லோங்மான, மற்றும் றொர்பேர்ட்ஸ், 1859)

சிங்களமொழிதான் ஒரேயொரு ஊத்தியோகபூர்வமான மொழி என நிர்ணயிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழர் காட்டிய அஹிம்சைவழி எதிர்ப்புகளுக்கு பதில்வினையாக, தமிழர்கள்மீது திட்டமிட்ட படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டன.

1958ம் ஆண்டில், தமிழ்மொழி விசேடஏற்பாடுகள் சட்டமூலத்தை சமர்ப்பிக்கும் விட்டுக்கொடுப்புக்கு அரசு உடன்பட்டதன் பெறுபேறாக, மீண்டும் படுகொலைகள் நிகழ்ந்தன.

1961ம் ஆண்டில் அரசகருமமொழி கொள்கைக்கு எதிர்ப்புத்தெரிவித்து வடக்கு கிழக்கு அளாவிய சத்தியாக்கிரகம் (காந்திய முறைகளை ஆதர்சமாகக் கொண்ட அஹிம்சை நேரடி நடவடிக்கை) தொடங்கியதைத் தொடர்ந்து, சிங்கள இராணுவம் வடக்கு, கிழக்குக்கு அனுப்பப்பட்டது.

1971ம் ஆண்டில் அது தரப்படுத்தலாக அமைந்தது. இந்தத் தரப்படுத்தல் மூலம் உயர்கல்வி பீடங்களுக்கு தமிழ் மாணவர் அனுமதி பெறுவது குறிப்பிடத்தக்களவில் குறைக்கப்பட்டது.

1972 இல் முதலாவது குடியரசு அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த அரசியலமைப்பு சிங்களத்துக்கு அரச கரும மொழியென்ற அரசியலமைப்பு ரீதியான தகுநிலையையும் பௌத்த மதத்துக்கு அரசியல் அமைப்பிலே முன்னணி ஸ்தானமும் கொடுக்கப்பட்டது. 1977 இல் தமிழ் மிதவாத தலைமைத்துவம், தனிநாடு அமைக்க அழைப்பு விடுத்து, வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, தமிழ் மக்கள்மீது படுகொலைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

1978ம் ஆண்டின் அரசியலமைப்பும் அரசகரும மொழியென்ற வகையில் தொடர்ந்தும் சிங்களத்துக்கு அரசியலமைப்பு அந்தஸ்தை கொடுத்தது. அந்தக் கணத்தில் இருந்து நிலைமைகள் அதிகமதிகம் பாரதூரமானவையாக ஆகின. 1981இல் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது, 1983இல் தமிழ் மக்கள் மீது படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டது. (கறுப்பு யூலை என அழைக்கப்படுவது) இதில் 3000க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

தென்பகுதியில் இடம்பெற்ற படுகொலை அலைகளில், அங்கு வாழ்ந்த பல்லாயிரக் கணக்கான தமிழர்களை கொன்றதற்கு மேலதிகமாக, வடக்கு கிழக்கில் வாழ்ந்த தமிழர்கள்மீது நடத்தப்பட்ட திட்டமிட்ட ரீதியிலான மனிதப் படுகொலைகள் தொடர்பாக விவரிக்கும் 300க்கு மேற்பட்ட பக்கங்களில் உள்ளடங்கிய சான்றுகள் தீர்ப்பு மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

உதாரணமாக, 1983 யூலையில் (திருநெல்வேலி) இருந்து 1987 மே (அல்வாய் கோவில் படுகொலைகள்) வரை, 44க்கு மேற்பட்ட படுகொலைகள் அரசஆயுதப்படைகளால் நிகழ்த்தப் பட்டிருக்கின்றன. இவற்றில் 2109 தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். இதே போலவே, 1990 மே (கிழக்கு பல்கலைக்கழகபடுகொலைகள்) இருந்து 1995 மே (நாகர்கோவில் படுகொலைகள்) வரையான, 6 வருடகாலப் பகுதியில் ஆகக்குறைந்தது 2,231 மக்கள் அரச படைகளால் நிகழ்த்தப்பட்ட 47 படுகொலைகளில் கொல்லப்பட்டனர். 2-3 நாட்கள் இடைவெளியில் நடந்த பல சம்பவங்களில் 100 மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் (உதாரணமாக (1984 டிசம்பர் 15இல் நிகழ்ந்த கொக்கிளாய்-கொக்குதொடுவாய் படுகொலையில் 131பேரும், 1990 மே 23—24ம் திகதிகளில் கிழக்கு பல்கலைகழக படுகொலையில் 226 பேரும், 1995 யூலை 9ம்திகதி நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலய படுகொலையில் 155 பேரும் கொல்லப்பட்டனர்.)[7]

விரிவிளக்கமான நேரில் கண்டவர்களின் சாட்சியங்களை உள்ளடக்கியதான, இந்த அவதானமாக ஆவணப்படுத்தப்பட்ட சாட்சியங்கள், ஈழத் தமிழர்களை, அவர்களது குழு அடையாளத்துக்கு அடிப்படையான

---

7. NESOHR, - “ இல்லையென்றால் நாங்கள் மறந்துவிடுவோம்- தமிழ் மக்கள் மீதான ப:கொலைகள் , 1956 – 2001” மனிதஉரிமைகளுக்கான வடக்குகிழக்கு செயலகம்,14 ஓகஸ்ற் 2007 <http://nesohr.org/wp-content/uploads/HumanRightsReports/Lest_We_Forget.pdf> இல் இருந்து பெறப்பட்டது.

மண்ணிலிருந்து, உடல்ரீதியாக ஒழித்துக்கட்டும் உள் நோக்கத்துடனேயே இந்த ஆட்டூழியம் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன என்பது உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. இவ்வட்டூழியங்களை நிகழ்தியவர்களுக்கு அரசு கொடுத்த பாதுகாப்பானது, இந்த கொல்லும் செயற்பாடுகள், கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கை என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்ட, அரசின் நன்கு திட்டமிடப்பட்ட கொள்கையினுடைய, ஒரு பகுதிதான் என்பது மேலும் உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. தமிழ் கிராமங்களை சுற்றிவளைத்து ஆயுதம் தரிக்காத ஆண்கள் பெண்கள் குழந்தைகளை கொன்றது, அரசபடையினர் சேவையிலிருந்த சோதனைச் சாவடிகளில் பேருந்துகள் தடுத்து நிறுத்தப்பட்டு, தமிழ்பயணிகளைப் பிரித்தெடுத்து, அவர்களை சுட்டுக்கொன்றது, உள்ளக இடப்பெயர்விற்கு உள்ளான மக்களை கடத்தி காணாமல் போகச்செய்தது அனைத்துமே, உள்நோக்கம் இருந்ததையும் திட்டமிட்ட ரீதியிலான பலியிடுதலையும் எடுத்துக் காட்டுகின்றன. சட்டத்துக்கு புறம்பான படுகொலைகள், உதாரணமாக திருகோணமலையில் 05 மாணவர்கள் கொல்லப்பட்டது, அக்ஷன் கொண்ரே லா பெய்மின் 17 பணியாளர்கள் மூதூரில் கொல்லப்பட்டது, தெரிவு செய்யப்பட்ட தனிமனித படுகொலைகள் ( 2004 க்கும் 2006க்குமிடையில் கொல்லப்பட்ட முன்னணி ஊடகவியலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதகுருமார், சிவில் சமூகத் தலைவர்கள் அடங்கலாக) முழுமையான (தண்டனையிலிருந்ததான) பாதுகாப்புடன் அரங்கேற்றப்பட்டன. அரச ஆயுதப்படையினரின் பாரிய அளவிலான படைய வலிந்து தாக்குதல்கள் கிழக்கில் தொடங்கும் முன்னதாகவே, இவை நிகழ்த்தப்பட்டன. கிழக்கிலுள்ள நற்பிட்டிமுனை (செப்.1990), அதே போலவே, யாழ்ப்பாணம், செம்மணி (யூலை1998), மற்றும் வடக்கிலுள்ள மிருசுவில் (டிசம்பர் 2000) ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டவையும் நூற்றுக் கணக்கானவர்கள் புதைக்கப் பட்டிருந்தவையுமான மனிதப் புதைகுழிகள், அப்பட்டமான உதாரணங்களாக வேறுபட்டுத் தெரிகின்றன.[8]

2010 ஜனவரியில் டப்ளின் தீர்ப்பாயத்துக்குச் சமர்பிக்கப்பட்ட சான்றுகளும் சாட்சிகளின் சாட்சியங்களும் இந்த ஆட்டூழியம், பரவலானதும் திட்டமிட்டதுமான தன்மையையும் போரின் இறுதிக்கட்டத்திலே 2006 இல் இருந்து இந்த ஆட்டூழியம் அதிகரித்து சென்றிருப்பதையும் எடுத்து காட்டுகின்றன. கடும் முனைப்பான அதிர்ச்சி தரும் கோலத்திலே, 2008 டிசம்பரின் பின், சண்டைப் பகுதியில் அமைந்திருந்த, நிரந்தர மற்றும் தற்காலிக மருத்துவமனைகள் மீது அரசபடையினரால், 40க்கு மேற்பட்ட தாக்குதல்கள் நிகழ்த்தப் பட்டிருப்பது, சர்வதேச உரிமைகளுக்கான குழுவான, ஹியுமன் றைற்ஸ் வோச் இனால் ஆவணப்படுத்தப் பட்டிருக்கிறது.[9]

இந்த இனப்படுகொலை செயல்முறை செப். 2008 இலிருந்து 2009 மே வரையான காலப்பகுதியில் அதன் உச்சக் கட்டத்தை –முள்ளிவாய்க்கால் படுகொலை- எட்டியது இதன்போது, 146,679 பேர் காணாமல் போய்விட்டதாகவும், 70,000 க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாக அஞ்சப்படுவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (சிலதகவல் மூலங்கள் இதைவிட அதிகமான தொகைகளை தெரிவிக்கின்றன.)

இந்தப்படுகொலைகளின் பட்டியலிலே இந்த காலப்பகுதியிலே, சிவில்சமூக தலைவர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் பிரதிநிதிகள், அடிமட்ட அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் சாதாரண பொதுமக்களை, திட்டமிட்ட ரீதியில் ஒழித்துக்கட்டும் இலக்கோடு மேற்கொள்ளப்பட்ட வேறுபல படுகொலைகள்,மற்றும் காணாமல்போதல்கள் கூட உள்ளடக்கப்படவில்லை. இவற்றையும் சேர்த்தால் மரணித்தவர்களின் தொகை மேலே உள்ள பட்டியலில் காட்டப்பட்டிருப்பதை விட கணிசமான அளவில் அதிகரித்ததாக இருக்கும்.

மே2009 இல் இருந்து முள்ளிவாய்கால் பேரழிவிற்கு பின்னான உண்மைகள், குற்றச்சாட்டு என்ற பகுதியின் கீழ் பகுப்பாய்வு செய்யப்படும் என்பதோடு, அவை சிறிலங்காவின் வடக்கு கிழக்கிலே தமிழர்களுக்கு எதிரான தொடர்ச்சியான இனஒழிப்பு தொடர்ந்தும் இடம் பெற்றுக்கொண்டிருப்பதையும் காட்டும்.

8. NESOHR, - " இல்லையென்றால் நாங்கள் மறந்துவிடுவோம்- தொகுதி II, மனிதஉரிமைகளுக்கான வடக்குகிழக்கு செயலகம், 25 ஒகஸ்ற் 2008 <http://www.nesohr.org/files/Lest_We_Forget-II.pdf> இல் இருந்து பெறப்பட்டது.

9. HRW, "சிறிலங்கா: மீண்டும் மீண்டும் மருத்துவ மனைகள் மீதான எறிகணைத்தாக்குதல், போர் குற்றத்தின் சான்றுகள்,ஹியுமன் றைற்ஸ் வோச், <http://www.hrw.org/news/2009/05/08/sri-lanka-repeated-shelling-hospitals-evidence-war-crimes> இல் இருந்து பெறப்பட்டது.

### 5.1.3. **சமூக செயல்முறைகளை புரிந்து கொள்ளுதல்**

தனித்துவமான குறியீடு ரீதியான மற்றும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இந்த தீர்ப்பாய அமர்வின் போது, உலகம் முழுவதும் கொண்டாடப்படும் வாழ்க்கையை வாழ்ந்தவரான நெல்சன் மண்டேலாவின் நினைவுகள் தான், சிறிலங்காவில் என்ன நடந்தது என்பதை கண்டுகொள்ளத் தேவையான அணுகுமுறை எது என்பதை காட்டும், பொருத்தமான நினைவூட்டலாக இருக்கும்.

மண்டேலாவையும் ஆபிரிக்க தேசிய காங்கிரசையும் போலவே ஈழத்தமிழ் தேசிய குழுவும் தங்களுடைய அடையாளத்தையும், சுயநிர்ணயத்தையும் காந்தியை ஆதர்சமாக கொண்ட அஹிம்சை முறைகள் மூலம் பாதுகாக்க முனைந்தனர். இந்த அஹிம்சைவழி அரசியல் செயற்பாடு சுதந்திரத்துக்கும் பின் இரண்டு தசாப்தங்களுக்குத் தொடர்ந்தது. மக்கள் மயப்பட்ட இந்த அரசியல் மற்றும் நாடாளுமன்ற எதிர்ப்பு இயக்கங்களுக்கெதிராக அதிகரித்து செல்லும் விதத்திலான வன்செயல்கள் சிறிலங்கா அரசினால் ஏவி விடப்பட்டபொழுது, தமிழ் இளைஞர்கள், தங்களை ஒரு ஆயுதம் தரித்த கொரில்லா படையாக ஒழுங்கமைத்து கொண்டனர். மேலாதிக்கமான சக்தியாக த.வி.புலிகள் இருந்த, இந்த ஆயுதம் தரித்த போராட்டமானது, 1983 கறுப்பு யூலையில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கெதிரான படுகொலைகளுக்கு பின், மக்களிடையே பேராதரவைப் பெற்றது. ஏற்றுக்கொள்ள முடியாத அளவிலான வன்செயல்களுக்கு பெயர் பெற்ற அமைப்பாக த.வி.புலிகள் இருந்தாலும் அச்சொட்டான முறையிலே அதனை பயங்கரவாத இயக்கம் என வர்ணிக்க முடியாது. சர்வதேச சட்டத்திலே “பயங்கரவாதம்” என்பதற்கு வரைவிலக்கணம் எதுவும் கிடையாது. உண்மையைச் சொல்லப் போனால் மனிதஉரிமைகள் தொடர்பான அனைத்துலக பிரகடனத்திற்கான முன்னுரையிலே “எல்லாவற்றுக்கும் கடைசியான முயற்சியாக கிளர்ச்சியில் ஈடுபடுதல்” என அங்கீகரிக்கப்பட்டிருப்பதை தெளிவற்றதாக்கவே அது பயன்படுத்தப் படுகிறது. ஐரோப்பிய யூனியன் தானே ஊக்குவித்ததும் அனுசரணையளித்ததுமான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது, “அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் கடும் அழுத்தத்தின் கீழ்”[10], த.வி. புலிகளை ஒரு பயங்கரவாத குழுவாக வர்ணிக்க, ஐரோப்பிய யூனியன் எடுத்த முடிவானது, பேச்சுவார்த்தை செயல்முறையை முறிவடையத் தூண்டிவிட்டதோடு, இனஒழிப்பு செயல்முறையை ஆரம்பித்து வைக்கவும் வேகப்படுத்தவும் வசதி ஏற்படுத்தி கொடுத்தது.

ஒரு அரசின் பயங்கரவாதம் மற்றும் கூட்டு உரிமைகளை மறுத்தல் காரணமாக, அவர்கள் கிளர்ச்சி செய்ததால் “பயங்கரவாதிகள்” என்று வகைப்படுத்தப்பட்ட இயக்கங்கள், அவர்களுடைய அடையாளத்தின்படி விடுதலைப் படைகளாக ஆகமுடியும், என்பதையும் தங்களை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கும் அரசியல் அமைப்பாக உருமாற்ற முடியும் என்று மண்டேலாவும்ஆபிரிக்க தேசிய காங்கிரசும் காட்டியிருக்கிறார்கள்.

### 5.1.4. **இனஒழிப்பு என்ற குற்றத்தின் சட்டபூர்வமான மூலக்கூறுகள்.**

இனஒழிப்பு என்பதை பல கட்டங்களை கொண்ட செயல்முறையாக சிறப்பாக புரிந்துக்கொள்ள முடியும் என்பதால், வழக்கு தொடுனர் தரப்பால் முன்வைக்கப்பட்டிருக்கும் முதல் இரண்டு குற்றச்சாட்டுகளையும் இந்த தீர்ப்பாயம் கூட்டாக பரிசிலனை செய்யும்.

சிறிலங்கா தீவின் வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும் தமிழ்மக்கள் மீது இனஒழிப்பு நிகழ்த்தப்படுகிறது. இந்த இனஒழிப்புச் செயல்முறை கட்டம் கட்டமாக நிகழ்வதோடு தொடர்ந்து கொண்டும் இருக்கிறது.

சிறிலங்கா அரசும் அதனுடைய ஆயுதப்படைகளும் தமிழ்மக்களுக்கு எதிரான இனஒழிப்பு குற்றத்தை நிகழ்த்திய குற்றவாளிகள். ஐக்கிய நாடுகள் சபையினுடைய இனஒழிப்பு தொடர்பான பொது இணக்க ஒப்பந்தத்தின் படி, இனஒழிப்பு என்பது ஒரு தேசிய, இனம்சார்ந்த, குலம் சார்ந்த மதம் சார்ந்த குழுவை, ஒரு பகுதியாகவே

---

10. சிறிலங்கா கண்காணிப்பு குழு தலைவருடைய கூற்று, மேஜர்ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன், 2007.மார்ச் 23, பிரான்ரோஸிஸ் பிறெட்றிக்ஸ் ராட்கிர்ச்செ, பெர்லின. <http://www.friedenfuersrilanka.de/index.php?option=com_content&task=view&id=15&Itemid=27> இலிருந்து பெறப்பட்டது.

அல்லது முழுமையாகவோ அழிப்பதற்கான உள் நோக்கத்தோடு நிகழ்த்தப்படும் பின்வருவனவற்றுள் ஏதோ ஒன்றை, அதாவது, குழுவின் உறுப்பினர்களைக் கொல்லுதல்; குழுவின் உறுப்பினர்களுக்கு பாரதூரமான உடல் உள ரீதியான தீங்கை விளைவித்தல், குழுவினுடைய உடல் ரீதியான அழிவை, குழுவின் ஒருபகுதிக்கு அல்லது முழுவதற்கும் விளைவிப்பதற்கென திட்டமிடப்பட்ட வாழ்வுச் சூழ்நிலைகளை குழுவின்மீது வேண்டுமென்றே திணித்தல், அந்தக் குழுவுக்குள்ளே பிறப்புகள் நடப்பதை தடுக்கும் முறைகளை சுமத்துதல், குழுவிலிருக்கும் பிள்ளைகளை பலவந்தமாக இன்னொரு குழுவுக்கு மாற்றுதல்.

### 5.1.4.1 செயற்பாடுகள்

பின்வரும் செயற்பாடுகள் சிறிலங்கா அரசால் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன என்பதை சாட்சியங்கள் எந்த நியாயமான சந்தேகத்துக்கும் இடமில்லாமல் மெய்ப்பித்திருக்கின்றன என நாம் கருதுகிறோம்.

**அ). குழுவின் உறுப்பினர்களை கொல்லுதல்.**

2010 ஜனவரியில் இடம்பெற்ற டப்ளின் தீர்ப்பாயத்தின் முதலாவது அமர்வின் போது, போரின் இறுதிக் கட்டங்களில், ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கொலைகள், பெரும்தொகையில் படுகொலை செய்தல் முதலியவற்றை விவரிக்கும் சான்றுகள் கணிசமான அளவில் சமர்பிக்கப்பட்டன. பிறெம்மன் அமர்விலே, 1956 யூனில் நிகழ்ந்த 149 படுகொலைகளில் (இங்கினியாகலை படுகொலைகள்) இருந்து ஆகக்குறைந்தது மொத்தம் 10,167 பேர் கொல்லப்பட்ட 2008 யூன் (புதுக்குடியிருப்பு குண்டுவீச்சு) வரையான படுகொலைகள் தொடர்பான மேலும் பல ஆவணப்படுத்தல்களை ஆராய்ந்தது. 1986 இன் ஆரம்பத்திலிருந்தே சிறிலங்கா படைகள் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 233 தமிழ் சிவிலியன்களை அல்லது ஒரு நாளைக்கு 7 பேர்என்ற வீதத்திலே, அத்தீவின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் கொலைசெய்து கொண்டிருந்தார்கள்."[11] என்ற உண்மையை நாம் கவனத்திலெடுப்பது முக்கியமானதாகும். இந்தக் கொலை செய்யும் கோலம் படிப்படியாக அதிகரித்துச் சென்றமை, தீர்ப்பாயத்தின் டப்ளின் அமர்வுக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்களில் பிரதிபலிக்கப் பட்டிருக்கிறது.

இந்த ஆவணங்கள் போரின் இறுதிக் கட்டத்தின்மீது கவனம் செலுத்தி இருக்கின்றன. 2009 ஜனவரியின் இறுதிப் பகுதியளவில் ஒவ்வொரு நாளும் 33 மக்கள் கொல்லப்பட்டிருப்பதையும் ஏப்ரல் அளவிலே இந்ததொகை 116 ஆக அதிகரித்ததையும் அவை சுட்டிக்காட்டுகின்றன.[12] அரச படைகளின் தாக்குதல் நிகழ்ந்த இறுதி வாரங்களிலே "இந்த மொத்த தொகையானது, 2009 மே 19ம் திகதிவரை, ஒவ்வொரு நாளும் சராசரியாக 1000 சிவிலியன் என்ற அளவுக்கு அதிகரித்து சென்றது"[13] என ஐ.நா. தகவல் வட்டாரங்களை மேற்கோள் காட்டித் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலே தெரிவிக்கப்பட்டிருக்கும் கொன்று குவித்தல்களுக்கு மேலதிகமாக, கண்மூடித்தனமான குண்டுவீச்சுகள், பெரிய அளவிலான கொலைகளுக்கென "பாதுகாப்பான பிரதேசங்கள்" என கூறப்பட்டவைகளுள் பெரும் தொகையில் சிவிலியன்களை செல்லவைக்கும் மூலோபாயம், வெளிப்படையாக பேசுபவர்களும் சிறிலங்காவினுடைய இனஒழிப்பு திட்டத்தை வெளியுலகத்துக்கு தெளிவாக விளக்கக் கூடியவர்களுமான, தமிழ் சிவில் தலைவர்களை இலக்கு வைத்து படுகொலை செய்தல், முதலியவையும் சிறிலங்கா அரசால் கைக்கொள்ளப்பட்ட திட்டமிட்ட ரீதியிலான மூலோபாயத்தை எடுத்து காட்டுபவையாக

11. இந்த விவரங்கள் வடக்கு கிழக்கு முழுவதும் உள்ள குடிமக்கள் செயற்குழுக்களின் பதிவேடுகளை அடிப்படையாக வைத்து முதன்முதலாக, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த சற்றடே றிவியூ பத்திரிகையில் 17. 01. 1986. அன்று வெளியிட்டது. <http://www.uthr.org/SpecialReports/spreport5.htm>

12. ரவிநெஸ்மான், "ஐநா சொல்வதன்படி சிறிலங்காவில் 6,500 தமிழ் சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர்." ஸ்ரார், 24 ஏப்ரல் 2009 (அஸோஸியேட்டட்பிறெஸ்), <http://www.thestar.com/news/world/2009/04/24/un_says_6500_tamil_civilians_killed_in_sri_lanka.html> இருந்து பெறப்பட்டது

13. பி. பாமர் "இறுதி வலிந்து தாக்குதலின் போது சிறிலங்கா இராணுவம் 20,000 தமிழ் சிவிலியன்களை படுகொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது" ரெலிகிராப், 29 மே 2009, <http://www.telegraph.co.uk/news/worldnews/asia/srilanka/5405085/Sri-Lankan-army-accused-ofmassacring-20000-Tamil-civilians-in-final-assault.html> இலிருந்து பெறப்பட்டது.

இருக்கின்றன.

இவ்வாறான தனி மனிதப் படுகொலைகளில், வண. பிதா ஜோர்ஜ் ஜெயராஜசிங்கம் (13 டிசம்பர் 1984), வண. பிதா மேரி பஸ்ரியன் (6 ஜனவரி 1985), குமார் பொன்னம்பலம்(5 ஜனவரி 2000), சந்திரநேரு அரியநாயகம் (7 பெப்ரவரி 2005), தர்மரத்தினம் சிவராம் (28 ஏப்ரல் 2005), ஜோசப் பரராஜசிங்கம் ( 24 டிசம்பர் 2005), வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் (7 ஏப்ரல் 2006), சின்னத்தம்பி சிவமகாராசா (20 ஒகஸ்ற் 2006), நடராஜா ரவிராஜ் (10 நொவம்பர் 2006), கே.சிவநேசன் (6மார்ச் 2008), வண. பிதா. எம்.எக்ஸ் கருணைரத்தினம் (20 ஏப்ரல் 2008), வண.பிதா. மரியாம்பிள்ளை சரத்ஜீவன் (18 மே2009) மற்றும் பலர் அடங்குகின்றனர்.

அட்டூளியங்களை பற்றி செய்திதரக்கூடிய மற்றும் ஆவணப்படுத்தக்கூடிய ஊடகவியலாளர்களின் கொலைகளை துணுகி ஆராய்ந்தால் மேலே கூறியதுபோலவே உள்நோக்கத்தை அடையாளம் கண்டு கொள்ள முடியும். 2004 ஏப்ரலுக்கும் 2010 ஜனவரிக்கும் இடையிலான காலப்பகுதியில் அரசினாலும் அல்லது அரசின் ஆதரவிலான துணைப்படையினராலும் கொல்லப்பட்ட 39 ஊடகவியலாளர்களில் ஆகக்குறைந்தது 35 பேர் தமிழர்களாகும். (89.7%).[14]

### ஆ. குழுவினுடைய உறுப்பினர்களுக்கு பாரதூரமான உடல்ரீதியான தீங்குகளை விளைவித்தல்

சர்வதேசகுற்றவியல் தீர்ப்பு மன்றுகளால் உறுதிப்படுத்தப் பட்டிருப்பதுபோல், “பாரதூரமான உடல்ரீதியான உளரீதியான தீங்கைவிளைவிப்பது என்பதை (…….) ஏனையவற்றோடு, சித்திரவதை செயற்பாடுகள், மனிதத்தன்மையற்ற அல்லது தரக்குறைவான விதத்தில் நடத்துதல், பாலியல் ரீதியான வன்செயல்கள், அடித்தல், வல்லுறவு உள்ளிட்டவை உடனிணைந்த தீவிரவிசாரணை, மரண அச்சுறுத்தல், ஆரோக்கியத்தை சேதமாக்கும், அல்லது உருக்குலைவை ஏற்படுத்தும் அல்லது காயங்களை ஏற்படுத்தும் பொல்லாங்குகள் முதலியவையாக புரிந்து கொள்ளப்படும். ஏற்படுத்தப்பட்ட தீங்கு நிரந்தரமானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை.[15]

இனஒழிப்பு உடன்பாட்டை வரைவு செய்யும் காலப்பகுதியில் உலகானது இப்போதையதை விடக்கூடியளவில் ஆண்கள் மேலாண்மை கொண்டிருந்த இடமாக இருந்தது என்பதோடு, அப்போது வல்லுறவு மற்றும் பாலியல் வன்செயல்கள் முதலியவை பாரதூரமான உடல்ரீதியான உளரீதியான தீங்காக கருதப்படவில்லை. இந்த உடன்பாடு எட்டப்பட்டு பலதசாப்தங்களுக்கு பின்பே, பாலியல் வன்செயல்கள் பாரதூரமான உளரீதியான தீங்கை எற்படுத்துகின்றன என்று உறுதிப்படுத்தப்பட்டு, வல்லுறவானது,ஒரு சித்திரவதை வடிவம் எனஅங்கீகரிக்கப்பட்டது. அத்தோடு 1998 இல் தான் இனஒழிப்பினுடைய ஒரு அங்கமாக, மேற்கொள்ளப்படும் வல்லுறவுகள், ஒரு இனஒழிப்பு செயற்பாடாக பிரகடனப்படுத்தப்பட்டன.[16] ஒரு இலக்கின்மீது, அரசினால் தண்டனைக்காப்பு வழங்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குழுஒன்றினால், ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக, பரவலான முறையிலே, கீழே காட்டப்பட்டிருப்பதுபோல் சிறிலங்காவின் தமிழர்கள்மீது செய்யப்பட்டதை ஒத்த, பாலியல் வன்செயல்கள் மேற்கொள்ளப்பட்டால், அது இந்த உடன்பாட்டின் கீழ், தெளிவாகவே ஒரு இனஒழிப்பு ஆகும்.

ஈழத்தமிழ் குடிமக்கள் மீது பாரதூரமான உடல்ரீதியான உளரீதியான தீங்குகளை ஏற்படுத்திய சிறிலங்கா அரசின் கொள்கைகள் குறித்து இந்த தீர்ப்பாயம் கவனத்தில் கொண்டுள்ளது. 30 வருடத்துக்கு மேற்பட்ட போர்க்காலப்பகுதி முழுவதும், வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிரந்தர குணாதிசயங்களாக பாரிய

---

14. சிறிலங்காவிலான சனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள், ஊடகப்பணியாளர்கள் சிறிலங்காவில் கொல்லப்பட்டனர். (2004-2010) யூன் 2012.<http://www.jdslanka.org/index.php/killed-media-workers> இலிருந்து பெறப்பட்டது.

15. முன்னாள் யுகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் (ICTY) , பிரட்ஜாமின் (விசாரணை அறை) 1செப்ரெம்பர் 2004, பந்தி 690; ஸ்ரக்கிக், 31யூலை 2003, பந்தி 516

16. றுவாண்டாவுக்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் (ICTR), அக்காயேசு , 2 செப்ரெம்பர் 1998, பந்தி 598

இடப்பெயர்வுகள், அதன் விளைவான உடல்ரீதியான உளரீதியான விளைவுகள் முதலியவை இருந்திருக்கின்றன. வலிந்து பட்டினிபோட்டவை, உணவு, மருந்துகள் மீதான தடைகள், சீவனோபாயம் மற்றும் அடிப்படை மனிதநேய தேவைகள்மீதான வரையறைகள், முதலியவை இந்தப்பகுதிகளில் திகைக்க வைக்கும் மோசமான சூழல்களை உருவாக்குவதில் பெருமளவில் பங்களிப்புச் செய்திருக்கின்றன.

டப்ளின் மற்றும் பிறெம்மென் அமர்வுகள் இரண்டிலும் தீர்ப்பாயமானது, தமிழ் ஈழ பெண்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட பாலியல் வன்செயல்கள் மற்றும்அவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவை ஏற்படுத்தி விட்டிருக்கிற, பாரிய அளவிலான நீடித்து நிலைத்திருக்கிற உடல்ரீதியான, உணர்வதிர்ச்சி கோளாறுகள் தொடர்பான வற்புறுத்தும் விதத்திலான சாட்சியங்களை கேட்டது. கிரிசாந்தி குமாரசுவாமி (7ஒகஸ்ற்1996), அருமத்துரை தர்மலெட்சுமி (11பெப் 1996), முருகேசபிள்ளை கோணேஸ்வரி (17 மே 1997), ஐடா கமலீற்ரா (12 யூன் 1999), சாரதாம்பாள் சரவணபவானந்த குருக்கள்( 28டிசம் 1999), விஜிகலா நந்தன் (19மார்ச் 2001), தம்பிப்பிள்ளை தனலட்சுமி (7யூலை 2001), இளையதம்பி தர்சினி (16 டிசம் 2005), மேரிமடேலின் (8யூன் 2006), பிறேமினி தனுஷ்கோடி (30யூன் 2006), இசைப்பிரியா அல்லது ஷோபா(மே 2009) மற்றும் சாந்தகுமாரி கிருஷ்ணபிள்ளை (10யூலை 2011) ஆகியோரின் சம்பவங்களில் தெளிவாக தெரிவதுபோல் பலசம்பவங்களில், அவற்றால் பாதிக்கப்பட்டவர்கள்,பாலியல் ரீதியாக தாக்கப்பட்ட பின் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

மனிதஉரிமை கண்காணிப்பகத்தால் (HRW ) 2013இல் வெளியிடப்பட்ட விவரமான அறிக்கையானது "2006-2012 காலப்பகுதியிலே, அரசகாவலில் இருந்த பெண்களுக்கும் ஆண்களுக்கு எதிராக சிறிலங்காபாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்ட வல்லுறவு மற்றும் ஏனைய பாலியல் வன்செயல்களை வெளிப்படுத்தியிருக்கிறது. அது 75 வல்லுறவுச்சம்பவங்களை அதாவது 31 ஆண்கள் 41 பெண்கள், 11வயதுக்கு குறைந்த 3 பையன்கள் ஆகியோர் தொடர்பான சம்பவங்களை ஆவணப்படுத்தி இருக்கிறது. இவற்றை அரச பாதுகாப்பு படையினரே செய்ததாக சாட்சியங்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன." எனவெளிப்படுத்தி இருக்கிறது.

சிறிலங்கா பாதுகாப்பு படைகளால் செய்யப்பட்டிருக்கும் பாலியல் வன்செயல்களும் வேறு பாரதூரமான துஷ்பிரயோகங்களும் நன்கு ஆழமாக வேரூன்றியிருக்கும் தண்டனைக்காப்பின் பின்னணியிலேயே புரியப்பட்டிருக்கின்றன. ……. யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த 27வயதுத் தமிழ்பெண்ணான யோகலிங்கம் விஜிதா தாக்கல் செய்த அடிப்படை மனிதஉரிமை மனுதொடர்பான வழக்கில், மனுதாரருக்கு நட்டஈடும் வழக்கு செலவுகளும் வழங்கும்படி சிறிலங்கா உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. கொழும்பின் அருகே இருக்கும் நீர்கொழும்பு பொலிசில், 2000 யூன் 21-27 வரை இந்தப் பெண் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, இவர் பொலிஸ் அதிகாரிகளால் சித்திரவதை செய்யப்பட்டதோடு, வாழைப்பொத்தி ஒன்றை பயன்படுத்தி அவர்களால் கற்பழிக்கவும் பட்டிருந்தார். எனினும் இச்சம்பவம் தொடர்பாக எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை என்று இந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

"இதுபோலவே 1997ம் ஆண்டில் ஐநா விசேட இணக்கப்பாட்டாளரால் அனுப்பப்பட்ட சித்திரவதை தொடர்பான ஒரு கடிதத்திலே, பல்வேறு வல்லுறவுச் சம்பவங்கள் பற்றி குறிப்பிடப் பட்டிருந்தாலும் அவற்றுள் எவற்றுக்காகவும் தண்டனை விதிக்கப்படவில்லை. மேற்படி சம்பவங்களிலே, 1997 மார்ச் 17ம் திகதி, மட்டக்களப்பு மாவட்டம். மைலம்பாவெளி கொலனியில் அமைந்திருக்கும் ஒரு வீட்டுக்குள், அதற்கு அருகிலிருந்த இராணுவமுகாமைச் சேர்ந்த வீரர்கள், பலவந்தமாக நுழைந்து அங்கிருந்த வேலன் இராசம்மாவையும் அவருடைய சகோதரியான வேலன் வசந்தாவையும் வல்லுறவுக்கு உட்படுத்தினார்கள். ஏறாவூரில் இருக்கும் பொலிஸ் நிலையத்திலும் கூட்டுநடவடிக்கைத் தளபதிக்கும் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டாலும் அவர்கள் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

மட்டக்களப்பில் நடந்த இன்னொரு சம்பவத்திலே தன்னுடைய வீட்டிலிருந்து பலகைகளை பொலிஸ் அதிகாரிகள் திருடிவிட்டதாக முறைப்பாடு செய்த முருகேசபிள்ளை கோணேஸ்வரி என்ற பெண், அதற்கு பின் பொலிஸ் அதிகாரிகளால் தொல்லை கொடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. 1997மே 17ம் திகதி பொலிஸ்அதிகாரிகள்

அவரது வீட்டுக்குள் புகுந்து, அவரது பெண்குறிக்குள் ஒரு கைக்குண்டை வைத்து வெடிக்கச் செய்திருக்கிறார்கள். அது அவரது மரணத்தை விளைவித்தது. இந்த குற்றத்துக்காக எவரும் தண்டிக்கப்படவில்லை."[17]

ஊடக அறிக்கைகளின்படி போரின் இறுதிக்கட்டங்களின் போது பாதுகாப்பு வலயம் என்று சொல்லப்பட்ட இடங்களுள் சிறிலங்கா இராணுவம் நடத்திய எறிகணைத் தாக்குதல்களில், 30, 000 தமிழ் சிவிலியன்கள் ஊனமுற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படியான அறிக்கைகளில் ஒன்று, ஒரு நிறுவனப் பணியாளரை மேற்கோள் காட்டி கூறுகையில், "நான் இருந்த இடத்திலும் அது போன்ற வடக்கிலுள்ள மட்டுப்படுத்தப்பட்ட வேறு முகாம்களிலும் உள்ள நிலைமைகள், உலகம் எங்கும் உள்ள போர்வலயங்களில் ஏதிலிகளுக்கு நான் ஆற்றிய 20 வருட பணிகளின் காலத்தில் நான் கண்ட நிலைமைகளைவிட மோசமான நிலை காணப்படுகிறது".[18] என்று கூறுகிறது சிறிலங்கா அரசானது, வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான நிலக் கையகப்படுத்தல்கள் மற்றும் பெரும் எண்ணிக்கையிலான ஏதிலிகள் உருவாக்கம் முதலியவற்றால் எடுத்துக் காட்டப்படும் திட்டமிட்ட ரீதியிலான கிளர்ச்சி முறியடிப்பு கொள்கையை சிறிலங்கா அரசு கைக்கொண்டது என்று தீர்ப்பாயம் கருதுகிறது. போர்க்காலம் முழுவதும் இவ்வாறாக வலிந்து இடப்பெயர்வுகள் தமிழ் குடிமக்கள்மீது திணிக்கப்பட்டதானது, இயல்பு வாழ்கை பற்றிய அனைத்து உணர்வுகளையும் அவர்களிடமிருந்து பறித்து விட்டதால், அது ஈழத் தமிழர்களின் மனங்களிலே ஆழமான உளவியல் ரீதியிலான வடுக்களை பதித்து விட்டிருக்கிறது. உதாரணமாக, 2000 டிசம்பர் அளவிலே யாழ்மாவட்டத்தில் மட்டும் மொத்த குடித்தொகையினரில் ஆகக்குறைந்தது 40.2% இனர் உள்ளக இடப்பெயர்வுக்கு உட்பட்டவர்களாக இருந்தார்கள்.[19] போர்முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்து விட்டநிலையிலும் அதாவது 2012 ஒக்ரோபரில், பெரும் எண்ணிக்கையிலான நிலமற்ற, உள்ளக இடப்பெயர்வுக்கு உள்ளான மக்கள் (IDP), எஞ்சியிருந்த 42 IDP முகாம்களில் அல்லது இன்றுவரைக்கும் எந்த மாற்றமுமில்லாமல் இருக்கின்ற யாழ்ப்பாணத்தின் 11 மூடப்பட்ட அமைவிடங்களிலும் இருந்தார்கள். .இந்த முகாம்கள் இன்னமும் இருக்கின்றன.[20]

தொடர்ச்சியான இடப்பெயர்வும் நீண்டகாலம் இழுபட்ட போர் ஏற்படுத்திய உணர்வதிர்ச்சிக் கோளாறுகள் இளையவர்களான ஈழத்தமிழ் தலைமுறையினரின் மனங்களிலே படுநாசம் விளைவிக்கும் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டிருப்பதை தீர்ப்பாயத்தினர் கண்டுகொண்டனர். "வீடு இழக்கப்பட்டது, அன்னியமான சூழல், குடும்பச்சடங்குகள் தடைப்பட்டமை, பெற்றோரிடமிருந்து பரிச்சயமான அயல், சூழல், பாடசாலை மற்றும் நண்பர்களிடமிருந்து பிரிக்கப்பட்டது. விளையாட்டுப் பொருட்கள், பேணிப் பாதுகாத்த பொருட்கள், ஆள்நெருக்கடி மிக்கதும் அன்னியமானதுமான இருப்பிடங்கள் முதலியவை, ஒருபிள்ளையின்மீது மனஅழுத்தங்களை கொடுக்கக்கூடியவையாகும் ...... கிட்டத்தட்ட 2 தசாப்தங்களாக சிறிலங்காவின் வடக்கு கிழக்கில் தொடர்ந்து நடந்து கொண்டிருந்த போரில், எறிகணை வீச்சுகள் உலங்குவானூர்தியிலிருந்து தரைநோக்கி சுடுதல், சுற்றிவளைப்புகள் சுற்றிவளைத்துதேடுதல் நடவடிக்கைகள். மரணங்கள், காயங்கள், அழிவுகள், பெருந்தொகையிலான கைதுகள், தடுத்துவைப்புகள், சூட்டுச்சம்பவங்கள், கைக்குண்டுவெடிப்புகள், நிலக்கண்ணிவெடிகள், முதலியவை போன்ற பொதுவான அனுபவங்களால் சிறுபிள்ளைகள்மீது உணர்வதிர்ச்சி

---

17. மனிதஉரிமை காப்பகம்: "நாங்கள் உங்களுக்கு ஒரு பாடம் படிப்பிப்போம்": தமிழர்களுக்கு எதிராக சிறிலங்கா பாதுகாப்பு படைகளால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் ரீதியான வன்செயல்கள், (2013 )...(பக் 18-19) <http://www.hrw.org/sites/default/files/reports/srilanka0213webwcover_0.pdf> இலிருந்து பெறப்பட்டது

18. டி.நெல்சன் 30,000 வரையானவர்கள் சிறிலங்காவின் எறிகணைகளால் ஊனமுற்றிருக்கிறார்கள்", த ரெலிகிராப் 24 மே 2009, <http://www.telegraph.co.uk/news/worldnews/asia/srilanka/5378047/Up-to-30000-disabled-by-Sri-Lankan-shells.html> இலிருந்து பெறப்பட்டது

19. என். சிவராஜா, யாழ்ப்பாண பெண்கள் குழந்தைகளின் ஊட்டச்சத்து ரீதியான நிலைமைகள் தமிழ் ரைம்ஸ் xx(5) , மே 2001 பக..21

20. "சிறிலங்கா ஒரு மறைக்கப்பட்ட இடப்பெயர்வு நெருக்கடி " , உள்ளக இடப்பெயர்வு கண்காணிப்பு மையம், 31ஒக்ரோபர் 2012, பக்13 <http://www.internal-displacement.org/8025708F004BE3B1/(httpInfoFiles)/FCD38BA17999B30CC1257B1D002D88C7/$file/Sri Lanka - A hidden displacement crisis - 31 October 2012.pdf> இலிருந்து பெறப்பட்டது

கோளாறுகள் ஏற்பட்டன. …. சிறிலங்காவின் கிழக்கு மாகாணத்தின் பிள்ளைமீது மேற்கொள்ளப்பட்ட கனேடிய ஆய்வானது சிறுபான்மையின தமிழ்ப் பிள்ளைகள் அதிக அளவிலான போர்தொடர்பான உணர்வதிர்ச்சி கோளாறுகள், அவற்றினுடைய உளவியல் ரீதியான பின் விளைவுகள் முதலியவற்றால், மற்றவர்களைவிட குறிப்பிடத்தக்க அளவில் அதிகமான அளவில் பாதிக்கப்பட்டிருப்பதாக[21] கண்டுகொண்டுள்ளது.

படையினரின் தாக்குதல்கள் ஈழத்தமிழர்மீது ஏற்படுத்தியிருக்கும் நீண்டகாலஅடிப்படையிலான உளரீதியான தீங்குகள், 1986ம் ஆண்டிலிருந்து சிறிலங்காவில் பணியாற்றி வந்த "எல்லைகளற்ற மருத்துவர்" அமைப்பு உள்ளிட்ட மனிதநேய அமைப்புகளால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. "குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பங்கு பற்றுனர்கள், யுத்தத் தாக்கங்களுக்கு நேரடியாக முகம் கொடுத்தவர்களாக இருந்தார்கள். இவர்களுள் பலர் தங்கள் கிராமங்கள் மீதான தாக்குதல்கள், வான்வழி குண்டுவீச்சுகள், எறிகணைவீச்சுகள், குறுக்குச் சூடுகள், சித்திரைவதைச் சம்பவங்கள் முதலியவற்றை நேரடியாக கண்டவர்களாக இருந்ததோடு, அவர்கள் காயப்பட்டவர்களை, தங்கள் வீட்டோடு மக்கள் எரிவதை கண்டிருக்கிறார்கள். இவர்களில் 20பேர் (12%) தாக்கப்பட்டிருக்கிறார்கள். கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.(18%) அல்லது கடத்தப்பட்டிருக்கிறார்கள். 27பேர் பணயக்கைதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள். 28பேர் (17%) பொலிசாரினால் அல்லது இராணுவத்தினரால் மோசமாக நடத்தப்பட்டிருக்கிறார்கள், மற்றும் 17பேர் (11%) சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார்கள் . கிட்டத்தட்ட எல்லோருமே தங்கள் வீடுகளை அல்லது சொத்துக்களை இழந்திருக்கிறார்கள் .( 157, 97%) பட்டினியை எதிர்கொண்டிருக்கிறார்கள் . (154, 94%), 88% (142பேர்)இனர் பாதுகாப்பு இன்மையை தொடர்ச்சியாக உணர்வதை விவரித்திருக்கிறார்கள். முரண்பாடுகள் மற்றும் வன்செயல்களின் விளைவாக தங்கள் அன்புக்குரியவர்களை இழந்திருக்கிறார்கள். பங்கு கொண்டவர்களில் 12 (7%) பேர் தங்கள் துணைவரை, 14(9%)பேர் பிள்ளையை, 20 (12%) பேர் தங்கள் பெற்றோர்களை, 29 (10%) பேர் ஒரு சகோதரத்தை, 16 (10%)பேர் தங்கள் பாட்டன் பாட்டியை இழந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட மூன்றிலொரு பங்குக்கு அதிகமானோர் தங்களுக்கு நெருக்கமாயிருந்த யாரையாவது இழந்திருக்கிறார்கள். சிலர் இந்த மரணங்களை நேரில் கண்டிருக்கிறார்கள் 16.(10%) பேர் தங்கள் பிள்ளைகளின் அல்லது தங்கள் பொறுப்பில் இருந்த பிள்ளைகளின் மரணத்தை நேரடியாகக் கண்டிருக்கிறார்கள் . அண்ணளவாக அரைவாசிப்பங்கினர் (78, 48%) தங்கள் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து பிரிந்து இருக்கிறார்கள். 39பேர் (24%) தங்கள் குடும்பத்தில் யாராவது ஒருவர் தற்கொலை செய்ய முயன்றதாகச் சொல்லியிருக்கிறார்கள்…. இதைவிட அதிகமாக, போரினுடைய உளவியல் ரீதியான உணர்வதிர்ச்சிக் கோளாறுகளால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்கள்குழு ஒன்றை கற்பனை செய்து பார்ப்பது கடினமானதாக இருக்கிறது. போரினதும் மனிதஉரிமை மீறல்களினதும் நேரடி சாட்சியங்களாகவும் அவற்றால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வேலைவாய்ப்புகள் மற்றும் சுயதங்கியிருப்பிலும் இருந்து துண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். உளநல பிரச்சினைகளை அதிகரித்து விடக்கூடிய கடந்தகாலங்களின் உளவியல் ரீதியான உணர்வதிர்ச்சிக் கோளாறுகளை ஊதிப் பெருப்பிக்கிற இழிந்த சூழ்நிலைகளுக்குள் அடைபட்டவர்களாகவும் இருக்கிறார்கள்."[22]

போரின் இறுதிக்கட்ட படுகொலைகளுக்குத் தப்பிப்பிழைத்த ஈழத் தமிழ்மக்களுடைய உளரீதியான உணர்வதிச்சிக் கோளாறுகளோடு தொடர்புபட்ட 2009 க்குபிந்திய நிகழ்வுருவாக்கங்களையும் தீர்ப்பாயம் கருத்தில் எடுத்திருக்கிறது. டப்ளின் மற்றும் பிறெம்மென்னில் இடம்பெற்ற தீர்ப்பாயத்தினுடைய இரண்டு அமர்வுகளிலும் விவரமான சாட்சியங்களை அளித்த கண் கண்ட சாட்சியங்களை விடவும் குறிப்பிடத்தக்களவிலான ஆவணரீதியான சான்றுகளும் தீர்ப்பாயத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டன. இந்தச் சான்றுகள், அண்மையில் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட

21. டி. சோமசுந்தரம், "சிறிலங்காவின் தற்கொலை குண்டுதாரிகள் " ஏசியன் ஜேணல் ஒபஸோஸல் ஸயன்ஸ் 38 (3), 2010, பக்416—414.

22. காஸ்டி ஜொங், மோறீன் மல்ஹேறண் குழுவினர் "சிறிலங்காவிலான உள்நாட்டுப் போரின் உளவியல் ரீதியான உணர்வதிர்ச்சிக் கோளாறுகள்", எல்லைகளற்ற மருத்துவர் 27ஏப் 2002, <http://www.doctorswithoutborders.org/publications/article.cfm?id=1397> இருந்து பெறப்பட்டது

ஆய்வொன்று எடுத்துக் காட்டியிருப்பது போல் போரின் கடைசிக் கட்டத்தில் தப்பிப்பிழைத்த மக்களின்மீது அரச நிலைப்பாடுகள் ஏற்படுத்தியிருக்கிற உளவியல் ரீதியான தாக்கங்களை எடுத்துக்காட்டுபவையாக இருக்கின்றன. நிகழ்காலத்தில் இடம்பெயர்ந்தவர்களாக இருக்கும் யாழ்ப்பாண வாசிகளிடையே பரவலாகக் காணப்படுகின்ற உணவெழுச்சி கோளாறுக்கு பின்னான மன அழுத்த ஒழுங்கீனம் (Post Traumatic Stress Disorder- PTSD) (13%) மனச்சஞ்சலம் (48.5%) மற்றும் மனச்சோர்வு (41.8%) நோய்குறிகள், போருக்கு பிந்திய கொஸோவர்கள் மற்றும் ஆப்கானியருடையவைகளோடு ஒப்பிடக்கூடியவையாக இருக்கின்றன. ..... அண்ணளவாக யாழ்ப்பாண வாசிகளில் 68% மானோர் ஆகக்குறைந்தது ஒரு மனவடு ஏற்படுத்தும் நிகழ்வையாவது அனுபவித்திருக்கிறார்கள். அநேகமாக தனிநபர்கள் பல்வேறு மனவடு ஏற்படுத்தும் சம்பவங்களை அனுபவித்திருக்கிறார்கள் (அதாவது சராசரி 2.76 மனவடு ஏற்படுத்தும் நிகழ்வுகள்). மனவடு ஏற்படுத்தும் நிகழ்வுகளுக்கும் உளநோய் ஏற்பட்டிருக்கும் அளவுக்குமிடையே -அனுபவிக்கப்பட்ட மனவடு நிகழ்வுகள் எண்ணிக்கை-பதில்வினை ரீதியான தொடர்புகள் இருப்பது தெளிவாகத் தெரிகிறது. அளவுக்கதிகமாக மனவடு ஏற்படுத்தும் நிகழ்வுகளை அனுபவித்ததோடு ஒத்திசைவதாக உயர் மட்டங்களிலான PSTD, சஞ்சலம் மற்றும் மனச்சோர்வு நோய்குறிகள் இருக்கின்றன என்பதுடன் அவை இடப்பெயர்வு தகுநிலையோடு இணைந்திருப்பவையாகவும் இருக்கின்றன.[23]

மிகக்கொடூரமான வன்செயல்கள், ஆயுதப் போராட்டக் கட்டத்திலேயே நிகழ்த்தப்பட்டிருக்கும் அதே வேளை, இவற்றுள் சில, இந்தப் போருக்குப் பிந்திய காலகட்டத்திலும் நீடித்திருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### 5.1.4.2. சிறப்பு உள்நோக்கம் (டோலுஸ் ஸ்பெஷலிஸ் )

ஒரு குழுவின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ அழிப்பதற்கானதும் இனஒழிப்பு உடன்பாடுகள் மெய்பிக்கப்பட வேண்டும் என எதிர்பாக்கப்படுவதுமான "குறிப்பான உள்நோக்கம் ஆனது, மிக அரிதாகவே, தெளிவான நேரடி சாட்சியங்கள் மூலம் மெய்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயங்கள் சொல்வதன்படி, "குறிப்பான உள்நோக்கம் இருந்ததற்கான மெய்ப்பிப்பை, நேரடியான தெளிவான சாட்சியம் இல்லாதபோது, பொதுவான பின்னணி, ஒரே குழுவுக்கு எதிராக வேறு தண்டிக்கப்படக்கூடிய செயல்களை திட்டமிட்ட வகையிலே நிகழ்த்துதல், நிகழ்த்தப்பட்ட கொடூரங்களின் அளவு, ஒரு குறித்த குழுவின் உறுப்பினர் என்றவகையிலே திட்டமிட்ட முறையிலே குறித்த நபர்களை இலக்கு வைத்தல் நாசகரமான , பாகுபாடில்லாத செயற்பாடுகளை திரும்பத் திரும்ப நிகழ்த்துதல் போன்ற பலஉண்மைகள் மற்றும் சந்தர்ப்பங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.[24]

உண்மையைச் சொல்லப்போனால் இனஒழிப்பு உத்தேசத்தை "சூழ்நிலை சான்றுகள் மூலம்"[25] மெய்ப்பிப்பது போதுமானதாகும். உதாரணமாக:

அ. நிகழ்த்தப்பட்ட அட்டூளியங்களின் பொதுவான பரவலான இயல்புகள்;

ஆ. இந்த செயற்பாடுகள் நிகழக் காரணமாயிருந்த பொதுவான அரசியல் கோட்பாடுகள்;

---

23. பாரா ஹுசெய்ன், மார்க் அண்டசன், பார்பரா லோபெஸ், கார்டோஸோ, கிறிஸ்ரின் பெக்னெல் குழுவினர்."போருக்கு பிந்திய சிறிலங்காவின் யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவலாகக் காணப்படும் போருடன் தொடர்புபட்ட ஆரோக்கிய சூழ்நிலைகள் மற்றும் இடம்பெயர்வு மட்டத்துடனான சேர்க்கை" அமெரிக்கா மருத்துவ சங்கத்தின் சஞ்சிகை, 306.5, ஓகஸ்ற் 2011, 522—531 <http://jama.jamanetwork.comarticle.aspx?articleid=1104178&resultClick=3> இலிருந்து பெறப்பட்டது.

24. ICTY ஜெலிஸிக், "மேன்முறையீட்டுத் தீர்ப்புகள்" IT-95 -10-A, 5 யூலை 2001, பந்தி47, ICTR, கற்ரெற்ரே "தீர்ப்பு," ICTR 2000- 61-T, 31 மார்ச்2011 மற்றும் பந்தி 583. IT-95—10-A, 5யூலை 2001, பந்தி 47ஐயும் பார்க்கவும்

25. ICTR, நிய்ரா மாஸஹுக்கோ குழுவினர் "தீர்ப்பு", ICTR 98-42-T, 24 யூன் 2011, பந்தி 5732. அடிக்குறிப்பு நீக்கப்பட்டுள்ளது. ICTR பிஸிமுங்கு குழுவினர் "தீர்ப்பு" ICTR 99-50-T, 30 செப்ரெம்பர் 2011 பந்தி 1958.ஐயும் பார்க்கவும் ICTR, நடஹிமானா, "தீர்ப்பு" ,ICTR-01-68-T, 30டிசம்பர் 2011, பந்தி804

இ. ஏற்படுத்த முயற்சிக்கப் பட்டதும் உண்மையில் ஏற்படுத்தப்பட்டதுமான அழிவுகளின் பரிமாணங்கள்;

ஈ. படுகொலைகள் திட்டமிடுவதில் கைக்கொள்ளப்பட்ட திட்டமிட்ட ரீதியான வழிகள் ;

உ. திட்டமிட்ட ரீதியிலான படுகொலைகளும் சடலங்கள் இல்லாமல் போகச் செய்தலும் ;

ஊ. இந்த செயற்பாடுகளின் பகுபாடு காட்டும் இயல்பு;

எ. குற்றம் சாட்டப்பட்டவரின் பாகுபாடு காட்டும் உத்தேசம்,[26]

நிகழ்த்தப்பட்ட அட்டூளியங்களின் திட்டமிட்ட மற்றும் பரவலான இயல்பும் பரிமாணமும் சிறிலங்கா மீதான மக்கள் தீர்ப்பாயத்தின் முதலாவது அமர்வில் நிறுவப்பட்டன. இந்த அமர்வில் மனித இனத்துக்கு எதிரான குற்றங்களை சிறிலங்கா அரசு புரிந்ததாக காணப்பட்டது.

முள்ளிவாய்க்கால் போரியக்கத்தின் பிரதான பாத்திரங்கள் குறித்த போரியக்கத்தின் முன்னும் பின்னும் அதன்போதும் வெளியிட்டுள்ள வெளிப்படையான கூற்றுகள், சிறிலங்கா தமிழ் மக்களுக்கு எதிரான இவ்வாறான இனஒழிப்பு உத்தேசம் ஒன்று இருந்ததைஉறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்களை தந்துள்ளன. உண்மையைச் சொல்லப் போனால், சுதந்திரத்துக்கு பின்வந்த காலங்களின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரைக்கும் பல சந்தர்ப்பங்களிலே இவ்வாறான உத்தேசமானது, சிறிலங்கா அரசின் முதுநிலை குடிசார், அரசியல் மற்றும் படைத்துறைத் தலைவர்களால் —அநேகமான சந்தர்ப்பங்களிலே இது வெறுப்புத் தெறிக்கும் பேச்சுகள், பாடசாலைப் புத்தகங்கள், ஊடகங்கள், இதிகாச ரீதியான வரலாற்று புனைவுகளின் பதங்களில் உள்ளடக்கப்பட்டு, இந்த உத்தேசம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.[27]

உதாரணமாக பின்வருவனவற்றை நாம் மேற்கோள் காட்டலாம்:

“இன்றைக்கு நீங்கள் இங்கே கொண்டு வரப்பட்டு உங்களுக்கு ஒவ்வொரு நிலத்துண்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் உங்கள் கிராமத்திலிருந்து பிடுங்கி எடுக்கப்பட்டுள்ளீர்கள். சமுத்திரத்தில் அடித்துச் செல்லப்படும் ஒரு மரக்கட்டைபோல் நீங்கள் இருக்கிறீர்கள். ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஏதோ ஒரு நாளைக்கு முழு நாடுமே உங்களை நோக்கி பார்க்கப்போகிறது. சிங்கள இனத்தின் கடைசிச் சமர், பதவியாவின் சமவெளிகளில்தான் இடம்பெறப் போகிறது. இந்த நாட்டினுடைய தலைவிதியை உங்கள் தோள்களில் சுமக்கப் போகும் ஆண்களும் பெண்களுமாக நீங்கள் இருக்கிறீர்கள். இந்த நாட்டை பிரிக்க முனைபவர்கள் உங்களை எதிர் கொண்டாக வேண்டும். உங்களை இந்த நாடு சில வருடங்களுக்குள் மறந்து போகலாம். ஆனால் விரைவிலேயே வரப்போகும் ஒரு நாளில், உங்களை அவர்கள் சிங்கள இனத்தின் இறுதி அரணாக நோக்குவார்கள்.“

*- இலங்கை சுதந்திரம் பெற்றபின் வந்த ஆரம்ப காலங்களிலே, தமிழர் வாழும் கிழக்கு பகுதியில் குடியமர்த்தப்பட்ட சிங்கள குடியேற்ற வாசிகளுக்கு இலங்கை முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்கா (1947-1952) உரையாற்றுகையில் குறிப்பிட்டதாக, எச்.எம். குணரத்னவின் “ஒரு இறைமையுள்ள அரசுக்காக”, கொழும்பு, சர்வோதயா வெளியீட்டாளர்கள், 1988, பக்.201இல் குறிப்பிடப்பட்டுள்ளது.*

“சமஉரிமை வழங்கப்பட்டால் அது சிங்கள இனத்துக்கு படுநாசமாக அமையும். தங்களுடைய இனத்துக்கேயுரிய

---

26. ICTR, சிக்கிறிக்கா குழு பிரதிவாதி தரப்பின் விடுதலை செய்யக் கோரும் விண்ணப்பம் , IT-95-8-T, 3 செப்ரெம்பர் 2001, பந்தி 46-61.

27. இந்த சூழ்ளமைவுக்கு சட்டரீதியாக பொருத்தமற்ற வேறு உள்நோக்கங்களைக் கொண்ட குற்றமிழைத்தவர் ஒருவருக்கு எதிரான வழக்கில் இனஒழிப்பு குற்றவாளியாக காண்பதை இவ்வாறான பதம் தடைசெய்யவில்லை என்பதை தீர்ப்பாயம் நினைவு கூர்ந்துள்ளது. (ICTY கோரான் ஜெலிசிக் AJ, பந்தி 49, டஸ்கோராடிக் , மேன்முறையீட்டு தீர்ப்பு வழக்கு இலக்கம் IT-94 – 1 –யு, 15 யூலை 1999, பந்தி 269 ஐ மேறிகோள் காட்டி)

(மொழி) கலாச்சாரம், மனஉறுதி, பலம் ஆகிய குணாதிசயங்களுடன் …….தமிழர்கள் எங்கள்மீது மேலாதிக்கம் செலுத்த வருவார்கள்."

*- பிரதம மந்திரி எஸ்.டபிள்யூ.ஆர் டி. பண்டாரநாயக்கா 13 நவம்பர் , 1955, 1955 நவம்பர் 14ம் திகதி சிலோன் டெய்லி நியூஸ் பத்திரிகையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.*

"வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள், தோட்டங்களில் உள்ள தேயிலை தோட்டத் தொழிலாளர்கள், நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள அவர்களது நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளை அவர்களுடைய அழுத்தங்களுக்கு அரசு பணியாவிட்டால் பொருண்மியத்தை முடக்கப் போவதான அச்சுறுத்தல்களோடு அரசுக்கு பணிப்புரைகளை விடுக்க நாம் அனுமதிக்கமுடியாது. நாட்டினுடையவும் மக்களினுடையவும் எதிரிகளுக்கு எதிராக ஒவ்வொருவரும் ஓரணியாய் திரளவேண்டிய வேளை இதுதான். கடமைக்கான அமைப்பை ஏற்க நீங்கள் எல்லோரும் தயாராக இருக்கவேண்டும்."

*- பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா (1960—1965 1970—1974) மொழி உரிமைகளைக் கோரி இலங்கை தமிழரசுக்கட்சி ஏற்பாடு செய்த அஹிம்சை நேரடி நடவடிக்கைக்கு எதிராக 26 எப்ரல் 1961ம்திகதி நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாக, எஸ்.பொன்னையா இலங்கையிலான தமிழர்களின் சத்தியாக்கிரக மற்றும் சுதந்திர போராட்ட இயக்கம் யாழ்ப்பாணம், கன்னியா, 1963, பக் 182—186இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.*

"தமிழ்மக்களுடைய கருத்துக்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை ……….இப்பொழுது நாம் அவர்களைப் பற்றியோ அவர்களுடைய உயிர்களைப் பற்றியோ அல்லது கருத்துக்களைப் பற்றியோ இப்போது நினைக்க முடியாது. வடக்கின்மீது எந்த அளவுக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றதோ, அந்த அளவுக்கு இங்கேயுள்ள சிங்கள மக்கள் மகிழ்வார்கள் …….உண்மையைச் சொல்லப் போனால் நான் தமிழர்களைப் பட்டினிபோட்டுக் கொன்றால் சிங்கள மக்கள் மகிழ்வார்கள்."

*- சனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன (1977-1988), 1983 யூலை 11ம் திகதி*

*டெய்லி ரெலிகிறாப்-இல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.*

"இந்த நாட்டின் பெரும்பான்மை சமூகத்தினர் சிங்களவர்கள் ஆகும். எனவே சிங்களவர்களே இந்த நாட்டை ஆளவேண்டும். கடந்த காலங்களிலும் அவர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள். எதிர்காலத்திலும் அவர்கள் அதைச் செய்வார்கள். சிறுபான்மையினர் அவர்களுக்கு உதவி, அவர்களுக்கு வழிகாட்டலாம். வடக்குக்கும் கிழக்குக்கும் . ஈழத்தைக் கொடுக்க வேண்டும் என நாம் சொல்லி தெற்கிலுள்ள தமிழ்மக்களை அங்கு போகும்படி சொன்னால் என்ன நடக்கும்? அவர்கள் எதை உண்பார்கள்? பூமியின் மண்ணை மட்டும்தான் உண்ணவேண்டியிருக்கும். பெரும்பான்மைச் சமூகம் (சிங்களவர்கள்) பிரிந்து போகாமல் இருந்தால் ஒரு கட்டுமஸ்தான மரத்தை சுற்றி கொடிகள் படர்வது போல் சிறுபான்மை சமூகத்தினர் பெரும்பான்மை சமூகத்தினரை சுற்றி பின்னிப் பிணைந்து படர்வார்கள்."

*- சனாதிபதி டி.பி. விஜயதுங்கா (1993—1994) 5 பெப்ரவரி 1994, மத்திய மாகாண தேர்தல் கூட்டங்களில் உரையாற்றும் போது கூறியதாக 1994 பெப்ரவரி 6ம் திகதி சண்டே ஒப்சேவரில் மேற்கோள் காட்டப்பட்டது.*

"இந்த நாடு சிங்களவருக்கே சொந்தம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால் சிறுபான்மை மக்களும் இருக்கிறார்கள். அவர்களை நாம் எமது மக்களாக நடத்துகிறோம். நாங்கள் இந்த நாட்டின் பெரும்பான்மையினராக இருப்பதால் 75% , நாங்கள் ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்பதோடு இந்தக் நாட்டைக் காப்பாற்றும் உரிமை எங்களுக்கு இருக்கிறது. … அவர்கள் இந்த நாட்டின் எங்களுடன் வழலாம். ஆனால் அவர்கள் சிறுபான்மையினர் என்ற போர்வையில் அவர்களுக்குரியதல்லாதவற்றை கோரக் கூடாது."

**-** *ஜெனரல் சரத் பொண்சேக்கா, சிறிலங்கா இராணுவத் தளபதி (டிசம்பர் 2005 – யூலை 2009) மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.*

“நாங்கள் மூன்று வருடங்களுக்கு முன்னதாகவே சிறுபான்மையினர் என்ற வார்த்தையை எமது சொற்களஞ்சியத்திலிருந்து நீக்கி விட்டோம். தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர், மலாயர்கள், மற்றும் வேறு வகை சிறுபான்மையினர் என்று இப்போது எவரும் இல்லை. இந்த நாட்டிலே இரண்டு மக்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். ஒரு மக்கள், இந்த நாட்டை நேசிக்கும் மக்கள். சிறிய குழுவான மற்றைய மக்களில் தங்களுடைய பிறந்த மண்ணான இதன்மீது எந்த அன்பும் இல்லாதவர்கள் அடங்குகிறார்கள். தங்கள் நாட்டை நேசிக்காத இவர்கள் கீழ்பட்ட குழுவாக இருக்கிறார்கள்”

*- சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ , (2005 – 2009 மே 19ம் திகதி நிகழ்ந்த பாராளமன்ற ஆரம்ப நிகழ்வின் போது கூறியதாக 2009 மே 24ம் திகதி சன்டே லீடரில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.)*

“பயங்கரவாதத்தை முறியடித்த பின் உலகில் உள்ள எந்த நாடும் பயங்கரவாதத்தினுடைய அரசியல் முன்னணிக்கு செயல்பட இடம் விட்டுவைப்பதில்லை. இவ்வாறான அரசியல் முன்னணிகளைத் தோற்கடிக்க அவர்கள் சட்டரீதியான அரசியல் ரீதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள். ஆனால் சிறிலங்கா அரசு அப்படியான நடவடிக்கை எதையும் த. தே. கூட்டமைப்புக்கு எதிராக எடுக்கவில்லை. அதனுடைய பின்விளைவுகள் இப்போது மாகாணசபைத் தேர்தல்களில் பிரதிபலிக்கப் படுகின்றன. வடமாகாண தேர்தலிலே த.தே. கூ. பெற்ற அரசியல் வெற்றியை பயன்படுத்தி தேசியரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் சிறிலங்கா அரசு, அதனுடைய மக்கள் மற்றும் அதனுடைய இறைமை ஆகியவற்றுக்குச் சவால்விட அது தயாராகிறதெனின் தமிழ் சமூகமும் அதனுடைய எதிர்காலத் தலைமுறைகளும் நந்திக்கடல், கடலேரியை மீண்டும் தரிசிக்க வேண்டியிருக்கும்.”[28]

*- தொழில்நுட்பம், ஆய்வுகள், அணுசக்தி அமைச்சரும் ஜாதிகஹெல உறுமய கட்சி தலைவருமான பாட்டாளி சம்பிக்க றணவக்க, த. தே. கூட்டமைப்பின் தேர்தல் வெற்றியின் பின்குறிப்பிட்டது – 23செப்ரெம்பர் 2013.*

### 5.1.4.3- குழு

பாதிக்கப் பட்டவர்களை ஒரு குறிப்பிட்ட தேசிய ரீதியான மனிதஇன ரீதியான, மரபினக்குழு ரீதியான அல்லது மதரீதியான குடித்தொகையினரை சேர்ந்தவர்கள் என்ற வகையில் வகைப்படுத்துவது தொடர்பாக, இந்தச் சந்தர்ப்பத்திலே பாதிக்கப்பட்டவர்கள், ஒரு இனக்குழுவான ஈழத்தமிழர்கள் என்று இந்தத் தீர்ப்பாயம் வரையறை செய்கிறது. இந்த இலக்கு குழுவை, குற்றச்சாட்டில் குறிப்பிடப் பட்டிருப்பது போல் தமிழ் இனக்குழுவின் ஒருபகுதி என வரையறை செய்யவேண்டுமா அல்லது பின்னர் தீர்மானிக்கப்பட்டது போல், ஒரு “இனக்குழுமம் என்றவகையில் ஈழத் தமிழருக்கு” எதிராக இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டதா என்று கண்டுபிடிப்பதா என்பது தொடர்பாக தீர்ப்பாயம் மிகஅவதானமாக கருத்திலெடுத்தது.

சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தினாலும் சர்வதேச நீதிமன்றத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அகப்பொருள் சார் மற்றும் புறப்பொருள்சார் அணுகுமுறைகள் இரண்டின்படியும், பாதுகாக்கப்படும் குழுவானது ஈழத்தமிழரை ஒத்ததாக, நிலைபேறானதாகவும் நிரந்தரமானதும் ஒரு பொது தேசிய அடையாளத்தைக் கொண்டதாகவும் இருக்கவேண்டும். புறநோக்கு சார்ந்த அணுகுமுறை: இது இப்படியானதுதான் என்று குழுவின் உறுப்பினர்களாலும் உணரப்பட்டது.( அகநோக்கு சார்ந்த அணுகுமுறை தமிழர்கள் என்ற சுட்டுப்பெயரானது தீவினுடைய வடக்கு கிழக்கில் வாழும் தமிழரையே குறிக்கிறது. ஈழத்தமிழர் அடையாளமானது ஆயுதப் போராட்டத்திற்கு முன்னைய காலங்களிலேயே வழங்கி வருகிறது என்பதைக் கவனிப்பது முக்கியமானதாகும். படிப்படியாக உருவாகி வந்த அது அண்மைக் காலங்களில் முனைப்பானதாக ஆகியது. உண்மையைக் கூறப்போனால், தமிழர்களை தங்கள் மரபுவழி தாயகங்களில் சுயநிர்ணய உரிமை பற்றி வலியுறுத்துவதற்கு நிர்ப்பந்தித்த ஒடுக்குமுறையின் பெறுபேறாகவே அப்படி ஆகியது. ஈழம் என்ற வார்த்தையானது முன்னும் முழுத்தீவையும்

28. நந்திக்கடல் கடலேரி என்பது 2009 மேயில் படையினர் மேற்கொண்ட இறுதித் தாக்குதலின் களமாகும். இதன்போது குடிசார் மக்களைப் போலவே த.வி. புலிகளும் கொல்லப்பட்டனர்.

குறிக்க தமிழர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த அதே வேளை பின்பு அதிகரித்த அளவில், விரும்பப்பட்ட சுதந்திரமான வடக்கு கிழக்கின் பகுதிகளையும் இங்கு வாழ்ந்த மக்களையும் குறிக்கப் பயன்படுத்தப்படுவதாக ஆகியது.

இந்த தீர்ப்பாயத்துக்கு முன்வைக்கப்பட்ட ஆவணங்களும் சாட்சியங்களும் இந்த இன ஒழிப்பு ரீதியான செயன்முறைகளினால் பாதிக்கப்படுபவர்களாக, அதனது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துவதன் மூலம் அதனது கூட்டு அடையாளத்தை பேண முயன்ற ஒரு குழு இருப்பது தெளிவாகத் தெரிகிறது. ஐ.நாவினுடைய முன்னாள் செயலாளர் நாயகம் பாதுகாப்பு கவுன்சிலின் தலைவருக்கு 1994 மே 24ஆம் திகதி எழுதிய கடிதத்தில், "பெயர் சுட்டப்பட்ட ஒரு குழுவின் ஒரு பகுதியை அல்லது முழுமையாக அழிப்பதற்கான உத்தேசமே பெருந்தொகைகளில் படுகொலை செய்யும் குற்றங்கள் மற்றும் மனித இனத்திற்கு எதிரான குற்றங்களை, இனப்படுகொலையாக ஆக்குகிறது. உடன்பாட்டினுடைய கருத்துக்களுக்கு, தனி நபர்களுக்கு எதிரான இனப்படுகொலையாக இருப்பதாயின் அவை அவர்களுடைய கூட்டாண்மை அல்லது அவர்களுடைய எதிராக, மரபுக்கூறுகள் அல்லது இயலுமைகளுக்கு எதிராக நிகழ்த்தப்படவேண்டும்."[29]

இதேபோலவே, மனித இனத்தினுடைய அமைதி மற்றும் பாதுகாப்புக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான விதிமுறைகளின் வரைவு தொடர்பாக சிறப்பு இணக்கப்பாட்டாளர் தனது 04ஆவது அறிக்கையிலே பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

"ஒரு தேசிய குழுவானது அநேகமான சந்தர்ப்பங்களிலே பல்வேறுப்பட்ட பல இனக் குழுமங்களை உள்ளடக்கியதாக இருக்கும். எனவே ஒரு நாடு பற்றிய எண்ணக்கருவானது ஒரு இனக் குழுமத்துடன் மட்டும் தொடர்புபட்டதாக இருக்காது. ஆனால் ஒன்றாக வாழ்வதற்கான பொதுவான விருப்பம் பொதுவான இலட்சியம், பொதுவான இலக்கு மற்றும் பொதுவான அபிலாசைகளால் எடுத்துக்காட்டப்படுவதாக இருக்கும்."[30]

இந்த குறிப்பிட்ட இனப்படுகொலையின் இலக்காக இருந்தது, ஈழத்தமிழ் தேசியக் குழுதான் என்பது தெளிவாகத் தெரிகிறது. இலக்காக இருந்த இந்த குழுவானது தமிழ்குழுவை முழுமையாக உள்ளடக்கவில்லையெனினும் இலக்கு குழுவுக்குள் இருந்தவர்கள் பொது வாழ்வை வாழும் விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்ததோடு பொதுவான இலட்சியங்கள் இலக்குகள் மற்றும் அபிலாசைகளைக் கொண்டிருந்தார்கள்.

ஒரு தேசிய சிறுபாண்மையினர் என்ற வகையிலே தமது கூட்டுப் பண்பு பாதுகாக்கப்படவேண்டும் என்று கோரியதானது, இக்குழுவினரை, தலைமைத்துவ சக்தியினால் மேற்கொள்ளப்பட்ட அட்டூளியங்களின் இலக்காக ஆகிவிட்டது. ஒரு கூட்டாண்மை என்ற வகையில் அதன் புறமொதுக்கலையும் மேலாண்மையோடு இருக்கின்ற கலாச்சார அரசியல் சமூக, பொருண்மிய மற்றும் மத ரீதியான கோலங்களுக்கு அது பணிந்து போகவேண்டும் என்பதையும் வேண்டிநிற்பதாக இந்த தலைமைத்துவ சக்தி இருந்தது.

### 5.1.5) தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இனப் படுகொலையைச் செயற்பாடுகள் மூலமாக தொடர்ந்த இனப்படுகொலை.

மேலே நாம் எடுத்துக்காட்டியது போலவே, தீர்ப்பாயமானது, இனப்படுகொலையை ஒரு செயல் முறையாகவே புரிந்து கொள்கிறது. இதன் விளைவாக, இனப்படுகொலை என்பது, தொடர்ந்து இடம்பெற்றுக்கொண்டிருக்கும் இனப்படுகொலைச் செயற்பாடுகளால் எடுத்துக் கூறப்படும் தொடர்ச்சித் தன்மையை கொண்டிருக்கலாம். இந்த இல்லாதொழிக்கும் செயற்பாட்டின் போது பொதுப் படையாகக்கப்பட்ட செயற்பாடுகளாக, குழுவின் உறுப்பினர்களை கொல்வது இருந்தால் (பிரிவு 20 UNGC), போரின் முடிவுக்கு பின் , சிறிலங்கா படைகள்

29. 5/1994/674, மே24, 1994, பந்தி97.

30. A/CN.4/398, மார்ச்11, 1986, பந்தி57.

ஈழத்தமிழ் பிரதேசங்களின் கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்டபின் இனப்படுகொலை தொடர்பான பொது இணக்க உடன்பாட்டின் பிரிவு 02இன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் வேறு செயற்பாடுகளில் சில சாத்தியமாக்கப்பட்டன.

**பிரிவு 2.b. குழுவின் உறுப்பினர்களுக்கு கடுமையான உடல் உளரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துதல் தொடர்பானது.**

இந்த செயற்பாடுகளுக்கு விளைவு ரீதியான மெய்ப்பிப்பு வேண்டும்.[31] அவை "சித்திரவதை (……), வல்லுறவு, அடித்தலுடனான தீவிர விசாரணை உள்ளிட்ட பாலியல் ரீதியான வன் செயல்கள் முதலியவற்றை உள்ளடக்குகின்றன. "தடுப்புமுகாம்களில்" செய்யப்படும் சித்திரவதைகள், பிரிவு 11.b. யின் உள்ளடக்கியிருக்கும் விடயங்களை ஒத்தவையாக இருக்கின்றன. என சர்வதேச நீதிமன்றம் முடிவாகக் கூறியுள்ளது.[32]

தற்போதய வழக்கில் தீர்ப்பாயத்தின் முன்வைக்கப்பட்டுள்ள சான்றுகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் ஊடான ஆவணங்கள் மூலமாக, 2009 மே மாதம் முரண்பாடுகள் முடிவுக்கு வந்த பின்னும், படைத்துறை மற்றும் காவல்துறையினுள் இருக்கும் செயற்பாட்டாளர்களால் நிகழ்த்தப்பட்ட சித்திரவதைகள் தொடர்ந்தன என்றும் இப்போதும் தொடர்கின்றன என்றும் எடுத்துக்காட்டப்படுகின்றன. முன்னாள் போராளிகள் மற்றும் காணாமல் போய் விட்டவர்களின் பெண் உறவினர்களுக்கு எதிரான பாலியல் ரீதியான வன்செயல்கள் பரவலாக இடம்பெறுகின்றன. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினர் (HRW) ஆவணப்படுத்தியிருப்பது போல் , 2009ஆம் ஆண்டிலிருந்து ஆண், பெண்களுக்கு எதிரானவை உள்ளிட்டதாக குடிசார் மக்கள், சிறிலங்கா பாதுகாப்புபடை உறுப்பினர்களால் நிகழ்த்தப்பட்ட வல்லுறவு மற்றும் பாலியல் ரீதியான வன்செயல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். " இந்த நடைமுறைகள் பரவலான விதத்திலும் திட்டமிட்ட விதத்திலும் ஆனவை" எனக் குறிப்பிட்டிருக்கும் அவர்களுடைய அறிக்கைகள், வெளிநாடுகளில் அடைக்கலம் கோரும் சிறிலங்கா மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் தேவை மீது கவனத்தை ஈர்த்திருக்கும் அகதிகளுக்கான ஐ. நா உயர்ஸ்தானிகரின் 2012 டிசம்பர் அறிக்கையையும் மேற்கோள் காட்டியிருப்பதோடு, அண்மைக் காலங்களிலே, காவலில் இருக்கும் தமிழ் ஆண்களுக்கு எதிராகவும் முரண்பாட்டுக்கு பின்னான காலப்பகுதிகள் உள்ளிட்ட காலப்பகுதிகளிலே, வல்லுறவு உள்ளிட்ட ஆனால் அதற்கு மட்டுப்படுத்தப் படாததான பாலியல் ரீதியான வன்செயல்கள் நிகழ்த்தப்பட்டிருப்பதான அறிக்கைகளையும் குறிப்பிட்டிருக்கிறது"[33]

இதே முறையிலேயே மூடிய அறைக்குள்ளான தீர்ப்பாயத்தின் அமர்வுகளிலே சமர்பிக்கப்பட்ட அறிக்கைகளில் 2009இற்கு பின்னால் இடம்பெற்ற சித்திரவதை சம்பவங்கள் புகைப்படங்கள் மற்றும் சட்டரீதியான சான்றுகள் மூலம் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. சான்றுகளாக சமர்ப்பிக்கப்பட்ட உண்மைகளின் ஒட்டுமொத்த தன்மையானது, இந்தச் செயற்பாடுகள், தனிமையானது அல்ல என்பதை மெய்ப்பித்திருப்பதுடன் இனஒழிப்பு நடந்தது என கொள்ளப் கொள்ளப்படுவதற்கு அவசியமானவை என்று சர்வதேச தீர்ப்பாயங்களால் நிர்ணயிக்கப்பட்டவற்றை திருப்தி செய்பவையாக இருக்கின்றன.[34]

---

31. ICTY பிறானினனின் விசாரணை தீர்ப்பு, 1 செப்ரெம்பர் 2004 பந்தி 688 ஸ்ராக்கிக்கின் விசாரணை தீர்ப்பு, 13, யூலை 2003 பந்தி 514.

32. சர்வதேச நீதிமன்றம்(ICJ), இனப்படுகொலையை தடுத்தல் மற்றும் அதற்கான தண்டனை தொடர்பான சட்டங்களை பிரயோகித்தல் தொடர்பான வழக்கு (பொஸ்னியா மற்றும் ஹெர்ஸெகோவினா எதிர் சேர்ப்பியா மற்றும் மொண்ரிநீக்ரோ) 26 பெப்ரவரி 2007ம் திகதி தீர்ப்பு பந்தி 319)

33. மனித உரிமை காப்பகம் (HRW) "நாங்கள் உங்களுக்கு ஒரு பாடம் புகட்டுவோம்." மனிதஉரிமை காப்பகம், <http://www.hrw.org/sites/default/files/reports/srilanka0213webwcover_0.pdf> இலிருந்து பெறப்பட்டது

34. ICTY பொப்போவிச்குழு, விசாரணைத் தீர்ப்பு 10 யூன் 2010 (இதிலிருந்து பொப்போவிச் குழுவினர், பந்தி, 829)

பிரிவு 2C ஐ மேற்கொள்வது பற்றியது: ஒரு குழுவின்மீது, அதன் ஒரு பகுதிக்கோ அல்லது அது முழுவதுக்குமோ அழிவைக் கொண்டுவரும் விதத்திலான திட்டமிடப்பட்ட வாழ்வுச் சூழ்நிலைகளைக் உருவாக்குதல்.

பிரிவு II.c ஆனது குறித்த குழுவினுடைய உறுப்பினர்களை உடனடியாக கொல்லாத முறைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.[35] இதில், மற்றவற்றுக்கிடையே, ஒருகுழுவை, ஆகக்குறைந்தளவு உணவு, திட்டமிட்ட வகையில் வீடுகளிலிருந்து வெளியேற்றுதல், ஆகக்குறைந்த மட்டத்துக்கும் கீழே அத்தியவசிய மருத்துவ சேவைகளை குறைத்தல், ஆகியவை அடங்குகின்றன. "முறையான வீட்டுவசதி, ஆடைகள், சுகாதார வசதிகள் மருத்துவ கவனிப்புகள் முதலியனவை இல்லாமை அல்லது அதிகளவு வேலை அல்லது உடல்ரீதியான கடும் முயற்சி முதலியனவை பிரிவு 2.C. இல் அடங்கியிருக்கும் விடயங்களை நிறைவு செய்கின்றவையாக இருக்கின்றன, என்று ICTR கருதுகிறது.[36]

இதேபோலவே பாதிக்கப்பட்டவர்களை அவர்களுடைய வாழ்விடங்களிலிருந்து திட்டமிட்ட ரீதியில் வெளியேற்றுவதென்பது, ஒரு பாதுகாக்கப்படும் குழுவினரின் பௌதீக ரீதியான அழிவை திட்டமிட்ட ரீதியில் ஏற்படுத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கிவிடும் வழியாகவே இருக்கிறது என சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் கூறியிருக்கிறது.[37]

தீர்ப்பாயத்தின் முன்வைக்கப்பட்ட சான்றுகளின்படி ஈழத்தமிழர்களின் உரித்தான நிலங்கள் சிறிலங்கா அரசால் கையகப்படுத்தப் படுகின்றன. 2009ம் ஆண்டின் அறிக்கை யொன்று இதனை தமிழர் நிலங்களை படையினரின் பாவனைக்கென கையகப்படுத்தும் விதத்தில் அகல்விரிவான பகுதிகளை உயர்பாதுகாப்பு வலயமாக (HSZ) பிரகடனம் செய்யும், அரசினால் வகுக்கப்பட்ட மூலோபாயம் …. இந்த உயர் பாதுகாப்பு வலயங்கள், உரிமையாளர்களிடமிருந்து அவர்களுடைய நிலங்களையும் நீர்வளமூலங்களையும் பறித்து எடுத்ததோடு எந்தவிதமான குடிசார் மக்களின் வருகைக்கும் அனுமதிகளை மறுத்தது. இவற்றுள் அத்துமீறுவோர் தடுத்து வைக்கப்படுதல் தண்டப்பணம செலுத்துதல் முதலியவற்றுக்கு உள்ளாக்கப்படும் நிலைமைகள் நிலவியதோடு சுட்டுக் கொல்லப்படுதல் கூட நிகழக்கூடிய நிலைமை இருந்தது என கண்டனம் செய்துள்ளது." இறுதியாக, பாரிய அளவிலான நிலப்பகுதிகளும் கடற்கரையோரப் பகுதிகளும் படைய ரீதியாக நிலைகொள்ளுதல் மறைமுகமாக சுட்டிக்காட்டும் விடயமாக மாவட்ட குடித் தொகையினரில் ஒரு பெரும் பகுதியினர் தங்களுடைய வீடுகள், வாழ்வாதார முறைகள் முதலியவற்றுக்கு திரும்பும் உரிமை மறுக்கப்பட்டு அதன் விளைவாக உள்ளக இடப்பெயர்வுக்குட்பட்டவர்களாக (IDP) ஆக்கப்பட்டதும் இருக்கிறது…...இந்த IDP களில் பெரும் பகுதியினர் உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் தங்கியிருப்பதானது, அவர்களுக்கு புகலிடம் கொடுத்திருக்கும், தமிழ் குடிமக்களில் பெரும் பகுதியினருக்கு, வாழ்வாதார முறைமைகள் மற்றும் வாழ்க்கைச் செலவுகள் என்ற வகையில் உள்ள கஷ்டங்களை மேலதிகமாக அதிகரிப்பதாக இருக்கிறது. இவ்வாறாக இந்தச் செயல் முறைகள் தமிழ் குடித் தொகையினரை கூட்டாக இலக்கு வைத்து பாதிப்புக்கு உட்படுத்துபவையாக இருக்கின்றன. முழுக்கிராமங்கள் என்ற வகையில் இந்தவாறான வன்செயல் செயல்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு, முழுச்சமூகங்களும் சொத்துக்கள் பறிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.[38] போர்முடிந்து நான்கு வருடங்களுக்கு பின்னரும் ஈழத்தமிழ் மக்களுடைய இக்கட்டான நிலையானது ஆரோக்கியம், உணவு, சமூகப்பாதுகாப்பு ரீதியாக தொடர்ந்து சீர்குலைந்து கொண்டிருப்பதினுடைய தெளிவான அடையாளங்களை காட்டுவதை தீர்ப்பாயம் கவனத்தில் கொண்டுள்ளது. ஆகப்பிந்திய தரவுகள், நாட்டினுடைய ஏனைய பகுதிகளில்

35. ICTR அககாயேசு (விசாரணைஅறை, 2 செப்ரெம்பர் 1998, பந்தி 505-506)

36. ICTR காயிமோ மற்றும் றுசின்டானா (விசாரணை அறை), 21 மே 1999, பந்தி 115-116).

37. ICTR அககாயேசு (விசாரணைஅறை ) 2செப்ரெம்பர் 1998, பந்தி, 506)

38. இலங்கையின் உயர் பாதுகாப்பு வலயமும், மீளக்குடியேறுவதற்கான உரிமையும், அதற்கான இழப்பீடுகளும்: திருகோணமலை மாவட்டத்தில் ஒரு விடய ஆய்வு. ஜெனீவா, சுவிற்சர்லாந்து: வீட்டுரிமை மற்றும் வெளியேற்றுகைக்கான நிலையம் 2009. இவ்வாறான ஆய்வுகள் பவானி பொன்சேகா மற்றும் மிராக் ரஹீம் போன்றவர்களினால் திருகோணமலை உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் விசேட பொருளாதார வலயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் - கொழும்பு, செப்டெம்பர் 2009.

ஊட்டமின்மை இன்னமும் 29மூ, மாக இருக்கும் அதேவேளை தீவின் வடக்கு கிழக்கில் 50மூ எட்டியிருப்பதை வெளிப்படுத்துகின்றன. வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மாவட்டங்களின் வீதங்களைப் பொறுத்தவரை இது மட்டக்களப்பில் 33மூ வீதமாகவும், (4 மாவட்டங்களைக் கொண்ட) வன்னியில் 51மூமாக இருப்பதையும் அவை காட்டுகின்றன. .... மீளகுடியமர்த்தப்பட்ட மக்களில் 63வீதமானோர் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்வதாக 2011 யூனில் உலகஉணவுத்திட்ட நிறுவனமே குறிப்பிட்டிருக்கிறது.[39] படைய மயப்படுத்தலின் அதிகரிப்பு, குடியேற்றுதல், ஈழத்தமிழர் பகுதிகளில் சிங்கள பௌத்த கலாச்சாரத்தை வலிந்து திணித்தல் முதலியவை தொடர்பான சான்றுகள் இந்த குழுவின் ஒரு பகுதியை அல்லது முழுமையாக அழிவுக்குட்படுத்தும் விதத்தில் இந்தக் குழுவினர் மீது, திட்டமிட்ட ரீதியில் குழுச் சூழ்நிலைகளை ஏற்படுத்த சிறிலங்கா அரசு உத்தேசித்திருக்கிறது என்பதில் தீர்ப்பாயம் உறுதி கொண்டிருக்கிறது.? [40]

கருத்தடை கிளினிக்குகள் தொடர்பாக, த ஷோஷல் ஆக்கிரெக்ஸ் (சமூககட்டுமான ஆர்வலர்கள் - The Social Architects ஆல் மேற்கொள்ளப்பட்ட களப்பணிகள் "அரசு சுகாதாரப் பணியாளர்கள், உடலில் பொருத்தும் கருத்தடை சாதனமான ஜாடெல் - I ஏற்கும்படி பெண்களை கட்டாயப் படுத்தினார்கள்.[41] என ஐயத்துக்கிடமற்ற வகையில் முடிவாகக் கூறியிருக்கிறார்கள்.

இந்த மற்றும் வேறுவகை கருத்தடை முறைகள் சிறிலங்காவின் ஏனைய கிராமங்களிலும், பிராந்தியங்களிலும் இடம்பெறுகின்றனவா அல்லது அவர்கள் தமிழ் ஈழப் பகுதிகளை மட்டும் இலக்கு வைத்துச் செயற்படுகின்றனரா என்று உறுதிப்படுத்திக் கொள்ள மேலதிக ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். "பொது சுகாதாரப் பணியாளர்கள் இக்கருத்தடைச் சாதனங்களை அகற்றுவது தொடர்பாக எந்தக் கலந்துரையாடலையும் நேர்மையான முறையில் மேற்கொள்ளத் தவறி விட்டார்கள் என்பது தெளிவாக இருப்பதோடு அல்லது வேறு சந்தர்ப்பங்களில் சாதனத்தை அகற்றுவதற்கு பணம்செலுத்த வேண்டும் என்று குறித்த பெண்களுக்கு கூறியிருக்கிறார்கள் என்பது தெளிவானதாகும்" என ஷோஷல் ஆக்கிரெக்ஸ் அமைப்பு கூறியிருந்தாலும், இந்தச் சாதனங்களை ஒரு மருத்துவர் எந்த நேரத்திலும் அகற்ற முடியும் என்பதால் அதை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இந்த வகை கருத்தடை சாதனங்களை பொருத்துவதானது ஒரு குழுவின் உள்ளே பிறப்புகள் நிகழ்வதை தடுக்கும் உத்தேசத்துடன் வலிந்து நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் என்ற வகையில் இனப்படுகொலை தொடர்பான இணைக்கபாட்டால் கோரப்படும் தகுதியை பெறமாட்டாது என்பதையும் கவனிக்க வேண்டும்.

முடிவாக தீர்ப்பாயமானது ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலையானது ஒரு தொடருகின்ற செயல்முறை என்றும் இது வரையில் அது அவர்களுடைய அடையாளத்தை முற்றாக அழிக்க முடியாமல் போய்விட்ட ஒன்று என்றும் கண்டு கொண்டிருக்கிறது. இனஒழிப்பு ரீதியான ஒருங்கிணைக்கப்பட்ட செயல் திட்டமானது 2009 மேயில் உச்சக்கட்டத்தை எட்டியதெனினும் ஈழத் தமிழர் அடையாளத்தை அழித்து ஒழிப்பதற்கானதும் மேலே குறிப்பிடப்பட்ட நடத்தையால் சான்று காட்டப்பட்டு உறுதிப்படுத்தப் பட்டிருப்பதுமான சிறிலங்கா அரசின் செயல் திட்டமான இனஒழிப்பு செயல்முறை தொடர்ந்து கொண்டிருப்பதைக் காட்டுகிறது. இனஒழிப்பு மூலோபாயம் மாறியிருக்கிறது. படுகொலைகள் வேறு வடிவத்திலான செயற்பாடுகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் ஈழத்தமிழர் குழுவுக்கு கடுமையான உடல், உளரீதியான தீங்குகளை விளைவிப்பதன் மூலம் அந்தக் குழுவையும் அதனுடைய அடையாளத்தையும் அழிக்கும் உத்தேசம் இன்னமும் இருப்பதோடு தொடர்ந்து கொண்டும் இருக்கிறது.

---

39. வடக்கு கிழக்கில் போஷாக்கின்மை குறித்த அபாய எச்சரிக்கை. தமிழ்நெட் 28. அக்டோபர்.2013 இலிருந்து எடுக்கப்பட்டது. <http://www.tamilnet.com/art.html?catid=13&artid=36777>

40. சாந்தனி கிரிண்டே. "ஒரு போர் போராகவே" - சண்டே ரைம்ஸ் (கொழும்பு ஜுன் 05, 2011 இலிருந்து எடுக்கப்பட்டது. <http://sundaytimes.lk/110605/News/nws_20.html>

41. சட்டத்திற்கும் மேலான, சமூகச் சிற்பிகள்: இலங்கையின் வடக்கிலுள்ள பெண்களின் மகப்பேற்று உரிமைகள் மீதான வன்முறைகள் இலிருந்து எடுக்கப்பட்டது. <http://groundviews.org/2013/10/11/above-the-law-violations-of-womens-reproductive-rights-in-northern-sri-lanka/>

**முன்வைக்கப்பட்ட சான்றுகளின் வலுவில், சிறிலங்கா அரசானது ஈழம் தமிழருக்கு எதிரான இனப் படுகொலை குற்றவாளி என்றும் இந்த இனப் படுகொலையானது ஈழத் தமிழருக்கெதிரான இனப் படுகொலை செயற்பாடுகளுடன் இன்றைவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது என தீர்ப்பாயம் ஒத்திசைப்பான தீர்ப்பை எட்டியிருக்கிறது.**

### 5.2) உடந்தையாயிருத்தல் என்ற குற்றச்சாட்டு

ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக் குற்றத்தை சிறிலங்கா அரசும் அதனுடைய ஆயுதப் படைகளும் புரிந்திருப்பதாகவும் இனப்படுகொலை செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் தீர்ப்பாயம் நிர்ணயித்துக் கொண்டதைத் தொடர்ந்து அதனுடைய கவனத்தை சாட்டப்பட்ட குற்றச் சாட்டுகளில் எஞ்சியிருக்கும் குற்றச் சாட்டுகள் மீது திருப்புகிறது. இதிலே மேற்படி குற்றத்துக்கு உடந்தையாயிருந்தவர் என வேறு மூன்று நாடுகள் (ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் இந்தியா) மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

இந்த குறிப்பிட்ட குற்றச் சாட்டுகள் பற்றிக் கருத்திலெடுக்கும் முன்னதாக, இவ்வாறான நிர்ணயம் ஒன்றைச் செய்வதற்கு முன்னதாக ஒரு நாட்டினுடைய உடந்தையாயிருத்தலை நிர்ணயிப்பதற்கு என்னென்ன பொதுவான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதைக் கருத்திலெடுத்ததுடன், இந்த நிபந்தனைகள் சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கீழ் ஒரு தனிநபரின் உடந்தையாயிருத்தலை நிர்ணயிப்பதற்கான நிபந்தனைகளை ஒத்ததாயிருக்காது என்பதையும் நினைவில் கொண்டது.

இனப்படுகொலை உடன்பாட்டுடைய பகுதி III பந்தி e ஆன “இனப்படுகொலைக்கு உடந்தையாயிருத்தல்” இன் கீழ் ஒரு அரசு உடந்தையாயிருந்ததை நிர்ணயிக்க அவசியமான நிபந்தனைகள் பற்றி தீர்ப்பாயம் கருத்திலெடுத்து, சர்வதேச சட்டத்தின் கீழ் நேரடியான பொருத்தப்பாடு கொண்ட ஒரேயொரு சட்டவியல் ரீதியான கோட்பாடாக 2007 பெப்ரவரியில் சர்வதேச நீதிமன்றம் வழங்கிய (பொஸ்னியா ஹெரஸெகோவினா -எதிர்- சேர்ப்பியா- மொண்ரிநீக்றோ) தீர்ப்பு இருக்கிறது. இத்தீர்ப்பிலே நீதிமன்று பின்வருமாறு கூறியிருந்தது:

“பொது உடன்பாட்டினுடைய பகுதி IIIபந்தி(e) இன் கருத்தின்படி, குற்றத்தை நிகழ்துவதை இயலுமானபடி அல்லது அதற்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கான வழிகளை ஏற்பாடு செய்து தருவதையும் உள்ளடக்குகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அந்த வகையிலே இந்த அம்சத்தின் மீதுதான் நீதிமன்று கவனம் செலுத்த வேண்டும், இது தொடர்பிலே “உடந்தையாயிருத்தல்” என்ற வகையிலான விடயமானது சர்வதேச பொறுப்புக் கூறும் சட்டத்தினுடைய நிகழ்கால பதப்பிரயோகங்களிலே இருக்கின்ற நியதியாக இல்லாவிட்டாலும் ஒரு நாட்டுக்கு எதிராக தவறான செயற்பாட்டை மேற்கொள்ள இன்னொரு நாடு வழங்கும் உதவி அல்லது ஒத்தாசை தொடர்பிலான சர்வதேச பொறுப்புக் கூறும் மரபுவழி சட்டத்தை உருவாக்கும் விதிகளில் காணப்படுவதை ஒத்ததாக அது இருப்பதைக் கவனிப்பது பெறுமதியானதாகும்” (பந்தி 419)

இது தொடர்பாக (சர்வதேச சட்ட ஆணைக்குழுவின் அரசுகளின் பொறுப்பு தொடர்பான மரபுவழி விதி ஒன்றைப் பிரதிபலிக்கின்றதான பிரிவு 16ஐ இற்கே குறிப்பிட்டாக வேண்டும் இங்கே விதி பின்வருமாறு தெரிவிக்கின்றது.

**“பிரிவு 16**

*சர்வதேச ரீதியாக தவறான செயற்பாடு ஒன்றை நிகழ்த்துவதற்கு உதவி அல்லது ஒத்தாசை வழங்குதல்*

சர்வதேச ரீதியாக தவறான ஒரு செயற்பாட்டை ஒரு அரசு நிகழ்த்த அவ்வரசுக்கு உதவி அல்லது ஒத்தாசை வழங்கும் ஒரு அரசு பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அக்குற்றத்துக்கு பொறுப்பாக இருக்கும்:

அ) சர்வதேச ரீதியாக தவறான செயற்பாட்டின் சூழ்நிலைகளை அறிந்திருக்கும் நிலையில் அதனை செய்தல்.

ஆ) அந்த அரசினால் அச்செயற்பாடு நிகழ்த்தப் பட்டால் அது சா்வதேச ரீதியாக தவறானதாக இருக்கும்.”

தீா்ப்பாயத்துக்கு தனிநபா்கள் மேல் குற்றம் சாட்டமுடியாது என்பதோடு மேலே கூறப்பட்டது போல் சா்வதேச குற்றவியல் சட்டங்களின் கீழ் உடந்தையாயிருப்பதற்கான தனிப்பட்ட பொறுப்பை நிா்ணயிப்பதற்கான தேவைகள் ஒருவகையில் வேறு பட்டவையாக இருப்பதோடு உடந்தையாயிருத்தல் எந்த வடிவங்களை எடுக்கலாம் என்பது பற்றி சா்வதேச குற்றவியல் நீதிமன்றங்களின் முன்னைய நிா்ணயங்களை எடுத்து நோக்குவது அறிவூட்டுவதாக அமையலாம். குறிப்பாக அக்காயேசுவில் இடம் பெற்ற றுவாண்டாவுக்கான சா்வதேச குற்றவியல் நீதிமன்றினுடைய விசாரணை மண்டபத்தினா் இனப்படுகொலை எடுக்கக்கூடியதென நிா்ணயம் செய்திருக்கும் மூன்று வடிவங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

*“இனப்படுகொலையை நிகழ்த்துவதற்கான ஆயுதங்கள் மற்றும் கருவிகள் அல்லது வேறு வகையின போன்ற துணைப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு உடந்தையாயிருத்தல் இந்தப் பொருட்கள் அவ்வாறான தேவைகளுக்கு பயன்படுத்தப்படப்போகின்றன என்பதை உடந்தையாயிருப்பவா் அறிந்திருத்தல்;*

*“….ஒரு இனப்படுகொலையை நிகழ்த்தப் போகிறவருக்கு இனப்படுகொலையைத் திட்டமிடுதல் அல்லது அது தொடா்பான செயற்பாடுகளுக்கு அவைபற்றி அறிந்து கொண்டே உதவுதல் அல்லது ஒத்தாசை வழங்குதல்….தூண்டுதல் மூலம் உடந்தையாயிருத்தல்;*

*“ஒருவா் இனப்படுகொலை குற்றம் என்ற குற்றம் (அவா் கூறியிருப்பது போலவே) புரிவதில் நேரடியாக பங்கு பற்றாவிட்டாலும், பரிசுகள், வாக்குறுதிகள், அச்சுறுத்தல், அதிகாரத் துஷ்பிரயோகம், சதி, குற்றம் சாட்டக்கூடிய சூழ்ச்சி ஆகியவை மூலம் இனப்படுகொலை நிகழ்த்த அறிவுறுத்தல் விடுத்தல் அல்லது நேரடியாக தூண்டிவிட்டமைக்காக ஒருவா் தண்டிக்கப்பட முடியும். (பந்தி 536, முனைப்புப் படுத்தல் சேர்க்கப்பட்டுள்ளது.)*

இந்த ஆரம்பக் குறிப்புகளிலே கருத்திலெடுக்கப்பட வேண்டிய மேலும் ஒரு பொதுவான விடயமாக உத்தேசம் இருக்கிறது.

பொஸ்னியா – ஹொ்ஸகோவினா -எதிர்- சோ்ப்பியா – மொண்ரிநீக்ரோ வழக்கிலே சா்வதேச நீதிமன்றம்செய்திருக்கும் நிா்ணயம் ஒன்றிலே இனப்படுகொலை நிகழ்ந்திருந்தால், முதல்நிலை குற்றவாளியின் குறிப்பான உத்தேசம் (dolus specialis) பற்றி குறித்த அரசு அறிந்திருக்க வேண்டும் என்பது மேலதிகமான ஒரு தேவையாக இருக்கிறது :

*…இனப்படுகொலை என்ற குற்றத்தை நிகழ்த்தும் ஒருவருக்கு உதவி அல்லது ஒத்தாசை வழங்கும் ஒரு அங்கம் அல்லது நபரின் நடத்தையானது, ஆகக்குறைந்தது அறிந்தே அவ்வாறு செயற்பட்டிருந்தாலொழிய, அதாவது, குறிப்பாக முதல் நிலை குற்றவாளியினுடைய குறிப்பான உத்தேசம் ( dolus specialis) பற்றி அறிந்திருந்தாலொழிய இனப்படுகொலைக்கு உடந்தையாய் இருத்தல் என்று கருதப்படமுடியாது. இந்த நிபந்தனை பூா்த்தி செய்யப்படா விட்டால் உடந்தையாயிருத்தல் என்ற வகைப்படுத்தலில் இருந்து நீக்கி விடுவதற்கு அது போதுமானதாகும்.(பந்தி 421).*

இந்த ஆரம்ப அவதானிப்புகளை தெரிவித்ததை தொடா்ந்து இந்தத் தீா்ப்பாயமானது, மூன்று அரசுகளுக்கும் எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளை ஆராயப் போகிறது. அத்துடன் வேறு ஏதாவது அரசுகளும் ஈழத்தமிழா்களுக்கு எதிராக சிறிலங்கா அரசும் அதன் ஆயுதப்படைகளும் நிகழ்த்தியிருக்கும் இனப்படுகொலைக் குற்றத்திற்கு உடந்தையாய் இருக்கிறாா்களா என்பதுடன் அல்லது இன்றுவரைக்கும் உடந்தையாய் இருக்கிறாா்களா என்பது பற்றியும் ஆராயப் போகிறது.

**5.2.1. பிரித்தானிய அரசு உடந்தையாயிருந்தது என்று கூறப்படுதல்.**

பிரித்தானிய அரசானது, 1976ம் ஆண்டில், த.வி.புலிகள் உருவாகுவதற்கு நீண்டகாலம் முன்னதாக விருந்து, 2009 மேயில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான சிறிலங்கா அரசினுடைய பல தசாப்த காலப்போரின்

இறுதிக்கட்டம் வரை, ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக் குற்றத்துக்கு உடந்தையாயிருக்கிறது என்பதற்கான ஆவணரீதியான சான்றுகள் மற்றும் சாட்சியங்கள் தீர்ப்பாயத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

தீர்ப்பாயத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பொருள் ரீதியான சான்றுகளின் அடிப்படையில், பிரித்தானிய அரசானது, அக்காயேசுவில் இடம்பெற்ற, விசாரணை மன்றம் செய்த நிர்ணயங்களால் குறிப்பிடப்படும் உடந்தையாயிருத்தலின் மூன்று தெளிவான வடிவங்களில் இரண்டில், சிறப்பாக, "துணைப்பொருள் கொள்வனவுக்கு உடந்தையாயிருத்தல் ……" மற்றும் "இனப்படுகொலை தொடர்பான திட்டமிடல் மற்றும் இயலுமையளித்தலில் அக்குற்றத்தை புரிந்தவருக்கு தெரிந்து கொண்டே உடந்தையாயிருத்தல் …" முதலியவற்றில் குற்றவாளியாக இருக்கிறது என்றே தோன்றுகிறது.

1971 ஏப்ரல் அளவிலான முற்காலப் பகுதியிலேயே அப்போது இலங்கை என அழைக்கப்பட்ட சிறிலங்காவிலே, இருக்கக்கூடிய எந்த ஒரு கிளர்ச்சியாளர்களையும் "ஒழித்துக் கட்டுவதில்" கொழும்பு கொண்டிருந்த "உறுதிப்பாட்டை" முழுமையாக உணர்ந்து கொண்டிருந்ததை பிரித்தானிய அரசு வெளிக் காட்டியிருந்தது. சிறிலங்காவுக்கு ( அப்போது இலங்கை) ஆயுதங்கள் விற்பனை செய்ததன் பொருத்தப் பாட்டை பற்றி மக்கள் அவையிலே எழுப்பப்பட்ட நேரடிச் சவாலுக்கு பதிலளித்த வெளியுறவுச் செயலர், அலெக் டக்ளஸ் ஹோம் (கொழும்புக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே) மத்தியஸ்தம் எதற்கும் சிறிலங்கா அரசு கோரவில்லை என்றும் அவர்களால் முடிந்தால் இந்த அதிதீவிர வாத கிளர்ச்சியாளர்களை தங்கள் நாட்டில் ஒழித்துக் கட்ட உறுதி பூண்டிருக்கின்றனர் என்று வலியுறுத்தியுறுத்தினார்.[42]

அடுத்த நாள், ராம் டால்யெல் பா.உ., வெளியுறவுச் செயலருக்கு அனுப்பி வைத்த கடிதம் ஒன்றில், "இலங்கை அரசு 'மத்தியஸ்தம் தேவையில்லை' என்ற நிலைப்பாட்டை எடுப்பது நல்ல விடயம்தான். நாங்கள் உலங்குவானூர்திகளை அவர்களுக்கு கிடைக்கும்படி செய்தால், இவ்வாறான புறமொதுக்கலை நாம் ஏன் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. நீங்கள் பயன்படுத்திய 'ஒழித்துக் கட்டுதல்' என்ற பதத்துக்கு அர்த்தம் என்ன? பிரித்தானிய ஆயுதங்களால் எவரையும், அதிதீவிரவாத கிளர்ச்சியாளர்களைக் கூட, ஒழித்துக் கட்டுவதற்கு இனிமேல் ஆதரவளிப்பதற்கு முன்னால் இவைபற்றி பல விடயங்கள் எமக்கு தெரிந்தாக வேண்டும்." என்று எழுதியிருந்தார்.

இதே நாளன்று, பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலக தென் ஆசிய பிரிவின் தலைவர், முதுநிலை குடிசார் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்த கடிதமொன்றிலே, இலங்கை அரசுக்கு பிரித்தானிய ஆயுதங்களை வழங்கியதன் பின்னால் இருந்த அரசினுடைய மூலோபாய ரீதியான அடிப்படைக் கோட்பாடு பற்றி பின்வருமாறு விளக்கியிருந்தார்:

> *"பிரித்தானிய வர்த்தக நலன்கள் மற்றும் அரசியல் மூலோபாய நலன்கள் இரண்டினதும் கோணத்திலிருந்து பார்க்கும் போது திரு. மக்கின் ரொஷ் (கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகர்) ஆலோசனை வழங்குவது போல், எங்களால் முடிந்த அளவிலும், இலங்கைக்கு உண்மையாகவே தேவைப்படுவது என நாம் கருதுவதுமான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதை தொடர்வதன் மூலம் பொதுவாகவே ஒரு உதவிகரமானதும் அனுதாப இயல்பினதுமான நிலைப்பாட்டை பேணுவதற்கு முயற்சி செய்வதே சரியான செயற்பாட்டு முறையாகும்".*[43]

வரலாற்று ரீதியாகவும், 2009 மேயில் இடம் பெற்ற தமிழருக்கு எதிரான போரின் இறுதிக்கட்டம் வரைக்கும் மற்றும் இன்று வரைக்கும் யார் கொழும்பில் அதிகாரத்தில் இருந்தாலென்ன, வெளியக நிகழ்வுருவாக்கங்கள் எப்படியானவையாக இருந்தாலென்ன, சிறிலங்கா தொடர்பான பிரித்தானியாவின் கொள்கையானது, அதனுடைய

42. ஹான்ஸாட் எச். பி. டெப், 26 ஏப் 1971, தொகுதி 816, CC33-4

43. பிரித்தானிய தேசிய ஆவணக்காப்பகம் FCO37/787

உள்நாட்டு விவகாரங்கள் உள்ளிட்டதாக பிரித்தானிய மூலோபாய மற்றும் வா்த்தக ரீதியான நலன்களை விடாப்பிடியாக முன்னெடுப்பதை பற்றுக் கோடாகக் கொண்டதாகவே இருந்தது. சிங்கள ஒற்றையாட்சிக்கு அச்சுறுத்தலாக இருப்பவா்கள் சிங்கள சந்தா்ப்ப வாதிகளாக இருந்தாலென்ன, சுயநிர்ணயம் தேடும் தமிழா்களாக இருந்தாலென்ன, அவா்களைப் பொறுத்தவரையிலான கொழும்பின் நிலைப்பாடாக "ஒழித்துக் கட்டுதலே" இருக்கிறது என்று அறிந்திருந்தது உட்பட எதுவுமே பிரித்தானிய கொள்கையை மாற்றிவிடவில்லை.

இலங்கை சுதந்திரமடைந்த நாளுக்கு முந்திய நாளிலே, வான்படை ஆளணியினா் தலைவா், மைய அரச பொது ஆளணியினா் தலைவா் மற்றும் கடற்படை ஆளணியினா் உபதலைவா் ஆகியோரால் உருவாக்கப் பட்டதும் "மிகமிக இரகசியம் என அடையாளம் இடப்பட்டதுமான ஒரு ஆவணம் பின்வருமாறு குறிப்பாக எச்சரித்திருந்தது :

"உள்ளகப் பாதுகாப்புக்கு இலங்கை அரசு பொறுப்பாக இருக்க வேண்டுமெனினும் தற்போதைய சூழ்நிலையின் நிகழ்வைக் கட்டுப்படுத்துவதானது அதனுடைய இயலுமைக்கு அப்பாற்பட்டதாக இருப்பதோடு, எமது பாதுகாப்பு நலன்களும் அச்சுறுத்தலுக்குட்பட்டிருப்பதால், எமது நலன்களைப் பாதுகாக்கவென படைகள் ஈடுபடுத்தி தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கான உரிமையை எமது வசம் வைத்துக் கொள்ளவேண்டும்".[44]

இலங்கை அல்லது சிறிலங்காவிலான, பிரிட்டனது முதல்நிலை மூலோபாய நலன் என்பது, றோயல் கடற்படைக்கு மிக முக்கியமான ஆழ்கடல் துறைமுகமான திருகோணமலையை எட்டுவதை உறுதி செய்வதோடு தொடா்பு பட்டதாகவே எப்போதும் இருந்துள்ளது. 1956 ஒக்ரோபா் 29ம் திகதி பிரித்தானிய-பிரெஞ்சு-இஸ்ரேலிய படையினா் சூயஸ் கால்வாயை ஆக்கிரமித்ததை தொடா்ந்து வந்த நாட்களிலே, லண்டனும் கொழும்பும் இலங்கையிலிருந்து றோயல் கடற்படையின் வசதிகளை மீளப்பெறுவது பற்றிய பேச்சு வாா்த்தைகளில் ஈடுபட்டிருந்தன. அந்த வேளையிலே பிரித்தானிய கடற்படைத் தலைமையகம், பொதுநலவாய உறவுகள் செயலகத்துக்கு பின்வருமாறு கடிதம் எழுதியிருந்தது,

*"(எகிப்துடனான) பகைமைகள் தொடங்கியபின் எரிபொருள் நிரப்புதல் வெடிபொருள் ஏற்றுதல் மற்றும் களஞ்சியப் படுத்தல் முதலியவற்றுக்கு திருகோணமலைத் துறைமுகத்தைப் பயன்படுத்துவதற்கு மறுப்பு தெரிவிப்பதென்பது கடற்படையின் நோக்கிலே ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்று வலியுறுத்தவும். நாம் சிங்கப்பூரிலிருந்து நாசகாரிகளுக்கு வலுவூட்டும் கலங்களை கொண்டு வரக்கூடும். திருகோண மலையில் எரிபொருளை மீள் நிரப்பல் செய்யாமல் அவற்றால் ஏடனை எட்ட முடியாது.*[45]

மீண்டும் 1971ம் ஆண்டில் அமைச்சரவை மற்றும் பாதுகாப்பு மற்றும் கடல் கடந்த கொள்கைச் செயற்குழுவுக்கான வெளியுறவுச் செயலா், பிரித்தானியாவின் நலன்களைப் பொறுத்தவரை சிறிலங்கா எவ்வளவு அதியுயா் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை பின்வரும் பதங்களால் வலியுறுத்தியிருந்தாா்.

*"இந்து சமுத்திர கப்பற் போக்குவரத்து பாதைகளைப் பொறுத்தவரை, எமக்கு விரோதமான சக்திகள், இலங்கையில் உள்ள தளங்களைப் பயன்படுத்த விடக்கூடாது என்பதே எம் விருப்பமாகும். எனவே,இலங்கை தொடா்பான எமது எதிர்கால கொள்கைகளை வகுக்கும்பொழுது, செயல்முனைப்பான முறையிலே எம்மோடு விரோதம் பாராட்டக்கூடிய இலங்கைக்காக செலுத்தப்பட வேண்டிய விலை குறித்தும் நாம் கருத்திலெடுக்க வேண்டும். இந்திய உபகண்டத்தின் நிலை பேற்றுத் தன்மைமீதும் இந்து சமுத்திர கப்பற் போக்குவரத்து பாதைகளின் பாதுகாப்பின் மீதும் அது ஏற்படுத்தக்கூடிய விளைவுகளின் அடிப்படையில் சொல்வதானால், முக்கியமான பிரித்தானிய நலன்களுக்கு பாதிப்பை விளைவிப்பதாக இது இருக்கலாம். எனவே இலங்கை*

44. அமைச்சரவைக்கென தயாரிக்கப்பட்ட ஆவணம், 9 யூன் 1947, மிகமிக இரகசியம் என அடையாளம் இடப்பட்டது, உசாத்துணை CP (47) 179. <http://www.tamilnet.com/img/publish/2013/12/1947_06_09-CAB:129:19.pdf>

45. தேசிய ஆவணக்காப்பகம் UK, DO 35/6571

*அரசுடன் ஒரு திருப்திகரமான இருதரப்பு-உறவுகளை எம்மால் முடிந்த அளவுக்கு பேணவேண்டும் என்பதே என் முடிவாகும்."*[46]

கொழும்புடன் "ஒரு திருப்திகரமான இருதரப்பு உறவுகளைப் பேணுவது" என்பது, பிரித்தானிய மத்திய அரசுக்கு உதவுவதாக, குறிப்பாக, மைய சிங்கள பௌத்த ஒற்றையாட்சி அரசுக்கு ஏற்படக்கூடிய எந்த ஒரு அச்சுறுத்தலையும் அழித்தொழிக்கும், சிறிலங்கா ஆயுதப்படைகளின், பலரறிந்த பணிக்கு உதவுவது அமையும்.

1983இல் புலிகளினுடைய ஆயுதம் தாங்கிய எதிர்ப்பியக்கம் தமிழ் மக்களிடையே மிகுந்த ஆதரவைப் பெற்றபோது, சிறிலங்கா பொலிஸ் படையினர், "கிளர்ச்சி முறியடிப்புக்கான துணைப்படை (பயிற்சி)" மற்றும் "கமாண்டோ நடவடிக்கைகள் பயிற்சி" அடங்கலான 16 துறைகளில் பயிற்சி வழங்கும்படி ஐக்கிய இராச்சியத்தை கேட்டுக் கொண்டனர்.

பிரித்தானிய வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலகம், (FCO) " இந்த பயிற்சி நெறிகளில் சிறிலங்கா அரசுக்கு எங்களால் முடிந்த அளவுக்கு (காலமறிந்து) உதவும் விருப்பம் இருக்கிறது என்று பதிலனுப்பியது.[47]

சிறிலங்கா பொலிசுக்கான ஐக்கிய இராச்சியத்தின் உதவிகள்(1983 )எனப் பெயரிட்ட FCO இன் கோவையின்படி இரண்டு முதுநிலை பொலிஸ் அதிகாரிகளான, முதுநிலை பிரதி பொலிஸ் மாஅதிபர் எச். டபிள்யூ.எச்.வீரசிங்கவும் உதவி அத்தியட்சகர் கே.எஸ்.பதிவிற்ரவும் "கிளர்ச்சி முறியடிப்பில் பொலிசும் இராணுவமும் வகிக்கும் பங்கு பற்றி நேரடியாக கண்டு கொள்வதற்கென" 1983 யூனில் பெல்பாஸ்ற்ருக்கு ஆய்வு பயணம் ஒன்றை மேற்கொண்டார்கள்.[48] இதற்கு மேலதிகமாக, பயங்கரவாத முறியடிப்பு முறைகள் மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் நிலை கொண்டு சிறிலங்காவில் தனிநாடு ஒன்றைக் கோரி போராட்டங்களை நடத்தும் அமைப்புகள் ஆகியவை பற்றி தெரிந்து கொள்வதற்கென, சிறப்பு பிரிவு (நகரப் பொலிஸ் லண்டன்) க்கு செல்வதற்கான அனுமதியையும் இந்த அதிகாரிகள் கோரினார்கள்.[49] அவர்களுடைய வருகையின் போது, அவர்கள் றோயல் உல்ஸ்ரர் பொலிஸ் பிரிவின் ஐரிஷ் குடியரசு இராணுவத்துக்கு எதிரான நடவடிக்கைகளை அவர்கள் அவதானித்ததோடு இந்த வருகையானது தமிழர்களுக்கு எதிரான கறுப்பு யூலை படுகொலைகள் நிகழ்வதற்கு ஒரு மாதம் முன்னதாக இடம்பெற்றிருந்தது. முரண்பாடுகள் அதிகரிப்பில், முக்கிய திருப்புமுனையாக இந்த கறுப்பு யூலை நிகழ்வுகள் இருந்ததாகப் பரவலாகக் கருதப்படுகிறது.

சிறிலங்கா பொலிஸ் விசேட அதிரடிப் படையின் உத்தியோக பூர்வ இணையத்தளமானது, பிரித்தானிய அரசு முகவரமைப்புகள் நேரடியாக ஈடுபட்டதற்கு மேலதிகமாக, ஐக்கிய இராச்சியத்தில் இருக்கிறதும் பிரித்தானிய SAS இன் (விசேட வான்சேவைகள்) –முன்னாள் அதிகாரிகளை உள்ளடக்கியதுமான கினிமினி சேவை" (KMS) என அறியப்பட்ட ஒருநிறுவனம், விசேட அதிரடிப் படையின் அதிகாரிகளுக்குப் பயிற்சிகளை வழங்கியது என பதிவேற்றம் செய்திருக்கிறது. கற்பிக்கப்பட்ட விடயங்களிலே, கலகம் அடக்கும் படையினரால் கைக்கொள்ளப்படும் தந்திரோபாயங்கள், ஆயுதப்பயிற்சி, சூட்டுப்பயிற்சிகள், பயங்கரவாத முறியடிப்பு தேடுதல்கள், வெடிபொருட்களை கையாளுதல், வரைபடப் பயிற்சி, திசைகாட்டி உபகரணங்கள் மற்றும் முதலுதவி முதலியவை அடங்கியிருந்தன. அத்துடன் உலகப்புகழ்பெற்ற அமெரிக்க உற்பத்தி எம்16 தானியங்கித் துப்பாக்கியும் அறிமுகப்படுத்தப் பட்டது. இது, சர்வதேச ரீதியாக புகழ்பெறும் சிறப்பு படைவீரர்களுக்கு வழங்கப்படும் பச்சை பெரே (Green Beret - பச்சை தொப்பி) க்களுக்கு உரித்துடையவர்களாக விசேட அதிரடிப்படையினரை ஆக்கியது.[50]

---

46. தேசிய ஆவணக்காப்பகம் FCO37/790

47. சிறிலங்கா பொலிசுக்கான ஐ . இராச்சியம் உதவிகள். <https://www.dropbox.com/s/2ar7uqfg4beweio/UK-assistance-to-Sri-Lankan-Police_1983.pdf> FSC 382/1, இரகசியம்,

48. மேலே உள்ளது போல்

49. மேலே உள்ளது போல்

50. விசேட அதிரடிப்படையின் வரலாறு: <http://www.police.lk/index.php/special-task-force->

சிறிலங்கா அரசாங்கம், புலிகளுக்கு எதிராக அதனது பாதுகாப்பு, படைத்துறை, புலனாய்வு மற்றும் பொலிஸ் இயலுமைகள் முதலியவற்றை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளுக்கு பிரிட்டன் வழங்கிய ஒத்தாசையானது, ஈழத்தமிழர்களுக்கு எதிரான போரின், 2009 மேயில் இடம்பெற்ற இறுதிக் கட்டங்கள் வரை தொடர்ந்தது. FCO இனுடைய சொந்த பதிவுகளின்படி, “2006 ஏப்ரலில் சிறிலங்கா அரசாங்கம் உயர்பாதுகாப்பு (பாதுகாப்பு அமைச்சு), முகாமைத்துவம், பாதுகாப்பு கொள்கை உருவாக்கம் புலனாய்வு, பொலிஸ் பணிகள் முதலிய விடயப்பரப்புகளில் பாதுகாப்பு துறை உருமாற்றத்தில் ஐ.இராச்சியத்தின் உதவியை மரபொழுங்கின்படி கோரியது.[51] தமிழர்களுக்கு எதிரான கொழும்பின் போரினுடைய இறுதிக் கட்டங்களுக்கு ஒரு வருடம் முன்னராக, பிரித்தானியாவிலுள்ள றோயல் கடற்படையினர், சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷாவின் மகன்களில் ஒருவருக்கு பயிற்சிகளை அளித்துக்கொண்டிருந்தது.[52]

**ஈழத் தமிழர்களுடைய ஆயுதப் போராட்டத்தின் போதும், அது ஒடுக்கப்பட்ட போதுமான ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைகளுக்கு ஐ. இராச்சியத்தின் உடந்தையாயிருப்பானது வெளிப்படையானதாகவும் ஐயத்துக்கு இடமற்றதாகவும், அரசு பொறுப்புடைமை தொடர்பான சர்வதேச சட்ட ஆணைக் குழுவின், அரசு ஒன்றின் பொறுப்பு தொடர்பான பிரிவுக்கு கீழான 16வது சரத்தின் கீழ், “ஒரு அரசு தவறான செயற்பாட்டை மேற்கொள்வதற்கு இன்னொரு அரசு ‘உதவியும் ஒத்தாசையும்’ வழங்குதல்” இற்கு தகுதி பெறுவதாகவும் இருப்பதாக தீர்ப்பாயம்கண்டு கொண்டது.[53] மேலும் 2009 இல் இடம்பெற்ற நிகழ்வுகளை காலனித்துவ ஆட்சிக் காலப்பகுதிகளிலும் புதிதாக சுதந்திரம் பெற்ற சிறிலங்கா அரசை உருவாக்கும் காலப்பகுதியிலும் இடம்பெறச் செய்யப்பட்ட கட்டமைப்பு ரீதியான இனப்படுகொலைகளின் தர்க்க பூர்வமான வெளிப்படுத்தலாகவே தீர்ப்பாயம் கருதுகிறது.**

### 5.2.2. அமெரிக்காவின் மீதான உடந்தையாயிருத்தல் குற்றச்சாட்டு

1951ம் ஆண்டில், ‘வொய்ஸ் ஒப் அமெரிக்கா’ (அமெரிக்காவின் குரல்) வின் அஞ்சல் நிலையம் ஒன்றுக்கான வசதிகளை அளிப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அமெரிக்க தகவல் முகவரமைப்புக்குமிடையே ஒப்பந்தமொன்று செய்யப்பட்ட காலப்பகுதி தொடக்கம் அமெரிக்காவானது சிறிலங்காவுடன் ஒரு ஆழமான கட்டமைப்பு ரீதியான உறவைக் கொண்டிருக்கிறது. மேற்படி அஞ்சல் நிலையம், 1983 அளவில் 500 ஏக்கர்களை உள்ளடக்குவதாகவும் ஆசியப் பிராந்தியத்தின் ஏராளமான பகுதிகளை எட்டக்கூடியதாகவும் வளர்ச்சியடைந்தது.[54]

1950 களிலிருந்து அமெரிக்க படைத்துறை அறிக்கைகள் தங்களுக்கு எட்டக்கூடியதாக கருதப்படும் கடற்படை இராணுவத்தளம் என்ற வகையிலே திருகோணமலையை அடையாளம் காட்டி வந்திருக்கின்றன.[55] 1977ம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததானது, மறைவானது என்றாலும் ஆழமான அமெரிக்க ஈடுபாட்டுக்கான புதிய வாய்ப்புகளை திறந்து விட்டது.

51. <http://www.fco.gov.uk/servlet/Frontpagename=OpenMarket/Xcelerate/ShowPage&c=Page&cid=1062157895923> (இந்தக் கட்டுரை மேற்குறித்த வெளிநாட்டமைச்சு இணையத்த முகவரி இணைப்பில் இப்போது காணப்படவில்லை. ஆனாலும், இலங்கை தொடர்பாக ஜேர்மனி பிரெமனில் 2013 டிசம்பர் 7ம் திகதி முதல் 10ம் திகதி வரையான நிரந்தரத் தீர்ப்பாயத்தில் முன்வைக்கப்பட்ட -- இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலையில் பிரித்தானிய அரசின் பங்கு என்ற சாட்சியத்தின் 1945 ற்குப் பின்னரான பகுதி 11 என்பன உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களினால் இது பரவலாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது)

52. சிறிலங்கா டெய்லி நியூஸ், 14ஜனவரி2008.

53. மேலே உள்ள பகுதி 5.2 ஐப் பார்க்கவும்.

54. றமேஸ் சோமசுந்தரம், சிறிலங்காவினுடைய மூலோபாய ரீதியான முக்கியத்துவம், சிறிலங்கா கொழும்பு : ஸ்ரம்போட் லேக், 2005, பக்.137

55. “1950 களில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் கிடைக்கக்கூடியதாக இருந்த கடற்படை வசதிகள்” மற்றும் “1980களில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கும் கடற்படை வசதிகள்” என தலைப்பிடப்பட்ட வரைபடங்களில் திருகோணமலை குறிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க படைத்துறை நிலைப்பாடு FY, 1981, அமெரிக்க வான்படை ஆளணியினரின் முன்னாள் தலைவரும் ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு கவுண்சில் மற்றும் பாதுகாப்பு செயலரின் முதுநிலை படைத்துறை ஆலோசகருமான ஜெனரல் டேவிட் சி. ஜோன்ஸ்சினால் தயாரிக்கப்பட்டது, பக் 49. இந்த வரைபடங்களின் பிரசுரிப்பானது சிறிலங்காவின் நாடாளுமன்றத்திலே

சிறிலங்காவும் இஸ்ரவேலும் இராஜதந்திர உறவுகளை மறித்துவிட்டிருந்த ஒரு சமயத்திலே, சிறிலங்கா விசேட அதிரடிப் படையினருக்கு பயிற்சியளித்தல் உள்ளிட்ட, இஸ்ரவேலின் ஈடுபடுதல்களுக்கு வசதியாயிருக்கும் விதத்தில், கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்தினுள்ளே, இஸ்ரவேல் நலன்காப்பு பிரிவு ஒன்றை நிறுவும் நோக்கில் 1982 ம் ஆண்டில், பரவலான பணிகளுக்கான தூதுவரும் மத்திய புலனாய்வு முகவரமைப்பின் (CIA) முன்னாள் பிரதிப் பணிப்பாளருமான ஜெனரல் வேணன். ஏ. வோல்ராஸ் சிறிலங்காவுக்கு வருகை தந்திருந்தார்.[56]

சிறிலங்காவுக்கு வெளிநாடுகளுக்கான படையப் பயிற்சிகளை வழங்குவது தொடர்பான உத்தியோகபூர்வ அடிப்படைக் கோட்பாடானது "அமெரிக்காவும் சிறிலங்காவும் சர்வதேச பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் வலுவான ஆர்வங்களை பகிர்ந்து கொண்டிருக்கின்றன. சிறிலங்காவானது அதன் வான்பிரதேசத்தினூடாக இடைமாறிச் செல்வதற்கு அனுமதித்தல், கப்பல்களை மற்றும் வான்கலங்களைத் திருத்துதல் முதலியவற்றிலும் 'டெஸர்ட்ஸ்றோம்' (பாலைவனப்புயல்), 'டெஸர்ட்ஷீல்ட்' (பாலைவனக் கேடயம்) போன்ற நடவடிக்கை ரீதியான பணிகள் மற்றும் அவற்றை விட அண்மையாக 'ஒப்பரேஷன் எண்டுயறிங் பிறீடம்' (நிலைத்திருக்கும் சுதந்திரம் நடவடிக்கை) (OEF) மற்றும் 'ஒப்பரேஷன் ஈராக்கி பிறீடம்' (ஈராக்கிய சுதந்திரம் நடவடிக்கை) (OIF) முதலியவற்றுக்கு ஆதரவு வழங்குதலிலும் ஒத்துழைப்போடு நடந்துகொண்டிருக்கிறது."[57] எனக் கூறுகிறது.

தொடர்ந்து கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கைகளுக்கான பதில் வினையாக ஏற்பட்ட (அமெரிக்க மக்களவையால் கைக்கொள்ளப்படும் லீஹி தணிக்கை செயல்முறை[58] போன்ற அழுத்தங்கள் காரணமாக சில வகைகளிலான அமெரிக்க படைய உதவிகள் மீது விதிக்கப்பட்ட வரையறைகளுக்கு மத்தியிலும் சிறிலங்கா அரசினுடைய படைய இயலுமைகளை வளம்படுத்தும் விதத்திலான பயிற்சிகளை அமெரிக்கா தொடர்ந்தும் வழங்கியது

1996 ம் ஆண்டில் தாங்கள் புதிதாக பெற்றுக் கொண்டிருந்த மரபுவழி இராணுவ இயலுமைகளை முல்லைத்தீவு இராணுவதளத்தை கைப்பற்றியதன் மூலம் புலிகள் நிகழ்த்திக் காட்டிய பின்னர் அமெரிக்க சிறப்புப்படைகள் கொரில்லா முறியடிப்பு போர் முறையின்மீது கவனத்தை செலுத்திய "ஒப்பரேஷன் பலனஸ்ட் ஸ்ரைல்" (சமநிலைப் படுத்தப்பட்ட பாணி நடவடிக்கை) போன்ற உத்தியோக பூர்வ படைத்துறை அப்பியாசங்களின் தொடர் ஒன்றில் சிறிலங்காவுடன் இணைந்து ஈடுபட்டன.[59]

*அமெரிக்காவின் மிகுதிறன் கிறீன்பெரே கமாண்டோக்களைக் கொண்ட அணியொன்று, பயங்கரவாத முறியடிப்பு உத்திகளில் துருப்புகளுக்கு பயிற்சி அளிக்கவென சிறிலங்கா வந்திருந்தது. கடந்த வருடம் மார்ச்*

---

ஒரு விவாதத்துக்கும் வழிகோலியதுடன், அவ்விவாதத்தின் போது இவ்வரைபடங்களில் திருகோணமலை உள்ளடக்கப்பட்டிருப்பது "ஒரு அச்சுப் பிழை"யென பிரதமர் ரணசிங்க பிரேமதாசாவினால் விவரிக்கப்பட்டது. எவ்வாறெனினும் இந்த பிரசுரங்கள் அமெரிக்காவினால் மீளப்பெறப்படவில்லை என்பதோடு திருகோணமலை வகிக்கும் பாத்திரம் பற்றிய இந்த நோக்கு சமகால அமெரிக்க செய்தித்தாள் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருந்தது, "உரிய காலத்தில் திருகோணமலையானது ஓய்வு மற்றும் பொழுது போக்கு வசதிகளை வழங்கும் நகரமாக ஆகிவிடும்" வோஷிங்ரன் போஸ்ற், 25 ஒக்ரோபர் 1981

56. 2000 மேயில் இராசதந்திர உறவுகள் மீள நிறுவப்பட்டது தொடர்பாக, இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சினுடைய இணையத்தளத்திலே உத்தியோக பூர்வமாக கூறப்பட்டிருப்பது போல், 1950 களில் இராசதந்திர உறவுகளை ஏற்படுத்தி கொண்டதிலிருந்து இஸ்ரேலும் சிறிலங்காவும் தங்கள் உறவில் பல எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் கண்டிருக்கின்றன. சிறிலங்கா பல சந்தர்ப்பங்களிலே இராசதந்திர உறவுகளை துண்டித்திருந்தாலும் பின்னர் தமிழ் புலிகளுக்கு எதிராக நடந்து கொண்டிருந்த போராட்டத்தைக் கருத்தில் கொண்டு, பலதுறைகளிலும், உதவி கோரியுள்ளது. <http://mfa.gov.il/MFA/ForeignPolicy/MFADocuments/Yearbook13/Pages/108%20%20Joint%20communiqu-eacute-%20regarding%20the%20re-esta.aspx> இலிருந்து பெறப்பட்டது

57. வெளிநாட்டுக்கான படைய பயிற்சி மக்களவைக்கான இணைஅறிக்கைகள், நிதிவருடங்கள் 2006 மற்றும் 2007, அரசியல் - படைதுறை விவகாரபிரிவு, தொகுதி 1, ஒகஸ்ற்.2007 , பக்,141.

58. மனித உரிமைகள் தொடர்பான "லீஹி தணிக்கை செயல் முறையின் மேலாய்வு"அமெரிக்க இராஜாங்க திணைகளத்தின் சனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் தொடர்பான பிரிவில் உள்ள கொள்கை வகுப்பு மற்றும் பகிரங்க இராஜதந்திர அலுவலகத்தினால் முகாமை செய்யப்படும் அரச இணையத்தளம். <www.humanrights.gov/2013/07/09/an-overview-of-the-leahy-vetting-process/>

59. அத்தாஸ் இக்பால் "2 துணிகரமான வீரர்கள் அமைச்சரை காப்பாற்றிய விதம்" சண்டே ரைம்ஸ், 07யூலை 1996, <http://www.sundaytimes.lk/960707/sitrep.html> இலிருந்து பெறப்பட்டது.

*மாதத்தில், சிறிலங்கா துருப்புகளுக்கு பயங்கரவாதத்தை எதிர்த்து போராடுவதற்கு பயிற்சி அளிப்பதற்கென ஆரம்பித்து வைக்கப்பட்டு தொடர்ந்து கொண்டிருந்த ஒப்பரேஷன் பலன்ஸ்ரைலின் கீழ் வருகை தந்த மூன்றாவது தொகுதி வீரர்களாக இவர்கள் இருந்தனர். அது வரையிலே அமெரிக்க படைத்துறை உதவிகள், சர்வதேச படைத்துறை பரிமாற்றம் மற்றும் பயிற்சி திட்டத்தின் (IMET) கீழ் அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்டு இருந்தன. கடந்த வாரம் இந்த அணிவந்து சேர்ந்திருப்பதானது, புதன்கிழமையன்று அமெரிக்க அரசு புலிகளை பயங்கரவாத அமைப்பாக பட்டியலிடுவதற்கான முடிவை எடுத்திருப்பதினால் மட்டுமல்லாது, கொழும்பு – வோஷிங்ரன் உறவுகள் குத்துக்கரணம் அடித்து விட்டதாக, ஊடகங்களின் ஒரு சிறுபகுதியில், காட்டும் முயற்சியென அரசுத் தலைவர்கள் கருதியது காரணமாகவும், மேலதிக முக்கியத்துவத்தை பெற்றுக் கொண்டிருக்கிறது. அமெரிக்க தூதுவராலயத்தில் இருக்கும் பாதுகாப்பு ஆலோசகரான லெப். கேணல் ஹரோல்ட் மைக்கல் பூர், "இந்த வருடம் மேலும் மூன்று அப்பியாசங்களை மேற்கொள்ள அமெரிக்கா உத்தேசித்திருக்கிறது. இந்த அப்பியாசங்கள் 30 நாட்கள் காலப்பகுதியில் அண்ணளவாக 12 இலிருந்த 20 வரையான அமெரிக்க படையினரை கொண்டு நடத்தப்படும்" எனசண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு கூறியுள்ளார்.*[60]

ஒரு சமகால செய்தித்தாள் இந்த நிகழ்வுருவாக்கத்தின் இரகசியத் தன்மையை கவனித்திருந்தது.[61]

2000 ஆண்டிலே, வன்னியின் கட்டுப்பாட்டை புலிகள் பெற இருந்த வேளையிலே ஆரம்பித்த 'ஒப்பரேஷன் பிளாஷ் ஸ்ரைல்' நடவடிக்கை மூலம், அமெரிக்காவின் படைவீரர்களின் அணிகள், சிறிலங்கா படைத்துறையினருக்கு பயிற்சிகளை வழங்கின. அமெரிக்க கடற்படையின் ஒரு சீல் அணி மற்றும் அதன் சிறப்பு படகு ஸ்குவாட்ரன் (6வது சிறப்பு படகு ஸ்குவாட்ரன்) ஆகியவற்றைவிட அமெரிக்க விமானப்படையினர் சிறிலங்கா விமானப் படையினருக்கு பயிற்சிகளை அளித்துக் கொண்டிருந்த அதேவேளை, அமெரிக்க இராணுவ உளவியல் நடவடிக்கைகள் குழுவினுடைய மூன்றாவது அணியொன்று சிறிலங்கா இராணுவத்தின் உளவியல் நடவடிக்கைகள் பணிப்பகத்தின் ஆளணியினரை பயிற்றுவித்தது.[62]

ஆனால் இந்த ஆதரவுகள் எல்லாமே களயதார்த்தங்களை மாற்றத் தவறிவிட்டதோடு, புலிகள் மேலும் நிலப்பகுதிகளை கைப்பற்றி, 2001 ம் ஆண்டில் பதவியேற்ற றணில் விக்கிரமசிங்க அரசை, யுத்த நிறுத்தமொன்றை ஏற்கும் நிலைக்கு கொண்டு வந்ததோடு, அந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் அடுத்த வருடத்தில் கையெழுத்தாகியது.[63] இருந்தும் இந்த சமாதான செயல்முறைக் காலத்திலும் அரசுடனான அமெரிக்க படைய ஈடுபாடுகள் மேலும் ஆழமடைந்தன. 2002 மார்ச்சிலே சிறிலங்காவுக்கான அமெரிக்க தூதுவர் ஆஷ்லி வில்ஸ், படைப் பிரிவுகளுக்குப் பயிற்சி வழங்குவதை உறுதிப்படுத்தியது மட்டுமில்லாமல் "படைத்துறை ட்ரக்குகள் அன்பளிப்பு செய்யப்பட்டது மற்றும் வேறு சில உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்டது"[64] பற்றியும் குறிப்பிட்டார். சமாதான செயல் முறைகளை தட்டுத் தடங்கலின்றி நடைமுறைப்படுத்துவதற்கு தீங்கு விளைவிக்கும் விதத்திலான செயற்பாடுகள் மற்றும் கருத்து வெளிப்பாடுகளை இராசாங்க திணைக்கள பேச்சாளர் றிச்சாட் பௌச்சர், தெற்காசியாவுக்கான

60. ஜான்ஸ், பிறெடறிக்கா "புலிகளை முறியடிக்க அமெரிக்க படையினர் உதவுவர்" சண்டேரைம்ஸ் 12 ஒக்ரோபர் 1997. <http://www.sundaytimes.lk/971012/frontm.html> இலிருந்து பெறப்பட்டது

61. அனேகமான கூட்டுப்படை பயிற்சிகளைப் போல, சிறிலங்காவிலான பணியை பென்ரகன் பகிரங்கப் படுத்தவில்லை. மனித உரிமை மீறல்கள், தனது படைத்துறையின் காலடியில் குவிக்கப்படுவது பற்றி கூருணர்வு கொண்டிருக்கும் அரசாங்கத்தினால் கடுமையாக தணிக்கை செய்யப்படும் சிறிலங்கா செய்தித்தாள்களிலும் குறிப்பிடப்படவில்லை" – கௌப்மான், ஆ. போரினால் சின்னாபின்னமாக்கப்பட்டிருக்கும் தீவு அமெரிக்க ஆலோசகர்களைப் பெறுகிறது" பிலடெல்பியா இங்குவைறர், 23யூன் 1996. <http://articles.philly.com/1996-06-23/news/25630233_1_tamil-tigers-tamil-eelam-liberation-tigers> இலிருந்து பெறப்பட்டது

62. அத்தாஸ், இ 'களநிலை அறிக்கை: 'போர் வருடத்தில்' 'ஒப்பரேஷன் பிளாஷ் ஸ்ரைல்'", சண்டே ரைம்ஸ் 6 பெப்ரவரி 2000, <http://www.sundaytimes.lk/000206/sitrep.html> இலிருந்து பெறப்பட்டது.

63. சிறிலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே 22பெப்ரவரி 2002 இல் கையெழுத்தான போர்நிறுத்த ஒப்பந்தமானது சிறிலங்கா மீதான முதலாவது மக்கள் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிலே ஆராயப்பட்டிருக்கிறது., பக் 11-12.

64. புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு என்பது தொடர்பான அமெரிக்க நிலைப்பாடு திரும்பவும் கூறப்பட்டுள்ளது" தஐலண்ட், 09மார்ச் 2002 <http://www.island.lk/2002/03/09/news02.html> இலிருந்து பெறப்பட்டது.

உதவி இராசாங்க செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா இராசாங்க பிரதி செயலாளர் றிச்சட் ஆமிற்ரேஜ் உட்பட பல்வேறு முதுநிலை அமெரிக்க அதிகாரிகளும் மேற்கொண்டனர். அமெரிக்க 3வது மறீன் முன்னோடி பிறிக்கேட் மற்றும் III மறீன் முன்னோடி படைகளின் கட்டளையிடும் ஜெனரலான, பிறிகேடியர் ஜெனரல் ரிமோதி கோர்ம்லி உடன் வர, மார்ச்சில் இத்தீவுக்கு வந்த உதவிச் செயலர் றொக்கா, "பயிற்சிகள் உள்ளிட்டதான படைத்துறை ஒத்துழைப்பு பற்றி கலந்துரையாடுவதே இவ்வருகையின் உத்தேசமாகும்"[65] என வெளிப்படையாகவே தெரிவித்தார்.

2002 இன் பிற்கூறுகளிலே அதாவது சமாதான ஒப்பந்தம் கையெழுத்தாகி கிட்டத்தட்ட ஏழே மாதங்களுக்கு பின்பு, அமெரிக்க பசுபிக் கட்டளையகத்திலிருந்து, 26 உறுப்பினர்கள் கொண்ட தூதுக்குழு ஒன்று, சிறிலங்காவினுடைய இராணுவம், கடற்படை வான்படைகளின் "இயலுமைகள் தேவைகள், அவசியங்கள்" தொடர்பாக விரிவான ஆய்வொன்றை மேற்கொள்ள சிறிலங்காவுக்கு வருகை தந்தது. முக்கியமான அனைத்து படைநிலைகளுக்கும் வருகை தந்தபின்[66] திருகோணமலைத் துறைமுகத்தின் தென்பகுதியானது, புலிகளின் முகாம்களால் சூழப்பட்டிருப்பதாக குறிப்பிட்டது. சமாதான செயல்முறை நடந்து கொண்டிருந்த போதிலும், இந்த அமெரிக்க அணியானது, நாட்டிலுள்ள தளங்களிலேயே ஆகமுக்கியமானதாக இந்த தளம் இருப்பதால் அங்கிருந்து பயன் விளைவான முறையிலே போரை முன்னெடுக்கும் விதத்திலே அத் தளத்தை பாதுகாப்பானதாக ஆக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது.

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இந்த துறைமுகத்தை பாதுகாக்க வேண்டுமெனில் திருகோணமலைக்கு தெற்காக உள்ள நிலப்பகுதிகள் புலிக் கொரில்லாக்களிடமிருந்து பாதுகாக்கப் பட்டவையாக பாதுகாப்பு படைகள் ஆக்கவேண்டுமென, உயர் அதிகாரம் வாய்ந்த அமெரிக்க படைத்துறை அணியொன்று தெரிவித்திருந்தது. 'தற்போது இருக்கின்ற இந்த ஆபத்துக்குட்படக்கூடிய நிலையானது சிறிலங்கா கடற்படை கப்பற் தொகுதியில் பெரும் பகுதியை நாசமாக்கி விடக்கூடும்' என எச்சரித்த அந்த அணியினர், இந்தப் பகுதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராவிட்டால் திருகோணமலைத் துறைமுகத்தை பாதுகாப்பது என்பது எப்போதும் தோல்வியடையும் சமராகவே இருக்கும் என்று கூறியிருக்கிறது. அத்துடன் 'போரை முன்னெடுப்பதற்கான இயலுமையானது தீங்கு விளைவிக்கும் விதத்திலே பாதிக்கப்பட்டு விடும்'[67] எனமேலும் அவ்வணி கூறியுள்ளது.

2006 யூலையிலே சிறிலங்கா அரசு போரை புதுப்பித்த போது, உண்மையாகவே, அமெரிக்க படைத்துறையின் பரிந்துரையின்படி திருகோணமலையை சூழ இருந்த புலிகளின் தளங்களை தாக்குவதன் மூலம் நடவடிக்கைகளைத் தொடங்கியது.

ஏப்ரல் 2003 இல், தொடர்ச்சியான ஆறு சமாதான பேச்சுகள் இடம் பெற்ற நிலையிலே, திடீரென வோஷிங்ரனிலே ஒரு ஆலோசகர் கூட்டத்துக்கான யோசனை அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டது. 1997 ஒக்ரோபர் 8ம் திகதியிலிருந்து த.வி.புலிகள் ஒரு வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பாக தடை செய்யப்பட்டு இருந்ததால் அவர்களால் இந்தக் கூட்டத்தில் பங்குபற்ற முடியவில்லை. "வோஷிங்ரன் நிகழ்வு"என அறியப்பட்ட இந்த அமெரிக்காவின் முன்முயல்வானது, தொடர்பு பட்ட தரப்புகளிடையேயான தகுநிலை சமநிலையை சீர்குலைந்து சமாதான செயல்முறையின் மரணத்துக்கு வழிவகுத்தது.

சமாதான செயல்பாடுகள் முழுவதினதும் வெற்றியானது போர் நிறுத்த ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப் பட்டிருப்பது போல், பேச்சுவார்த்தை நடத்தும் இருதரப்பினருக்கும் இடையேயான தகுநிலை சமநிலையைப் பேணுவதிலேயே தங்கியிருக்கிறது என்று தெரிந்திருந்த போதிலும், அமெரிக்க அரசானது சிறிலங்கா அரசுக்கு சார்பாக நடந்து

65. "புலிகள் மீதான தடைநீக்கத்துக்கான ஒழுங்கை அமெரிக்கா தெரிவித்தது" சண்டே ரைம்ஸ், 17 மார்ச் 2002 <http://www.sundaytimes.lk/020317/frontm.html#fLABEL5> இலிருந்து பெறப்பட்டது.

66. திருகோணமலையிலான புலிகள் அணிதிரள்வது மீதான மறைப்பு" சண்டே ரைம்ஸ், 14செப்ரெம்பர் 2003. <http://www.sundaytimes.lk/030914/front/trinco.htm> இலிருந்த பெறப்பட்டது.

67. அத்தாஸ் இ, "திருகோணமலை கடற்படைத் தளம் ஆபத்துக்குள்ளாகக்கூடியது அமெரிக்க படைத்துறை சிறிலங்காவை எச்சரிக்கிறது" சண்டே ரைம்ஸ், 14 செப்ரெம்பர் 2003. <http://www.sundaytimes.lk/030914/front/trinco.htm> இலிருந்து பெறப்பட்டது.

கொண்டதோடு, ஐரோப்பிய யூனியன் போன்ற மற்றவர்களையும் அப்படிச் செய்ய வற்புறுத்தியதன் மூலம், மேற்படி சமநிலையை நிலைபேறற்றதாக ஆக்க தொடர்ச்சியாக முயற்சி செய்தது. உதாரணமாக 2003 டிசம்பர் 8ம் திகதி, தெற்கு ஆசியாவுக்கான உதவி இராஜாங்க செயலர் கிறிஸ்ரினா றொக்கா, ஐரோப்பிய யூனியன் ஆணைக்குழுவுடனான தனது சந்திப்பின் போது, த.வி.புலிகளை, சிறிலங்கா அரசுக்கு சமமானவர்களாக நடத்தக் கூடாது. ஒன்று பயங்கரவாத குழுவாக அறிவிக்கப் பட்டிருக்கும் அதேவேளை மற்றயது ஒரு சட்டபூர்வமான அரசு ஆகும்" என வலியுறுத்தியிருக்கிறார்.[68]

2006 மே 29ம் திகதி புலிகளை தடைசெய்ய ஐரோப்பிய யூனியன் எடுத்த முடிவானது, சமாதான செயல்முறைகளுக்கு விழுந்த ஆகப்பலத்த அடியாக இருந்ததோடு, தகுநிலை சமநிலையை அழித்து , முழுஅளவு யுத்தத்துக்கு வழிவகுப்பதாகவும் இருந்தது. இந்த அதிமுக்கியமான முடிவு ஸ்கண்டி நேவிய கண்காணிப்பாளர்களின்[69] நோக்குகளை புறந்தள்ளி விட்டதாக இருந்ததோடு, பின்னர், சிறிலங்காவில் அப்பொழுது வெளிவிவகார அமைச்சராக இருந்த, மங்கள சமரவீர,[70] நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டு, கசியவிடப்பட்ட இராசதந்திர கேபிள்களில்[71] உறுதிப்படுத்தப்பட்டது போல், அமெரிக்க அழுத்தத்தாலேயே எடுக்கப்பட்டது.

சமாதான செயல் முறையானது, 2006 இல் சம்பிரதாய பூர்வமாக முடிவுக்கு வந்ததும், சிறிலங்கா அரசானது, போரை முழுமனதோடு புதுப்பித்ததோடு, அமெரிக்க மக்களவை வரையறைகள் அப்போதும் நடைமுறையில் இருந்த போதும் அமெரிக்க ஆதரவு அதிகரித்து சென்றது.[72]

2006 ஒக்ரோபரில் 1000க்கு மேற்பட்ட அமெரிக்க கடற்படை வீரர்கள், முன்னெப்போதும் இடம் பெற்றிருக்காத அமெரிக்கா-சிறிலங்கா படைகளின் கூட்டுப்பயிற்சி இடம்பெற்றபோது அதிலே, ஒக்கினாவாவில் நிலைபெற்றிருந்த மறீன் முன்னோடி படைகளும் சிறிலங்கா படையினரும் பங்கு கொண்டனர்.[73]

2006 மற்றும் 2007 இல் மட்டும், வெளிநாட்டுப் படையினருக்கான பயிற்சி திட்டத்தின் கீழ் சிறிலங்கா பாதுகாப்பு படை அதிகாரிகள் அண்ணளவாக 387 பேர் நோத் கரோலினாவின் போட் பிராக்கிலுள்ள ஜோண் எப். கேனடி விசேட போர் முறை பாடசாலை, அரிஸோனாவில் உள்ள போட் லெவன்வோர்த் படைய

---

68. கேபிள் 03 புறூஸெல்ஸ், 5593, A/s றொக்காவின், ஐரோப்பிய யூனியனுடனான தெற்காசியா தொடர்பான ஆலோசனை கலத்தல். <http://wikileaks.org/cable/2003/12/03BRUSSELS5593.html>

69. லிஸ் பெத் கோர்க், "தமிழ் புலிகளை பயங்கரவாத பட்டியலில் சேர்த்தமைக்காக ஐரோப்பிய யூனியனை சுவீடன் நாட்டு ஜெனரல் கண்டனம் செய்கிறார்" ஐரோப்பிய யூனியன் ஒப்சேவர், 25 ஒகஸ்ற் 2006 இப்படிக் குறிப்பிடுகிறது: "வெளிசெல்லும் சிறிலங்கா கண்காணிப்புக் குழுவின் தலைவரான சுவீடன் நாட்டவரான ஓய்வு பெற்ற பிறிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் சிறிலங்காவிலுள்ள தமிழ் புலிகளை பயங்கரவாதிகளாக பட்டியலிட்டமைக்காக ஐரோப்பிய யூனியனை சாட்டியுள்ளார். பிரெஞ்சு செய்தி நிறுவனமான AFP கூறுவதுபோல் இந்த முடிவின் பொருள், தான், கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்த முழுச் செயலுரிமை உள்ளது என்பதுதான் என்பதாக சிறிலங்கா அரசு எண்ணக்கூடும். மேயில் புலிகளை பயங்கரவாதிகளாக பட்டியலிட முன்னதாக இந்த சுவீடன் நாட்டு ஜெனரல் புறூஸெல்ஸ்சுக்கு அனுப்பிய பொதுநிலை அறிக்கையொன்றில் இந்தச் செயல் வன்செயல்களும் தாக்குதல்களும் அதிகரிப்பதற்கு வழிவகுக்குமென எச்சரித்துள்ளார்........"அது ஒரு தவறு. அது ஒரு தவறான முடிவு என்றுதான் சொல்வேன்....... ஏனென்றால் த.வி.பு (தமிழீழ விடுதலைப் புலிகள்)களும் அரசும், சமமான பங்காளிகள் என்ற வகையிலேயே போர் நிறுத்த ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டிருக்கிறார்கள்." என்று ஜெனரல் ஹென்றிக்சன் கூறினார். " திடீரென ஒரு தரப்பு பயங்கரவாதிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டால் நாம் பிரச்சினைக்குள் மாட்டிக்கொள்ளப் போகிறோம் என்பதை உணர்வது ஒன்றும் கடினமானதல்ல. அதைதான் நாங்கள் செய்திருக்கிறோம் என்றார் அந்த சுவீடன் நாட்டவர்" <http://euobserver.com/defence/22264> இலிருந்து பெறப்பட்டது

70. சிறிலங்காவினுடைய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவினுடைய 4 எப்ரல் 2012 திகதிய பாராளுமன்ற உரை. <https://www.colombotelegraph.com/index.php/rajapaksa-then-and-now/> இலிருந்த பெறப்பட்டது

71. கேபிள் 06ஒஸ்லோ551 ஒஸ்லோவிலான சிறிலங்காகூட்டுத் தலைமைக் கூட்டம். <http://wikileaks.org/cable/2006/05/06OSLO551.html>

72. "புலிகளின் பயங்கரவாதத்துக்கு எதிராக சிறிலங்கா போராடிக்கொண்டிருந்தபோது, அமெரிக்கா படைய உதவிகளை நிறுத்தியது: அது இப்போது சிறிலங்காவுக்குத் தேவையா?" அமெரிக்கா, படைய உதவிகள் ஆதரவை இடைநிறுத்திக் கொண்டிருந்ததோடு 2006இலிருந்து 2009வரையான காலப்பகுதியில், மில்லினியம் சலேஞ்ச் கோப்பரேஷன் மானிய தகுநிலைப் பட்டியலிலிருந்து சிறிலங்காவை நீக்கியது" என்ற அறிக்கை, கமகே, G, ஏசியன் ட்றிபியூண் 2009 டிசம்பர் 19 <http://www.asiantribune.com/news/2009/12/19/us-halted-military-aid-sri-lanka-when-battling-ltte-terrorism-does-sl-need-it-now> இலிருந்து பெறப்பட்டது.

73. பேடினன்டோ S. "அமெரிக்க, சிறிலங்கா கடற்படை அப்பியாசத்தின் ஒரு பகுதியாக மறீன்கள் ஹம்பாந்தோட்டவின் தரையிறங்க விருக்கிறார்கள்," த ஐலண்ட், 2006 ஒக்ரோபர்19, <http://www.island.lk/2006/10/19/news28.html> இலிருந்து பெறப்பட்டது.

கல்லூரிகள், ஜோர்ஜியாவின் போட்பென்னிங்கில் உள்ள அமெரிக்க போர் பாடசாலை ஆகியவை அடங்கலான போர் பாடசாலைகள் மற்றும் பிராந்திய நிலையங்கள் பலவற்றிலும் 2,528,389 அமெரிக்க டொலர் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டனர்.[74]

2007 இல் அமெரிக்காவானது எட்டுகை மற்றும் குறுக்கு சேவை வழங்குதல் என்ற பெயரிலான (ACSA) இரகசிய படைத்துறை உடன்பாடொன்றை சிறிலங்காவும் செய்து கொண்டதெனினும் வேறு எந்த ஒரு நாடும் அப்படிச் செய்யவில்லை என்பதோடு, அந்த வேளையிலே மனிதப் படுகொலைகள் உள்ளிட்டதாக மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையை செய்து கொண்டதற்கான காரணங்களை விளக்கும் விதத்தில், கசிய விடப்பட்ட ஒரு இராசதந்திர கேபிள் "புதிய மில்லினியத்திலே அரசியல் மற்றும் படைத்துறை முயற்சிகளின் குவிமையம் ஆசியாவின் மீது நகரும் பொழுது, முக்கிய கடற்போக்கு வரத்து பாதைகள் மீதான மேலாண்மையான அமைவிடத்தைக் கொண்டு, இந்தியாவின் வாசற்படியில் அமைந்திருப்பதான சிறிலங்காவானது, படைத்துறை ஆயத்த நிலையில் முக்கியமான பாத்திரத்தை வகிக்க முடியும்" என வாதிடுவதோடு "இக்கையெழுத்திடுகையானது, இன்னொரு பெருவழங்கல் ரீதியான விருப்பத் தெரிவொன்றை தெற்காசியாவில் சேர்த்து விடுவதன் மூலம் உலகளாவிய ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தின் இயலளவையும் இயலுமைகளையும் விரிவாக்கம் செய்துவிடும்"[75]என்று மேலும் குறிப்பிடுகிறது. கசியவிடப்பட்ட இன்னுமொரு இராசதந்திர கேபிளின்படி அமெரிக்காவானது, " உடன்படிக்கையினுடைய உள்ளடக்கங்களை நாம் வெளியிடமாட்டோம், ஆனால் சிறிலங்கா அரசாங்கம் அப்படிச்செய்ய முடிவு செய்தால் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அவர்கள் இணைப்புகளை வெளியிடக்கூடாது என்று கருத்துக்கூற விரும்புகிறோம்"[76] என சிறிலங்கா அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

சிறிலங்கா அரசுக்கான அமெரிக்காவின் இத்தகைய கனசெறிவான படைய ஆதரவானது, ஆப்கானிஸ்தானிலான போரில் அமெரிக்கா ஈடுபட்ட காலம் தொடக்கம் அதாவது, 2001 ம் ஆண்டிலிருந்து தெற்காசியா மீது அமெரிக்காவின் படைத்துறைக் கவனம் நெறிப்படுத்தப் பட்டதன் பின்னணியிலேயே நோக்கப்பட வேண்டும்.[77] டியாகோ காஸியாவில் இருக்கும் அமெரிக்க தளத்தின் அளவு மற்றும் அமைவிடம் என்ற இரண்டு வகையிலுமான வரையறைகளை வைத்து பார்க்கும் பொழுது, திருகோணமலை துறைமுகத்தை பாதுகாப்பாக எட்டக்கூடியதாக இருப்பதென்பது, இந்து சமுத்திரத்திலே அமெரிக்க கடற்படை இராணுவச் சொத்துக்களை பாதுகாப்பாக நிலைபெறச் செய்வதற்கு அத்தியவசியமானது எனக் கருதப்பட்டது. இந்த தவிர்க்க முடியாத தன்மைக்கு புலிகளின் தோல்வியானது திருப்புமுனை ரீதியான முக்கியத்துவம் கொண்டதாக இருந்தது.

போர் நடந்துகொண்டிருக்கும் போதே மனித உரிமைமீறல் தொடர்பான அக்கறையால் சிறிலங்காவுடனான படைய தொடர்புகளை அமெரிக்கா துண்டித்துக் கொண்டதாக பரவலாக நம்பப்பட்ட போதிலும் கசியவிடப்பட்ட இராசதந்திர கேபிள்கள் இது வேறுவிதமாகவே இருந்ததை மெய்ப்பிக்கின்றன. இவ்வாறானதும் 2008 ஜனவரி திகதியிட்டதுமான ஒரு கேபிளின்படி, கொழும்புக்கான அமெரிக்க தூதுவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: "முரண்பாடுகள் முனைப்பானவையாக மாறக்கூடிய வாய்ப்புகள் மற்றும் மனிதஉரிமைப் பிரச்சினைகள் தொடர்பான

---

74.வெளிநாடுகளுக்கான படைய பயிற்சி. மக்களவைக்கான கூட்டறிக்கை, குழு 2006 மற்றும் 2007, தொகுதி 1.

75. கேபிள் 07 கொழும்பு 303, பெறுகைகள் மற்றும் குறுக்குச்சேவை வழங்கல் உடன்பாடு கையெழுத்தாவதற்கான ஊடகங்களின் செய்தி சேகரிப்பு < http://wikileaks.org/cable/2007/02/07 COLOMBO303.html>

76. கேபிள் 07 கொழும்பு 1017, ACSA இணைப்புகளை யூலை 20 ம் திகதி வெளியிட அரசு திட்டமிட்டிருக்கின்றது <http://wikileaks.org/cable/2007/07/07COLOMBO1017.html>

77. உதாரணமாக பின்வருவனவற்றைப் பார்க்கவும். "தெற்காசியாவுடனான அமெரிக்காவின் உறவுகளிலான புதியதொடுவானங்கள்" அமெரிக்கா உதவிராஜாங்க செயலர் கிறிஸ்ரினா றொக்கா 2004 ஏப்பரல் 21ம் திகதி பென்சில் வேனியா பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய உரை <http://2001-2009.state.gov/p/sca/rls/rm/31702.htm> பாதுகாப்பு மீளாய்வு காலாண்டு அறிக்கை 2006 பெப்ரவரி <http://www.defense.gov/qdr/report/report20060203.pdf> மற்றும் தேசிய பாதுகாப்பு மூலோபாயம், 2006மார்ச் <http://www.comw.org/qdr/fulltext/nss2006.pdf>;

எமது நிகழ்கால அக்கறைகளுக்கு மத்தியிலும், தொடர்பாடல் மார்க்கத்தை திறந்து வைத்திருப்பதும் சிறிலங்கா படைத்துறையோருடனான எமது தொடர்புகளை பேணுவதும் முக்கியமானதாகும். சிறிலங்கா படைத்துறையானது அமெரிக்காவுடனான ஊடாட்டங்களுக்கு நிலைபேறான முறையிலே ஆதரவளித்ததோடு, கூட்டு அப்பியாசங்கள் மற்றும் பயிற்சிகளுக்கான அனைத்து வாய்ப்புகளையும் வரவேற்றும் இருக்கிறது"[78]

போரினுடைய இறுதிமாதமான 2009 மே மாதத்தில் "சூனியவலயம்" என்று கூறப்பட்ட இடத்தினுள் விரட்டியடிக்கப்பட்ட மக்கள் மீது சிறிலங்கா அரசுப்படைகள் மிக மோசமான தாக்குதலை நடத்திக் கொண்டிருந்த போது, இந்தப்பகுதிகளினுடைய பிரத்தியேகமான செய்மதிப் படங்களை அமெரிக்கா சிறிலங்கா அரசுடன் பகிர்ந்து கொண்டது.

"மே 5ம் திகதி சனாதிபதி மஹிந்த ராஜபக்ச' வெளியுறவுச் செயலர் பாலித்த கோஹொண்ண ஆகியோருடனான சந்திப்பின் போது விவகார பொறுப்பு அதிகாரி, அரசால் 'பாதுகாப்பு வலயம்' என அறிவிக்கப்பட்ட பகுதியினுள்ளே எறிகணை வீச்சினால் ஏற்பட்ட புதிய சேதங்கள் தொடர்பான ஏப்ரல் 27ம் திகதியில் இருந்து பெறப்பட்ட செய்மதிப்படங்களை வழங்கினார். ஏப்ரல் 27இல் இருந்து மே 3ம் திகதிவரை திகதியிடப் பட்டிருந்த இந்த முந்தியவையும் - பிந்தியவையுமான செய்மதிப் படங்கள், ஏப்ரல் 27ம் திகதி சனாதிபதி ராஜபக்'வினால்.....அறிவிக்கப்பட்ட பின்னரும் எறிகணை வீச்சினால் ஏற்பட்ட சேதங்கள் என்ற வெளிப்படையாக தெரிகின்ற சேதங்களை ஆவணப்படுத்தி உள்ளன.......சனாதிபதி நிகழ்கால நிலைமைகள் தொடர்பான மதிப்பீட்டை தரும்படி விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரியை கேட்டுவிட்டு, "என்னைவிட உங்களுக்கு தகவல்கள் நன்றாகவே தெரிந்திருக்கு தானே ..... " என்று முகம் சுளித்தபடி குறிப்பிட்டார்.[79]

போரின்போது இடம்பெற்றுக் கொண்டிருந்த போர்க்குற்றங்கள், மனிதஇனத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் பற்றிய நேரடியானதும் உடனடியானதுமான தகவல்கள் அமெரிக்காவிடம் இருந்தன என்பது தெளிவாகத் தெரிகிறதெனினும் சிறிலங்கா அரசு மற்றும் அதனுடைய படைத்துறையுடன் நெருக்கமாக ஒத்துழைக்கும் விருப்பத்தின் மீது அது எந்தத் தாக்கத்தை விளைவிக்கவில்லை.

ஆறுமாதங்களுக்கு பின்பு அமெரிக்க அரசாங்கத்தின் "சிறிலங்கா போரின் பின்னால் அமெரிக்க மூலோபாயத்தை மீள உருவாக்கல்"[80] என்று தலைப்பிடப்பட்ட அறிக்கை ஒன்று மூதவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையிலே ஆசியா மீதான அமெரிக்காவின் கவனம் மாறிக் கொண்டிருக்கையில் அதிலே சிறிலங்கா பெறும் முக்கியத்துவம் காரணமாக அமெரிக்கா சிறிலங்காவை 'இழக்க' முடியாது எனக் குறிப்பிட்டிருந்த அதே வேளை, 2009 இல் இருந்து அமெரிக்கா சிறிலங்கா கூட்டுப்படைப் பயிற்சிகள் திருகோணமலையிலும் அதனை சூழவுள்ள இடங்களிலும் இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

போர்நிகழ்ந்த காலம் முழுவதுமே, சிறிலங்கா அரசினுடைய போர் முயற்சிகளுக்கு பல்வேறுவழிகளின் ஊடாக வெளியே சொல்லப்படாத உதவிகளை அமெரிக்கா வழங்கிக்கொண்டிருந்தாலும் அவை தொடர்பான சிறிதளவு விவரங்களையே பொதுமக்கள் அறிந்திருந்தனர்.

கிளர்ச்சி நடவடிக்கை தொடர்பான முன்னணி நிபுணரும் சாண்ட்ஹேஸ்ர்ஸ் றோயல் படைத்துறை அக்கடமியினதும் அதேபோலவே ஐக்கிய இராச்சிய கூட்டுச்சேவைகள் கட்டளை பீடமற்றும் அதிகாரிகள் கல்லூரியினதும் முன்னாள் போதனாசிரியருமான போள் மூர்கிராப்ற்ரால் சுட்டிக் காட்டப்பட்டிருப்பது போல் " அமெரிக்கர்கள் சிறிலங்காவினரை அவர்களது இரவில் சண்டையிடும் இயலுமைகளை மேம்படுத்திக் கொள்ள தூண்டினார்கள்.

78. கேபிள் 08 கொழும்பு 66, சிறிலங்காவுக்கான அட்மிரல் விலாட்ஸ்ஸின் வருகைக்கான முன்னொழுங்கு <http://wikileaks.org/cable/2008/01/08COLOMBO66.html>

79. கேபிள் 09 கொழும்பு 495 – ய, "சிறிலங்கா: பாதுகாப்பு வலய விம்பங்களை தூதவராலயம் சனாதிபதியுடன் பகிர்ந்து கொள்கிறது. <http://www.wikileaks.org/plusd/cables/09COLOMBO495_a.html>

80. சிறிலங்கா : அமெரிக்க மூலோபாயத்தைப் போருக்கு பின் மீள –உருவமைத்தல், வெளியுறவுக்கான செயற்குழு, அமெரிக்க மூதாவை, 97டிசம்பர் 2009, <http://www.foreign.senate.gov/imo/media/doc/SRI.pdf>

விசேடமாக வான்படையினருடைய இயலுமையை அதிகரிக்க தூண்டினார்கள். இதற்கு தரமுயர்த்தப்பட்ட வான்கலஇலத்திரனியல் திறன்களும் வழிநடத்தப்படும் படைக்கலன்களும் அவசியமாக இருக்கும்.[81]

மூர்கிராப்ற் கூறுவதன்படி "பசுபிக்கட்டளைப் பீடமானது கொத்தாணி குண்டுகளின் பயன்பாட்டையும் பரிந்துரை செய்திருந்தது"[82] தீர்ப்பாயத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட போரின் இறுதிமாதங்களில் ஏற்பட்ட காயங்களைக் காட்டும் சட்ட மருத்துவச் சான்றுகள், கொத்தாணி குண்டுகளின் பாவனையுடன் ஒத்திருப்பவையாக இருந்ததோடு, டப்ளின் தீர்ப்பாயத்தின் தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பது போல், (பக்13), "போர் விமானங்களிலிருந்து கொத்தாணிக் குண்டுகள் போடப்பட்டதற்கு சான்றுகள் இருக்கின்றன." சிறிலங்காவோ அல்லது அமெரிக்காவோ 2008 மே 05ம் திகதி அங்கீகரிக்கப்பட்டு, 2010 ஓகஸ்ற் 1ம் திகதி நடைமுறைக்கு வந்த கொத்தாணி வெடிபொருட்கள் தொடர்பான பொது உடன் பாட்டிலே ஒப்பமிட்டிருக்கவில்லை என்பது கவனிக்கப் படவேண்டும்.

இனப்படுகொலைக்கு அமெரிக்கா உடந்தையாயிருந்தது என்ற குற்றச்சாட்டைப் பொறுத்தவரை, சிறிலங்காவிலும் அமெரிக்காவிலும் பயிற்சியளித்ததே சிறிலங்காவைச் சேர்ந்தவர்களின் இயலுமையை வளம்படுத்தி விட்டது என்பது தெளிவானதாகும். இதற்கு மேலதிகமாக ACSA உடன்பாட்டின் கீழ், வழங்கப்பட்ட அமெரிக்க ஆதரவும் உதவிகளும் அமெரிக்க சிறப்புப் படைகளினால் அளிக்கப்பட்ட பயிற்சி மற்றும் இஸ்ரவேலினால் அளிக்கப்பட்ட கமாண்டோ பயிற்சி ஆகியன இணைந்து சிறிலங்காவின் படைய இயலுமையில் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தி விட்டிருப்பதாகத் தோன்றுகிறது. போர் நிறுத்தத்துக்கு முன் பலவீனமாக இருந்த சிறிலங்கா படைத்துறையானது சமாதான செயல் முறையின் போது அமெரிக்காவால் பயிற்சி அளிக்கப்பட்டு வலுவூட்டப்பட்டு, போர் இயக்கங்கள் மீள புதுப்பிக்கப் பட்டபோது புதிய பலம், தலைமைத்துவம், மற்றும் நோக்கத்தை காட்டியது.

போரின் பின்வந்த காலங்களிலே அமெரிக்காவானது கூட்டு படைய அப்பியாசங்களின் எண்ணிக்கையை அதிகரித்ததோடு, பிரதானமாக, இவை கிழக்கு துறைமுக நகரமான திருகோணமலையில்[83] பசுபிக் சிறப்பு நடவடிக்கைகள் கட்டளையகத்தைச் சேர்ந்த அமெரிக்க படைத்துறை அதிகாரிகளின் பங்கேற்போடு இந்த அப்பியாசங்கள் மேற்கொள்ளப் பட்டதுடன் அவற்றை தொடர்ந்து ஒப்பறே'ன் பிளர்' ஸ்ரைல்"[84] மற்றும் "ஒப்பறே'ன் பசுபிக் ஏஞ்சல்"[85] போன்ற வெவ்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**இனப் படுகொலைகளிலே அமெரிக்காவினுடைய செயல் முனைப்பான உடந்தையாயிருத்தலானது, போரினுடைய கடைசி மாதங்களில் இடம் பெற்ற இனப்படுகொலை ரீதியான செற்பாடுகளை நேரடியாக நிகழ்தியதான சிறிலங்கா படைத்தரப்பினுடைய சத்தியையும் பயன்விளைவுத் தன்மையையும் அதிகரிப்பதற்கு மேற்கொண்ட நீடித்த முயற்சிகளால் மட்டும் உருவாகியதாக கூறமுடியாது என்பதோடு, சிலவேளைகளில், சமாதான செயல்முறைகளை நடைமுறைப் படுத்துவதில் எடுக்கப்பட்ட அரசியல் மற்றும் இராசதந்திர முன்முயல்வுகளை தடுத்தல் அல்லது எதிர் வளமாக்குதல் மற்றும் சிறிலங்காவில் உருவாகிக் கொண்டிருந்த அபாயகரமான களநிலை மற்றும் முன் எப்போதுமில்லாத விதத்தில் புலம் பெயர்ந்தோரிடையே உள்ள தமிழ் சமூகங்களின் உலகளாவிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முதலியவை தொடர்பான தகவல்களை இருட்டடிப்புச் செய்தல் முதலியவற்றிலான அமெரிக்காவின் வகிபாகத்திலிருந்து குறிப்பிடத் தக்களவில் உருவாகியதாக இருக்கலாம். இந்த படைத்துறை ரீதியான, படைத்துறை**

81. போள் மூர்கிராப்ற், தமிழ் புலிகளின் முழுமையான அழிப்பு, தெற்கு யோர்க்ஷரீயர் பேனா மற்றும் வாள் படைத்துறை, 2012, பக110.

82. மேலே உள்ளது போல்

83. அமெரிக்க மற்றும் சிறிலங்கா படைகள் கூட்டு மனிதநேய அப்பியாசத்தில் பங்குபற்றின 16 ஏப்ரல் 2010 <http://srilanka.usembassy.gov/pr-16april10.html>

84. "திருகோணமலையில் அமெரிக்க கடற்படை சீல்கள்" டெய்லி மிறர, 13 யூலை 2013 <http://www.dailymirror.lk/news/32340-us-navy-seals-intrinco.html>

85. ஒப்பறே'ன் பசுபிக் ஏஞ்சல் - சிறிலங்கா நிறைவு பெற்றது" அமெரிக்க பசுபிக் கட்டளைப் பீடம், ஓகஸ்ற் 2010 <http://www.pacom.mil/media/news/2010/08/20100825-Pacific%20Angel-Sri%20Lanka%20Concludes.shtml>

**ரீதியானவை அல்லாத செயற்பாடுகள் 2007 பெப்ரவரியில் சர்வதேச நீதிமன்றத்தினால் "உடந்தையாயிருத்தல்" என்பதற்குள் உள்ளடக்கப் படவேண்டும் என நிர்ணயம் செய்த விதமான "குற்றத்தை நிகழ்த்தும் இயலுமையை வழங்குதல் அல்லது வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும்வழிவகைகளை வழங்குதல் என்பதை உருவாக்குபவையாக இருக்கின்றன.** [86]

### 5.2.3. இந்திய அரசு உடந்தையாய் இருந்ததாக கூறப்படுவது.

இந்த தீர்ப்பாயமானது "தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலை குற்றத்துக்கு இந்திய அரசு உடந்தையாய் இருந்தது" என்ற குற்றச் சாட்டை கருத்தில் எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

1980 களின் பிற்கூற்றிலே சிறிலங்காவில் இருந்த தமிழ் மீதான கட்டுப்பாட்டை, மூலோபாய ரீதியான சொத்தாக என்று கொள்ளும் விதத்தில் த.வி. புலிகளுக்கு எதிராக செய்த தலையீடு ஏற்று செயற்பாட்டின் காரணமாக 12,000 பேர் உயிரிழந்தனர். 1990களிலே, அமெரிக்காவினுடனான ஒரு மூலோபாய கூட்டமைப்பின் முக்கிய மற்ற பங்குதாரரின் பாத்திரத்தை இந்தியா வகித்ததுடன் சிறிலங்கா தொடர்பான அதனது மூலோபாய கொள்கை அணுகுமுறையை தொடர்ந்தும் அமெரிக்காவினது போர் கட்டளைப் படிவ வாய்பாட்டுக்கு கீழ்ப்படிவானதாக வைத்துக்கொண்டிருந்தது.

சிறிலங்காவிலிருந்த முரண்பாட்டுக்குள்ளே இடம் மாறிக்கொண்டிருந்த இந்தியாவின் வகிபாத்திரனுடைய சிக்கலான தன்மை காரணமாகவும், மேலே கூறப்பட்ட குற்றச் சாட்டை முறைப்படி கருத்திலெடுப்பதற்குப் போதுமான பொருள் வகை சான்றுகளோ அல்லது நேரமோ தீர்ப்பாயத்துக்கு இருக்காத படியால் நீதிபதிகளின் குழுவானது இந்த விடயம் தொடர்பான ஆழ்ந்து ஆராய்தலை பின் போடுவதற்கு முடிவெடுத்தது.

### 5.2.4. கண்டு கொண்டவை.

சிறிலங்கா அரசானது, அதனது இனப்படுகொலை போரார்வங்களை தனியே எட்டும் இயலுமைகளைக் கொண்டிருக்கவில்லை என்பதை அடையாளம் கண்டதுடன் முன்வைக்கப்பட்ட சான்றுகளினது அடிப்படையில் ஐ.இ., அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய அரசுகள் இனப்படுகொலைக்கு உடந்தையாக இருந்தன என்று தீர்ப்பாயம் நம்புகிறது. மேலும் ஐ.இ மற்றும் அமெரிக்கா ஆகியவை தெளிவாகவே இனப்படுகொலைக்கு உடந்தையாக இருக்கின்றன என்று தீர்ப்பாயம் மதிப்பீடு செய்கிறது. இந்தியாவுக்கு எதிரான குற்றச் சாட்டை பொறுத்த வரையிலே சீனாவைப் போன்று வேறு நாடுகளுக்கு இருக்கக்கூடிய பொறுப்புகளை ஆராய்வது உள்ளடக்க கூடியதான மேலதிக சான்றுகளை ஆராய்ந்த பார்க்கும்வரை தமது முடிவை அறிவிக்காமல் வைத்திருப்பதற்கு தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

---

86. பொஸ். ஹெர். ஏள சேர்ப்பியா - மொண்ற்ரேநீக்றோ பந்தி 419

# 6. பரிந்துரை

நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தினுடைய தீர்ப்புகளுடைய குறிப்பான வகிபாகமும் நோக்கமும் பொறுப்பு சொல்லவேண்டிய தரப்புகளை அல்லது நபர்களை கண்டனம் செய்வதற்கு மட்டும் மட்டுப்படுத்தி விடமுடியாது. அத்து மீறப்பட்ட தனிப்பட்ட மற்றும் கூட்டு உரிமைகளின் நிரந்தரமான முறைமைத் தகுதியைப் பிரகடனப் படுத்தவேண்டிய தேவை உள்ளதோடு அதன் காரணமாகவே பாதிக்கப்பட்டவர்களாக மாற்றப்பட்ட மக்கள், கௌரவத்துடன் தமது வாழ்க்கை தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் இடம் விடுவதோடு விருப்பத் தெரிவுகளையும் உருவாக்கப் பணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரைகள் காத்திரமான விவரங்களை உள்ளடக்கி இருப்பதோடு அவை, தீர்ப்பாயத்தின் நடவடிக்கையிலிருந்து வெளிவந்த காத்திரமானவையும் அவசரமானவையுமான தேவைகளோடு ஒருங்கமைபவையாகவும் இருக்கின்றன. அவைகளிலே உள்ள பொதுவான விடயமாக இனஒழிப்பு செயல் முறைக்கு பொறுப்பானவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள் முழுமையாக பொறுப்பேற்க வேண்டும் என்பதற்கும் ஈழத் தமிழர்களின் உரிமைகளை முழுமையாக பெற்றுக் கொடுப்பதற்கான அவசரமானதும் நீண்டகால அடிப்படையிலானதுமான அர்ப்பணிப்புக்குமான அடிப்படை வேண்டு கோள் இருக்கிறது.

**I**

ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனஒழிப்புச் செயல்முறையை தடுப்பதிலும் அவற்றுக்கு எதிரான சட்டங்களை ஆக்குவதிலும் தவறிவிட்டதிலே முடிவேற்படுத்தக் கூடியவிதமாக வகிபாத்திரத்தை வகித்த ஐக்கிய நாடுகள் சபைக்கு:

- சமாதான செயல்முறை தடைப்பட்டது மற்றும் ஐ நா அதிகாரிகள் மற்றும் ஆளணியினரை மீளப்பெறுவதற்கு விடுக்கப்பட்ட கட்டளை முதலியவற்றுக்கு வழிவகுத்த முடிவுகளை எடுக்க காலாயிருந்த விடயங்கள் பற்றிய நம்பத்தகுந்த விளக்கத்தை ஆகக்குறைந்த தாமதத்துடன் அளித்தல்.

- தற்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கிற இனப்படுகொலையை தடுப்பதை முக்கிய நோக்கமாக கொண்ட மூலோபாயம் ஒன்றை உருவாக்குவதற்கும் ஈழத்தமிழர்கள், சமாதானத்துக்கும் சுயநிர்ணயத்துக்குமான தங்கள் உரிமைகளை அப்பியாசிக்கும் விதத்தில் காத்திரமான சூழ்ளமைவுகளை உருவாக்குவதற்கும் அதிகபட்ச முந்துரிமை கொடுத்தல்.

- இனஒழிப்பு செயல் முறையுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது இரு விதத்திலும் தொடர்புடைய அரசுகளைத் தவிர்க்கும், சர்வதேச விசாரணை ஆணைக்குழு ஒன்றை உருவாக்குதல் என்பது மேற்குறித்த வகையிலான முதலாவது படிமுறையாக இருக்கும்.

**II**

சமாதான செயல்முறையை முன்னெடுப்பதில் ஆக்க பூர்வமான வகிபாகத்தை மேற்கொண்டதும், பின்னர் ஈழத்தமிழர் தொடர்பாக அமெரிக்க அரசு கொண்டிருந்த "பயங்கரவாத தன்மையான" என்ற நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டதன் மூலம் இனஒழிப்பு செயல் முறையை நடைமுறைப்படுத்துவதற்கு பங்களிப்பு செய்ததுமான ஐரோப்பிய யூனியனுக்கு:

- சமாதான செயல் முறையை தோல்விக்கு இட்டுச் சென்ற காரணங்கள் தொடர்பான வெளிப்படையான அறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கான பொறுப்பை ஏற்றல்.

- சிறிலங்கா அரசினால் உருவாக்கப்பட்ட மறுப்புகள் அடக்கு முறைகள் என்ற கடினமான சூழ்நிலைகள் மீது குறிப்பான கவனம் செலுத்தப்படும் அதேசமயம் ஈழத்தமிழர்களுடைய அரசியல், பொருண்மிய மற்றும் கலாச்சார உரிமைகள் மதிக்கப்பட்டு வளர்ச்சி பெற ஊக்கப்படுத்துவதை உறுதிப்படுத்தும் விதத்தில் அதனது வெளிவிவகாரக் கொள்கையை மீளாய்வு செய்தல்.

- முறையான செய்முறைகள் தொடர்பாக கவனத்தில் எடுக்காமலும் விடுதலை மற்றும் எதிர்ப்பு இயக்கங்களின் கூர்ப்படையும் தன்மை எப்படியானது என கருத்தில் எடுக்காமலும் அமெரிக்க அரசினால் விதிக்கப்படும் வகைப்படுத்தல் மீது கண்டிப்பான முறையில் தங்கியிருக்கும் அதனது பாதுகாப்பு கொள்கையை உயர் முந்துரிமை கொடுத்து மீள கருத்திலெடுத்தல்

**III**

இந்த அமர்வுகள் நடத்துவது சாத்தியமானதாக இருந்ததும் சிறிலங்கா சமாதான செயல்முறையின் ஆரம்ப கட்டங்களிலும் அது இடம் பெறும் போதும், படைய ரீதியான தீர்வைவிட பேச்சுவார்த்தை மூலமான தீர்வை செயல்முனைப்பாக ஊக்குவித்ததுமான ஜெர்மனிக்கும் ஏனைய நல்லெண்ணம் கொண்ட நாடுகளுக்கும்:

- ஆகக் குறைந்த தாமதத்துடன் சிறிலங்காவினுடைய மக்கள் தொடர்பான மனித மற்றும் மக்கள் உரிமைகளால் அகத்தூண்டுதலளிக்கப்பட்ட ஐரோப்பிய கொள்கை ஒன்றை செயற்படுத்தக் கூடிய விதத்தில் ஐரோப்பிய யூனியனை நோக்கி நெறிப்படுத்தப்படுகின்ற பரிந்துரைகளை உடனடியாக ஒன்றை மேற்கொள்ளுதல்.

- ஈழத்தமிழ் புலம்பெயர்ந்தோரை பாதுகாப்பது என்பது, சிறிலங்காவில் உள்ள ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு முதலியவற்றை ஆதரித்து பேணுவதற்கான வழிமுறைகளில் பாரிய முக்கியத்துவம் பெற்றதாக இருப்பதால் குறிப்பாக ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகளிலே ஈழத்தமிழ் புலம்பெயர்ந்தோரின் உரிமைகளை குறிப்பாக புகலிடம், வேலை செய்தல் மற்றும் இணைந்து கொள்ளுதல் தொடர்பான உரிமைகளை பாதுகாத்து வளர்ச்சி பெற ஊக்கப்படுத்துவதற்கான வழிமுறைகளை கைக்கொள்ளும்படி ஐரோப்பிய யூனியன் கவுண்சில், ஐரோப்பிய ஆணைக்குழு மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்றம் உள்ளிட்ட பொருத்தமான ஐரோப்பிய நிறுவகங்களை ஊக்கப்படுத்தி வேண்டுகோள் விடுத்தல்.

- சிறிலங்காவில் நிலவுகின்ற உண்மையான நிலைமைகள் தொடர்பான தகவல்களை பரவ செய்வதற்கான வளமூலமாக ஈழத்தமிழ் புலம்பெயர்ந்தோரை அடையாளம் காணுதல்.

**IV**

சிறிலங்கா அரசுக்கு:

- தற்போது இடம் பெற்றுக் கொண்டிருக்கிற, ஈழத்தமிழர்களுடைய அடையாளம் மற்றும் இருப்பு முதலியவற்றை அழிக்கும் செயல் முறையானது, மனித மற்றும் மக்கள் உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதால் எடுத்துக் காட்டப்படும் ஒரு சமூகத்தின் மீத வடுவாக பதிந்து விடாத விதத்தில் சனநாயக ரீதியான நம்பகத் தன்மை என்ற வகை செயற்பாடாக இந்த சுயாதீனமான தீர்ப்பாயம் கண்டு கொண்டிருப்பவற்றை அங்கீகரித்து பகிரங்கமாக அவை பற்றி கலந்துரையாடுதல்.

- தேசிய, சர்வதேசிய, பொது, தனியார் மூலவளங்கள் முதலீடு செய்யப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் பொருண்மிய கட்டமைப்பு மற்றும் கலாச்சார கொள்கைகள் ஊடாக

நடைமுறைப்படுத்தப்படும், ஈழத்தமிழர்களுடைய அடிப்படை உரிமைகளை மறுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட செயல்முறையை அதனுடைய உத்தியோக பூர்வ விளக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் மூலம் உருமறைக்க முயற்சி செய்வதை நிறுத்தல்.

**V**

இந்த பகுதியிலே ஒத்துழைப்பான **செ**யற்பாடுகளில் ஈடுபடும் அரச, அரசசார்பற்ற சர்வதேச அமைப்புகளுக்கு:

- சிறிலங்காவின் சூழ்நிலைகளை எடுத்து காட்டுவதாக இருக்கும் இனஒழிப்பு செயல்முறையைப் பற்றி உணர்ந்தும் தகவலறிந்தும் இருத்தல்.

- அவர்களுடைய பிரசன்னம் முதலீடுகள் மற்றும் தலையீடுகள் நேரடியாக அல்லது கருத்தியல் ரீதியாக அல்லது இரண்டுமாகவோ, சிறிலங்கா அரசின் பாகுபாடான நடைமுறைகளுக்கு ஆதரவளிப்பவையாக இல்லாமலிருப்பதை உறுதி செய்தல்.

- குடிசார் எதிர்ப்பியக்கங்களின் அமைதிவழி செயல் முறைகள் மற்றும் ஈழத்தமிழர்களின் அடையாளத்தை மீட்டளித்தல், அதன் வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல் முதலியவை சிறிலங்காவிலுள்ள அவர்களது தாயகத்திலும் அவர்களுடைய புலம் பெயர்ந்தோர் மத்தியிலும் இடம்பெறும் விதத்திலே சாத்தியமான அளவுக்கு அவர்களுடைய செயற்பாடுகளை ஒருங்கிணைப்பு செய்தல்.

- உலகின் அனைத்து பகுதிகளிலும் இடம்பெறும் சட்டரீதியான பாதுகாப்பு மற்றும் உரிமைகளை அங்கீகரித்தல், அது போலவே இனஒழிப்பால் பாதிக்கப் பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல் போன்ற அனைத்து முன்முயல்வுகளுக்கு அவசரமாகவும் முந்துரிமைகளுடனும் பயன் விளைவான ஒருங்கிணைப்பு மற்றும் ஒன்றிணைத்தல் நோக்கங்களுடனும் ஆதரவு வழங்குதல்.

- நீதிமன்றம் சார்ந்த செயல்முறைகளை சர்வதேச நீதிச் செயலாட்சியின் ஊடாக அதனை வழங்குகின்ற மூன்றாவது நாடொன்றில், தண்டனை விலக்குக்கு எதிராக போராட்டம் என்ற பெயரில் ஆரம்பித்து வைப்பது பற்றி கருத்திலெடுத்தல்.

எமது பணி மற்றும் கலந்தாலோசனை செய்தல்களுக்கு பங்களிப்பு செய்தவர்கள் என்ற உண்மையின் காரணமாக, சாட்சிகள் அனுபவிக்கக்கூடிய எந்த ஒரு பின்விளைவுகளையும் கண்காணித்து அவை தொடர்பாக உடனடியாக செயல்படுவதில் ஒரு செயல் முனைப்பான வகிபாத்திரத்தை எடுக்க PPT ஆயத்தமாகவும் அர்ப்பணிப்புடனும் இருப்பதை மேலும் அது பிரகடனப் படுத்துகிறது.

**இறுதியாக இந்த தீர்ப்பாயமானது, உலகளாவிய சிவில் சமூகத்தினரையும் அரசுகளையும் சிறிலங்காவில் நிகழ்ந்த இனப்படுகொலைக்கு பலியானவர்களை நினைவு கூரும் படியும் மே 18ம் திகதியை "முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள்" ஆக ஆக்குவதன் மூலம் பலியானவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினரது கடும்துயரம் மற்றும் மனவடுக்களையும் உண்மை என ஏற்றுக்கொள்ளும்படி அழைப்பு விடுக்கிறது. இந்த குறியீட்டு ரீதியான படிமுறையானது பலியாகிப் போய்விட்டவர்களின் நினைவுகளை பேணிப் பாதுகாக்க உலகளாவிய சமூகத்தினர் எடுக்க வேண்டிய கழுவாய் செய்கிற செயல்முறையை சமிக்கை காட்டுவதாக இருக்கும்.**

மேலே உள்ள பரிந்துரைகள் இனஒழிப்பினால் பாதிக்கப் பட்டவர்கள், சிவில் சமூகங்களை அவர்கள் இருக்குமிடங்களிலே இயல்பு வாழ்வுக்கு கொண்டு வருவதற்கு தேவையான மிக கடினமான காலப்பகுதி முழுவதும் அவர்களுக்கு ஆதரவு வழங்கிய அமைப்பு முதலியவர்களுடன் இணைந்து சென்று முழுமையான மனித உரிமைகள் பற்றிய எதிர்பாப்புகளை யதார்த்தமாக மாற்றட்டும்.

## 7. முடிவுரைக் குறிப்புகள்

இத்தீர்ப்பாயமானது, தங்கள் வாழ்கைகளை ஆழமாகவும் நித்தியமாகவும் தொட்டுவிட்ட உண்மைகள் தொடர்பாக, சாட்சியமளிக்க துணிச்சலோடு முன்வந்த கண்கண்ட சாட்சிகளின் அடிப்படைப் பங்களிப்பை குறிப்பாக அங்கீகரிக்காமல் தனது பணியை நிறைவு செய்ய முடியாது. பலியாகி விட்டவர்களுடைய ஆகக்கூடிய தகுதிவாய்ந்த பிரதிநிதிகளாக இவர்கள் இருக்கிறார்கள். இந்த பலியானவர்களின் எண்ணிக்கை ஒரு போதும் தெரியவரப் போவதில்லை என்பதோடு, அவர்களுடைய துன்பங்களையும் முழுமையாக விவரிக்க முடியாது. அவர்களுடைய உரிமைகளை அங்கீகரிப்பதும் பாதுகாப்பதும், இந்த நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் இருப்பினதும் செயற்பாடுகளினதும் காரணங்களாக இருக்கின்றன.

தற்போதுள்ள சூழ்நிலையில் இந்த நாட்டிலே நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்களை நேரடியாக கண்ட இந்த சாட்சிகள் மேலும் அத்துமீறலுக்கு உட்படக்கூடிய அபாயத்தில் இருக்கிறார்கள் என்பதையும் இந்த அத்துமீறல்கள் நேரடியாக அவர்களது தனிப்பட்ட சுதந்திரத்துக்கு எதிராகவும் அவர்களது குடும்பங்களை அட்டூளியங்களுக்கு உட்படுத்துவதன் மூலமும் நிகழ்த்தப்படலாம் என்பதையும; PPT நன்கு உணர்ந்திருக்கிறது

**எனவே, இங்கு சாட்சியமளித்தவர்களுக்கு அல்லது அவர்களது குடும்பங்களுக்கு ஏற்படக்கூடிய ஏதாவது தீங்குகளுக்கு, எமது தீர்ப்புக்குள் உள்ளடக்கப் பட்டிருக்கிற அதிகார பீடத்தினரும் செயற்பாட்டாளர்களுமே பிரத்தியேகமாக பொறுப்பானவர்கள் என்று கருதப்பட வேண்டும் என்று பிரகடனம் செய்கிறது. தீர்ப்பாயத்தினுடைய உண்மை – அறியும் இடுபணிக்கு துணிவோடு பங்களிப்புச் செய்த சாட்சிகளுடைய பாதுகாப்பு தொடர்பாக கூர்மையான கவனத்தை பேண நாம் எம்மை அர்பணித்து கொள்கிறோம்.**

எமது பணி மற்றும் கலந்தாலோசனை செய்தல்களுக்கு பங்களிப்பு செய்தவர்கள் என்ற உண்மையின் காரணமாக, சாட்சிகள் அனுபவிக்கக்கூடிய எந்த ஒரு பின்விளைவுகளையும் கண்காணித்து அவை தொடர்பாக உடனடியாக செயல்படுவதில் ஒரு செயல் முனைப்பான வகிபாத்திரத்தை எடுக்க PPT ஆயத்தமாகவும் அர்ப்பணிப்புடனும் இருப்பதை மேலும் அது பிரகடனப் படுத்துகிறது.

## பின்னிணைப்பு I

### வழக்காளி தரப்பு கூற்றிலிருந்து பெறப்பட்ட சில பகுதிகள்

ஈழத் தமிழர்களின் மீதான சிறிலங்காவின் இனஒழிப்பின் குணாதிசயங்கள்

சாட்சியங்கள் அளிக்கப்பட்ட போது இனஒழிப்பு என்பது தொடர்பான பல் வேறுபட்ட எண்ணப் போக்குகளை நாம் கேட்டோம் இது ஒரு இனஒழிப்பு எனின் அது எந்த வகையைச் சேர்ந்தது ? அல்லது அது எத்தகைய பரிமாணங்களை எடுக்கிறது ?

குறிப்பான பண்புகளை நாம் அடையாளம் கண்டு முனைப்புப் படுத்தி உங்கள் கவனத்துக்கு தருகிறோம்.

1. இது ஒரு தேசிய சுயநிர்ணயம் மற்றும் ஒரு சுதந்திரமான அரசு அமைப்பதில் ஆயுதம் தரித்த போராட்டம் சட்டபூர்வமானதா அல்லது சட்டபூர்வமற்றதா என்ற கேள்வி பணயமாக உள்ளது. தேசிய சுயநிர்ணய மறுப்பே, இந்த இனஒழிப்பு மையத்தில் இருக்கிறது. தாங்கள் அனுபவப்பட்ட அடக்குமுறை அட்டூளியங்கள், உடல் ரீதியான மற்றும் கலாச்சார ரீதியான அழிப்பு பல தசாப்த கால கைவிடப்படுதல் முதலியவை காரணமாக, ஈழத்தமிழர்கள் ஒற்றையாட்சி சிறிலங்காவினுள்ளே இரண்டாம் தர சிறுபான்மையினராகவே தாம் இருக்க வேண்டும் என்ற கட்டளைப்படிவ வாய்ப்பாட்டை ஏற்க மறுக்கிறார்கள். அவர்கள் தங்களை சிறிலங்காத் தமிழர்கள் என்று அல்ல, ஈழத்தமிழர்கள் என்று நிர்ணயித்துக் கொண்டே அவர்கள் தங்களுக்கென ஒரு தாயகத்தை தேடுகிறார்கள்.

2. இந்த இன ஒழிப்பானது மூலோபாய ரீதியான காரணங்களுக்காக பிரித்தானியரால் இங்கு நிறுவப்பட்ட குறிப்பான காலனித்துவ ஆட்சி வடிவத்தில் அதன் தோற்றுவாய் இருக்கிறது. இந்த மூலோபாய ரீதியான காரணங்கள், அவர்களுடைய சாம்ராஜ்யத்தின் உள்ளேயே இந்த தீவுக்கு தனிச்சலுகைகளை வழங்கி இந்தியாவில் இடம் பெற்றுக் கொண்டிருந்த சுதந்திர இயக்கங்களிலிருந்து சிங்களவர்களைப் பிரித்து வைத்திருக்கும் விதத்தில் வேண்டுமென்றே ஒரு இனரீதியாக மேலாண்மை அடையாளம் ஒன்றை சிங்களவர்களுக்கென தோற்றுவித்தார்கள். இந்த திட்ட நோக்குடைய சமூக கையாளுகையானது, புதிய காலனித்துவ நாட்டினுடைய பொறியமைப்புக்குள் அப்படியே கடத்தப்பட்டது.

3. தமிழ் ஈழத்தினுடைய சமூக கட்டியெழுப்புதல் செயல் முறையானது ஒரு அரசியல் இயக்கம் என்ற வகையிலோ அல்லது ஆயுதம்தரித்த போராட்டம் என்ற வகையிலோ அல்லாமல் சிறிலங்கா அரசின் ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்ட வலயங்களிலே, ஆகக் குறைந்தது இரண்டு தசாப்தங்களாக அங்கிருந்த மக்களிடையே நிகழ்ந்து கொண்டிருந்த தினசரி வழக்கங்கள் மற்றும் வாழும் கலாச்சாரங்களிலான மாற்றங்களில்

ஆழமாக வேர்கொண்டிருக்கிறது. போர்சூழல் காரணமாக ஆழமான பாதுகாப்பற்ற தன்மையுடனான சூழலில் வாழ்ந்து கொண்டிருந்த போதும் சமூகநலன் நோக்குகளை கூட்டாண்மையாக்கி, தங்கள் சாதிஅமைப்பை அகற்றிக் கொண்டிருந்த ஒரு சமூகத்திலே, பெண்கள் தங்களுக்கு தாங்களே இயலுமைகளை வழங்கிக் கொண்டிருந்த ஒரு சமூகத்திலே, முழுதாக ஒரு தலைமுறையினர் வளர்ந்து கொண்டிருந்தார்கள். இந்த இனஒழிப்பு ரீதியான தாக்குதலானது, ஒரு அபிலாசையை மட்டுமல்லாது, ஏற்கனவே இருப்பில் இருந்த நூறாயிரக்கணக்கான மக்களுடைய வாழ்ந்து பெற்ற அனுபவத்தின் மூல முதலுருவையும் அழிப்பதை இலக்காக கொண்டிருந்தது.

இந்த வகையிலே பார்க்கப் போனால் கட்டியெழுப்புதல் என்ற சமூகசெயல்முறையை உருக்கொள்ள அனுமதித்திருந்த த.வி.புலிகளின் ஆயுதம் தரித்த உறுப்பினர்களை அச்செயல் முறையில் இருந்து அடிப்படையில் பிரித்துப் பார்ப்பதும் குடிசார் மக்கள் தொகையினருக்கு எதிராக புலிகளை நிறுத்திப் பார்ப்பதும் மிகவும் தவறான புரிந்து கொள்ளுதலாகவே இருக்கும். இது உழைப்பை வேறுபடுத்திக் காட்டும் அல்லது பிரித்துக் காட்டும் கருத்தே அல்லாது முரண்பாட்டை பொதுவாக கூறுவதாக இல்லை. எங்களுக்கு அளிக்கப்பட்ட சாட்சியங்களிலே ஒரு பொது தேசிய செயல் திட்டம், அதாவது தமிழீழத்துக்கான ஒருமைப் படுத்தப்பட்ட இயக்க உணர்வை நாம் கேட்டோம்.

இந்த வகையிலே பார்க்கப் போனால் கட்டியெழுப்புதல் என்ற சமூகசெயல்முறையை உருக்கொள்ள அனுமதித்திருந்த த.வி.புலிகளின் ஆயுதம் தரித்த உறுப்பினர்களை அச்செயல் முறையில் இருந்து அடிப்படையில் பிரித்துப் பார்ப்பதும் குடிசார் மக்கள் தொகையினருக்கு எதிராக புலிகளை நிறுத்திப் பார்ப்பதும் மிகவும் தவறான புரிந்து கொள்ளுதலாகவே இருக்கும். இது உழைப்பை வேறுபடுத்திக் காட்டும் அல்லது பிரித்துக் காட்டும் கருத்தே அல்லாது முரண்பாட்டை பொதுவாக கூறவதாக இல்லை. எங்களுக்கு அளிக்கப்பட்ட சாட்சியங்களிலே ஒரு பொது தேசிய செயல் திட்டம், அதாவது தமிழீழத்துக்கான ஒருமைப் படுத்தப்பட்ட இயக்க உணர்வை நாம் கேட்டோம்.

இந்த சமூகசெயல்முறையை உளவுரன் சிதைக்கப்பட்ட தங்கள் இருப்புக்காக மட்டும் கவலைப் படுகின்ற தனிநபர்களை கொண்ட சிறுசிறு குழுக்களாக மாற்றவே இனஒழிப்பு இருக்கிறது. அது குழுவினுடைய குழுத்தன்மையை அழிப்பதற்கே இருக்கிறது. கிளர்ச்சி முறியடிப்பு தகவு நோக்கில் இருந்து பார்க்கும் பொழுது ஆயுதம் தரித்த ஒரு இயக்கத்தை அழிப்பதற்கான ஒரே வழியாக, அது எதன் பகுதியாக இருக்கிறதோ, அந்த சமூகத்தை கட்டியெழுப்பும் குழுசெயல் முறையை அழிப்பது இருக்கிறது.

இனஒழிப்பின் அத்தியவசியமான ஆக்க கூறாக, முனைப்புப் படுத்தப்பட்ட பால் ரீதியான ஒடுக்கு முறை இருப்பதன் முக்கியத்துவத்தை நாம் சாட்சிகளில் முனைப்பாக்கி காட்டியிருக்கிறோம். சிறிலங்கா படைகள் போரின் போதும் தற்போது வடக்கையும் கிழக்கையும் ஆக்கிரமித்திருக்கும் சூழ்நிலையின் கீழும் திட்டமிட்ட ரீதியிலான வல்லுறவுகளை மேற்கொள்ளுவதன் மூலம் "நாங்கள் தமிழ் பெண்களான உங்கள்மீது வல்லுறவு கொள்வோம். உங்கள்மீது வல்லுறவு கொள்வதன் மூலம் நாங்கள் தேசிய தமிழ் அடையாளத்தை அழிக்கிறோம்" என்ற கூற்றை வெளியிடுகிறார்கள். தமிழ் பெண்கள் மீதான வல்லுறவானது, இன்றுவரை தொடர்கின்ற இரட்டை – வெறுப்பு குற்றமாகும் என்பதோடு, ஒரு குழுஎன்ற வகையிலே தமிழர்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் செய்முறையோடு தொடர்பு பட்டதாகவும் இருக்கிறது. இந்த இனப்பெருக்கத்தை கட்டுப் படுத்தலானது வற்புறுத்தும் விதத்திலான குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளாலும் சாதிக்கப்படுகிறது

5. ஈழத்தமிழர்கள் மீதான இனஒழிப்பானது வழமையாக, பாசிசத்தோடும் சர்வதிகாரத்தோடும் இணைந்திருக்கும், தடையேதுமில்லாத அரச பயங்கரவாதத்தின் முனைப்பாக வெளிப்படுத்தப் படுதலும் அது, தாராள சனநாயகங்களால் முழுமையாக அறியப்பட்டிருந்தும் முழுமையான உலகளாவிய தண்டனை காப்புடன் நிகழ்த்தப்படுவதும் எப்படி நிகழ்கின்றது? போரினுடைய இறுதிக் கட்டமானது சர்வதேசத்தின் பயங்கரவாதத்தின் மீதான போரின் ஒரு பகுதியாக நியாயப்படுத்துவதும் அது அதிர்ச்சி யுண்டாக்கும் விதத்தில் மனித உரிமை

மீறல்களை ஊக்கப்படுத்துவதினாலுமே இப்படி நிகழ்கிறது என்பது நிச்சயமாகும். தமிழர்களுடைய இந்த நிலையானது, மனித இனத்தின் ஒரு பகுதியை, மனிதத்தன்மை நீக்கப்பட்ட வெறும் இலக்குகள் என்ற இழிநிலைக்கு நிரந்தரமாக தள்ளிவிடும், "பயங்கரத்தின் மீதான போர்" என அழைக்கப்படுவதன் குற்றப் பழியுடமை சார்ந்த போக்குகளை மேலும் வெளிச்சம் போட்டுக் காட்டும் ஒரு அம்சமாக இருக்கிறது.

6. சர்வதேச ரீதியான தண்டனைக் காப்பின் அளவானது, இந்த இனஒழிப்பு செயல் முறையில் கவனத்தை ஈர்க்கும் இன்னுமொரு குணாதிசயமாக இருக்கிறது. சர்வதேச அரசுகளின் அமைப்புகளுடைய உடந்தையாயிருத்தல் இருந்திருக்கிறது. ஓரு இனஒழிப்பு நிகழப்போகிறது என்ற எதிர்பார்ப்பு இருந்த போது, ஒரு இனஒழிப்பு பற்றி முன்னுரைக்கப் பட்டிருந்தபோது வாயை மூடிக்கொண்டிருந்ததன் மூலமான உடந்தையாயிருத்தலே அது. இனஒழிப்பை கண்டனம் செய்வது என்பது ஐ நாவையும், இனஒழிப்பில் இருந்து பாதுகாக்க தவறிவிட்ட, இனஒழிப்பை தடுத்து நிறுத்த தவறிவிட்ட ஐநாவினுடைய சொந்த திட்டமிட்ட ரீதியிலான தவறுகையையும் கண்டனம் செய்வதாகும். இந்த தவறுகையை தனிமனித ரீதியாக அல்லது நிறுவன ரீதியாக மட்டும் நாம் சுமத்தவில்லை என்பதோடு – ஐநா-வே ஒப்புக் கொள்வதுபோல் ஏதோ ஒரளவு மீளாய்வு அதற்கு தேவை - இன்னமும் அது தொடர்கிறது. ஐ.நா. வினுடைய தவறுகையானது வேண்டுமென்றே செய்யப்பட்டதோடு அதற்கான பொறுப்பானது யதார்த்தத்தில் ஐ.நா. வைக்கட்டுப்படுத்தும் வல்லரசுச் சக்திகளைச் சாரும்.

## உடந்தையாயிருத்தல் என்ற விடயம்

தீர்ப்பாயமானது பல்வேறு வகை அல்லது அளவுகளிலான உடந்தையாயிருத்தல், பல்வேறு வழிகளிலும் தன்னுடைய உருவாக்கத்திலிருந்தே, தன் கட்டமைப்பில் இனஒழிப்பு போக்குகளைக் கொண்டிருக்கும் ஒரு நாட்டினுடைய நிர்மாணிகளிலிருந்து இனஒழிப்புக்கு உதவி மற்றும் ஒத்தாசை வழங்குவதன் மூலம் உடந்தையாயிருத்தல் வரை, இனஒழிப்பில் இருந்து பயன் பெறுவதிலிருந்து மௌனம் மற்றும் இனஒழிப்புக்கு முந்திய கூட்டுச்சதி வரை, இனஒழிப்புச் செயல் முறையின் வெவ்வேறு கட்டங்களிலும் நிகழ்த்திய உடந்தையாயிருத்தல் பற்றி ஆராய்ந்தது. பொறுப்பாயிருத்தலினுடைய மட்டங்கள், செயல் முனைப்பற்ற பயனாளி என்பதிலிருந்து கூட்டு உருவாக்கிகள் என்ற மட்டத்தை அணுகிச் செல்லும் பொறுப்பு மட்டம் வரை அதிகரித்து செல்கின்றன.

உத்தேசம், உள்நோக்கம் போன்ற விடயங்கள் தொடர்பாக விவாதம் ஒன்று இருக்கிறது என்பதை நாம் அங்கீகரிப்பதோடு, இவை உடந்தையாயிருத்தலோடு ஒத்திருப்பவையாக இருப்பதையும் சுட்டிக் காட்டுகிறோம். மேற்படி விவாதத்திலே புவிசார்-மூலோபாய நலன்களுக்கு சேவையாற்றுவதாக மூலோபாயமும் உடந்தையாயிருத்தலும் இருப்பதை உள்ளடக்குகிறோம்.

எமது சான்றுகள் தொடர்ந்து கொண்டிருக்கிற இனஒழிப்புக்கு உடந்தையாயிருந்தவையும் மூலோபாய வல்லரசுகள், என்று நாம் பெயரிட்டிருப்பவையுமான மூன்று அரசுகள் மீதே கவனத்தை குவித்து செலுத்துகின்றன. இந்த வகையிலே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினுடைய சான்றுகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம். 2009. மேயில் இடம் பெற்ற படுகொலைகளின் இறுதிக் கட்டத்திலே மிகமிக முக்கியமான இரகசிய தொடர்பாடல்களில் ஈடுபட்டிருந்த அவர் இந்தத் தொடர்பாடல்கள் பற்றி பகிரங்கமாக, குறிப்பாக, இந்த தீர்ப்பாயத்துக்கு தெரிவித்திருக்கிறார். 2009 மே 17 அன்று, அந்த வேளையிலே, பல பத்தாயிரக் கணக்கான மக்கள் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்படுவதை தடுக்கும் துயராற் கொதித்தெழுந்த முயற்சிகளாக ஆகிவிட்டவைகளின் ஒருபகுதியாக அமெரிக்க ஐக்கிய இராச்சிய மற்றும் இந்திய தூதரகங்களோடு நாம் தொடர்பு கொண்டிருந்தோம். இராஜதந்திரிகள் இந்த அவசரகால செய்திகளை தத்தமது அரசுகளுக்கு அனுப்பி இருப்பார்கள் என்று நாம் எடுத்துக் கொள்கிறோம். ஆனால் விக்கிலீக்கிற்கு நன்றிகூற, இதற்கான நேரடிச் சாட்சியம், இந்த அணுகுமுறை பற்றி அச்சொட்டாக பதிவு செய்திருக்கும், அமெரிக்க தூதுவர் அனுப்பியிருந்த கேபிள் மூலமாகவே எங்களுக்குக் கிடைத்தது.

நாங்கள் கூறுவது என்னவென்றால், நாங்கள் இதை ஒழிப்பின் பின்னான உடந்தையாயிருத்தல் என்றோ, கையெட்டக் கூடிய தூரத்தில் விலகி நிற்கும் ஒரு செயற்பாட்டாளரென்றோ நாம் கருதவில்லை ஆனால் ஒரே நேரத்திலேயே அதில் ஈடுபட்டுக் கொண்டு அது கண்டு பிடிக்கப்படுவதிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளும் கூட்டுச்சதி என்றும் அது தொடர்பான சாட்சியங்களை மறைத்துக் கொள்ளும் உடந்தையாயிருத்தலென்றும் கருதுகிறோம் என்பதைதான். தங்கள் தங்கள் சொந்த முந்துரிமைகளுடனான புற அரசுகள் தொடர்பு பட்டதானது, முக்கியமான சூழ்ளமைவுகளிலே, உள்ளக செயல் முறைகளை மிகை நிர்ணயம் செய்து, அமைதியான பேச்சு வார்த்தைகள் மூலமான தீர்வுகளை வேண்டுமென்றே தடைசெய்து, அவற்றை இனஒழிப்பு ரீதியான தீர்வினுடைய திசையிலே தள்ளி விட்டன.

## இனஒழிப்புக்கு உடந்தையாயிருத்தல் தொடர்பான மூன்று குற்றச் சாட்டுகள்

### i) இனஒழிப்புக்கு பிரித்தானியா உடந்தையாயிருத்தல்

பனாமாவைப் பற்றிக் கூறும்பொழுது, அமெரிக்கா முதலில் ஒரு கால்வாயை நிர்மாணித்து விட்டு, பின்பு அதைச்சூழ ஒரு நாட்டை நிர்மாணிக்க முடிவு செய்தது என்று கூறப்படுகிறது. இலங்கையிலான பிரித்தானிய குடியேற்ற வாதத்திலும் இதுவே நிகழ்ந்தது. முதலில் இந்து சமுத்திரத்தை கட்டுப்படுத்தவென திருகோணமலையை துறைமுகம் ஆக்க வேண்டும் என விரும்பினார்கள். பின்பு அதைச் சுற்றிவர ஒரு அரசியல் ரீதியான அமைப்பை ஏற்படுத்தினார்கள். கடல்வழியாக ஆளப்படும் ஒரு சாம்ராஜ்ய அமைப்பினுள்ளே மூலோபாய ரீதியாக விசுவாசமான ஒரு அந்நிய ஆட்சிப் பகுதியாக இலங்கை இருக்க வேண்டியிருந்தது. 'பிரித்து ஆளுதல்'ஆனது இந்தியாவிலான சுதந்திர இயக்கம் எழுப்பிய சவால்களிலிருந்து இலங்கையை பிரித்துவிட்டது.

பிரித்து ஆளுதல் இதற்கு அப்பாலும் சென்றது. ஒரு விசுவாசமான அந்நிய ஆட்சிப் பகுதி என்ற வகையிலே, தங்கள் மூலோபாய ரீதியான நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்கென, ஒரு சமய பிரிவுணர்வு கொண்ட சிங்கள கருத்தியலை பிரித்தானியர் உருவாக்கி விட்டனர். வெளிப்படையாக ஒற்றையாட்சி கட்டமைப்பாக காட்டப்பட்ட ஆனால் உண்மையில் புறமொதுக்கும், பாகுபாடு காட்டுகின்ற, பிரிவினை செய்கின்றதான ஆட்சியாக இருக்கும் விதத்தில் வேண்டுமென்றே, இனவெறுப்பு விதைகளை அவர்கள் விதைத்து விட்டார்கள்.

தொடர்ச்சியாக மீள மீள நிகழ்த்தப்பட்ட சிங்களவரை அணிதிரட்டல் மற்றும் நிலங்களில் குடியேற்றங்களை அமைத்தல் முதலியவை ஒரு அரசியல் கட்சிக்கு என்ற அளவுக்கு மிக அப்பாலும் சென்றதுடன், ஒரு சமய பிரிவுணர்வு கொண்ட ஒற்றையாட்சி தேசத்திலே ஈழத்தமிழர் வெறும் சிறுபான்மையினராக மட்டும் இருக்க நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். இந்த நிலைமையானது (நாம் இந்த நிலை குறித்து வழக்காளி தரப்பு சாட்சியாக அழைக்கவிருக்கும்) வின்ஸ்ரன் சேர்ச்சில் தமது சாட்சியத்தில் வலியுறுத்தியது போல் பிரித்தானிய மூலோபாய நலன்களை காவிச் செல்லும் கருவியாக செயற்படுவதை 1948க்குப் பின்னும் தொடர்ந்தது.[1] பிரித்தானியாவானது, படையரீதியாக சிறிலங்கா அரசுக்கு ஆதரவளிக்கவும் பயிற்றுவிக்கவுமென வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் தொடர்ச்சியான தலையீட்டை செய்தது.

தொடரும் மூலோபாய ரீதியான நலன்கள் தொடர்பான வெளிப்படையான கூற்று மற்றும் வெளியிடப்பட்ட உத்தியோக பூர்வ ஆவணங்களின் அடிப்படையிலான, புதிதாக ஆய்வு செய்யப்பட்டு உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டவற்றில் விளக்கமாக தெரிவிக்கப் பட்டிருக்கும் பிரித்தானிய உடந்தையாயிருத்தல் பகுதி 2 ஆகியவைக்கு நன்றிசொல்ல, சிறிலங்கா சனாதிபதிக்கு ஐ.இ. கிளர்ச்சி முறியடிப்பு மூலோபாய நிபுணர்கள்

1. 1945 இல் சேர்ச்சில் "ஜப்பானிய கடற்படை காணப்பட்டது என்பது முழு முரண்பாட்டிலும் ஆகக் கூடிய அபாயகரமானதும், மனவேதனை தருவதுமான கணத்தை சுட்டிக் காட்டுவதாக இருந்தது. இலங்கை கைப்பற்றப்படுதல், அதன் விளைவான இந்து சமுத்திரத்தின் மீதான கட்டுப்பாடு, எகிப்தை ஜெர்மனியர்கள் வெற்றி கொள்ளுதலின் சாத்தியப்பாடு ஆகியவை வளையத்தை இறுக்கி விட்டிருக்கும். எதிர்காலமும் துயரார்ந்ததாக இருந்திருக்கும்" என்று கூறினார்.

உயர் மட்ட ஆலோசனை வழங்கலில் இருந்து 1990 களின் கடைக்கூறுவரை முதுநிலை அதிகாரிகள் படையணி முழுவதுக்கும் பயிற்சியளித்தல் வரையானதும் படைய புலனாய்வு தகவல் வழங்குதல் வரையானதும் சண்டை மற்றும் சிறப்பு நடவடிக்கைகள் பிரிவு பயிற்சி வரையான "கினிமினி" சேவைகள் என அழைக்கப்பட்ட துணை - கூலிப்படையினரை பரவலாகப் பயன்படுத்தியது வரையானவை அடங்கலாக சிறிலங்கா படைத்துறையினருடன் இணைந்த இராணுவப் பயிற்சி மற்றும் மறைமுகமான நடவடிக்கைகளிலான பிரித்தானிய ஈடுபாடுகளின் பரந்து பட்ட அளவு பற்றி நாம் மேலோட்டமாக விளக்கமளிக்க கூடியதாக உள்ளது. உத்தியோக பூர்வ ஆவணங்களை வெளியிடாமல் வைத்திருப்பது காரணமாக, இந்த விவரணம் பூரணமற்றதாக இருக்கிறதெனினும் ஒட்டுமொத்தமான வெளியுரு வரைகள் தெளிவானவையாகவே இருக்கின்றன. இவை 2009 இன் முற்கூறுகள் வரையானதும் அதனை உள்ளடக்கியதுமான காலப் பகுதியில் பிரித்தானிய படைத்துறையால் சிறிலங்கா படைத்துறை தொடர்ந்து உருவாக்கப் பட்டுக்கொண்டிருந்ததன் பரந்த வீச்சுப்பற்றி மேலோட்டமாக விளக்குபவையாக இருக்கின்றன. இந்த காலப் பகுதியிலே சிறிலங்காவிலே அயர்லாந்தினுடைய முதுநிலைப் பொலிஸ் அதிகாரிகள் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

ii. **இனஒழிப்பில் அமெரிக்கா உடந்தையாயிருந்தது**.

சிறிலங்கா படைத்துறைக்கும் அமெரிக்க படைத்துறைக்குமிடையே இடம்பெற்ற, உதாரணமாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவரகத்தில் அமைந்திருந்த இஸ்ரேலிய சிறப்பு கருமபீடம், விசேட வானொலி தொடர்பு ஒட்டுக் கேட்கும் நிலையம், பெரிதும் அறியப்படாத ஆனால் விரிவான விடயங்களை உள்ளடக்கியது எனக் கருதப்படுவதுமான படைத்துறை ஒத்துழைப்பு உடன்பாடு முதலியவற்றை உள்ளடக்கியதான, வேறுவடிவங்களிலான மறைமுகமானது விருப்பத்துடனானதுமான ஒத்துழைப்பு பற்றி எமக்கு சாட்சியமளிக்கப் பட்டுள்ளது.

1990 களின் பிற்கூறுகளிலும் 2000களின் முற்கூறுகளிலும், சிறிலங்காவிலான செயல் முறைகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை பிரித்தானியாவிடமிருந்து அமெரிக்கா கையேற்றுக் கொண்டதான வலுவான ஊகக்குறிப்புகளை சாட்சியங்கள் தெரிவித்துள்ளன. உதாரணமாக 2002 இலே சிறிலங்கா படைத்துறைப் படைகள் பற்றிய விரிவான மீளாய்வை மேற்கொண்ட அமெரிக்க படைத்துறையானது, புதிய மூலோபாயங்கள் மற்றும் புதிய வடிவங்களிலான சண்டையிடும் முறைகள் ஆகியவற்றை பரிந்துரைகளை செய்ததாக தெரிவிக்கும் சாட்சியங்களை நாம் கேட்டோம். இதிலிருந்து குறுகிய காலத்தின்பின், அதாவது 2003 ம் ஆண்டில் அமெரிக்காவானது திட்டமிட்ட ரீதியிலே சமாதானச் செயல்முறையை முறிவடையச் செய்தது. எனவே அமெரிக்காவானது பின்னர் நிகழ்ந்த இனஒழிப்புக்கான படைத்துறைத் தயாரிப்புகளிலும் அரசியல் தயாரிப்புகளிலும் ஈடுபட்டிருக்கிறது.

மூடிய அறைக்குள்ளே ஒரு தமிழ் சாட்சி அளித்த சாட்சியத்திலே, சமாதான செயல்முறையின் இறுதிக் கட்டத்திலே தமிழ் பகுதிகளில் அதிகரித்த அளவிலான சிறப்பு நடவடிக்கைகள் இடம்பெற்ற தென்று சாட்சியமளிப்பதைக் கேட்டோம். தமிழ் பகுதிக்குள் ஊடுருவி தமிழ் சிவிலியன்களை கொலை செய்வதிலான சிறிலங்கா படையினரின் அதிகரித்த இயலுமையின் மீதான, அமெரிக்க சிறப்பு நடவடிக்கை பயிற்சிகள் விளைவித்த தாக்கம் பற்றிய, முடிவேற்படுத்தக்கூடியதென்று இல்லாவிட்டாலும், குறைநிரப்பும் சாட்சியமாக அவை இருக்கின்றன.

iii. **இனஒழிப்புக்கு இந்தியா உடந்தையாயிருந்தது.**

இது தொடர்பான விரிவான ஆவணத் தொகுதி ஒன்று எமக்கு தரப்பட்டுள்ளது. இந்த தொகுதிச் செயல் முறையில் தாமதமாக வந்ததற்கு அதை உருவாக்கியவர் தவறுகள் காரணமல்லவென்பதை நாங்கள் ஏற்றுக் கொண்டாலும் மேற்படி ஆவணத்தொகுதி முழுமையாக ஆராயப்பட வேண்டும் என்று நாம் கேட்கிறோம்.

## சிறிலங்கா அரச இனஒழிப்பு, உத்தேசிக்கப் பட்டது, கட்டமைப்பு ரீதியானது, தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருப்பது.

### உத்தேசம் தொடர்பான விவரம்

சாட்சியத்தில் உங்களுக்கு முன்வைக்கப்பட்ட சூழ்நிலையைக் கவனித்து பார்க்கும்பொழுது ....... சென் பீற்ரர்ஸ் தேவாலயத்தின் மீது சிறிலங்கா படையினர் குண்டு வீசியபோது, சென் பீற்ரர்ஸ் தேவாலயத்தின் மீது குண்டு வீசும் உத்தேசம் அவர்களுக்கு இருந்ததா அல்லது அது ஒரு விபத்தா என்ற கேள்வியை ஒருவர் எழுப்ப வேண்டும்.

வல்லுறவு தொடர்பான பல சம்பவங்களை நாம் நோக்கும் பொழுது அவர்களுக்கு வல்லுறவு கொள்ளும் உத்தேசம் இருந்ததா அல்லது அது ஒரு விபத்தா?

நாங்கள் இந்த நிகழ்ச்சிகளின் விளைவுகளை இந்தக் குற்றங்களின் மட்டங்களின் அடிப்படையில், இறந்து விட்ட பலர், உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் காயப்பட்ட பலர் நூறாயிரக்கணக்கானவர்களில் ஒரு பகுதியினரையோ அல்லது அவர்களை முழுமையாகவோ, உடல்ரீதியான அழிவுக்குட்படுத்தும் விதத்திலான திட்டமிட்ட ரீதியான நிலைமைகள் மற்றும் சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டது முதலியவற்றையும் நோக்க வேண்டும். போருக்கு பிந்திய காலப் பகுதியில் தொடர்ந்த இனஒழிப்பு தொடர்பாக முன்வைக்கப்பட்ட சாட்சியங்களையும் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது.

அவர்கள் மருத்துவமனைகள் மீது குண்டு வீசியபொழுது அல்லது அது போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டபோது அல்லது நீங்கள் கடந்த சிலநாட்களிலே பரவலாக கேள்விப் பட்டது போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டபோது அவர்களுக்கு அவைகளை செய்யும் உத்தேசம் இருந்ததா அல்லது தவறுதலாக நடந்து விட்ட விடயமா? அவர்கள் பலவந்தமாக மக்களை ஒரு இடத்திலிருந்து அகற்றிச் சென்றபோது அல்லது 4வது ஜெனிவா உடன் பாட்டின் 49வது பிரிவை மீறும் விதத்தில் இன ஐதாக்கலில் ஈடுபட்டபொழுது அதைச் செய்யும் உத்தேசம் உண்மையில் அவர்களுக்கு இருக்கவில்லை என நாம் கூறமுடியுமா? அடியோடு ஒழித்துக் கட்டும் குற்றமான, உணவு, நீர், மருந்துகள் முதலியவை மக்களையும் போய்ச் சேராமல் தடுத்த பொழுது, அதைச் செய்யும் உத்தேசம் அவர்களுக்கு இருந்ததா அல்லது அவற்றை ஏற்றிச் சென்ற லொறிகள் அவர்களை சென்றடைய முடியவில்லை. என்பதால் அது நிகழ்ந்ததா?

உதாரணமாக, அந்த தமிழர்கள் அனைவரையும் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வைத்திருக்க சிறிலங்கா அரசு உண்மையில் உத்தேசித்திருந்ததா?

அவர்கள் வடக்கை படைய மயப்படுத்த உத்தேசித்திருந்தார்களா? ஆண்களையும் பெண்களையும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தும் உத்தேசம் அவர்களுக்கு இருந்ததா? தமிழ் கலாச்சாரத்தின் மீதான தாக்குதலிலும் அதைத்தான் உண்மையில் செய்தார்களா? துயிலுமில்லங்களை புல்டோசர் கொண்டு அழித்தார்களா? இடங்களின் பெயர்களை மாற்றும் உத்தேசம் கொண்டிருந்தார்களா? இந்துக் குறியீடுகள் மற்றும் வசதிகள் மீது பௌத்த குறியீடுகளையும் வசதிகளையும் நிலை நிறுத்தினார்களா? அல்லது இவை எல்லாமே திட்டமிடப்படாத விபத்துக்களா?

உண்மையில் இந்த உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளின் பிரதிபலன்களாக, தமிழ் குடிசார் மக்கள் தொகையினரின் மனித அடையாளத்தை இல்லாமல் செய்யப்பட்டது தொடர்ந்ததும் குடிசார் மக்கள் தொகையினரிடையே அவை திகிலை உருவாக்குவதுமாக இருக்கின்றன. அனேக சாட்சிகள் இவை பற்றி சாட்சியமளித்திருப்பதால் நீங்களும் அவற்றை அறிந்திருக்கிறீர்கள். ஏற்கனவே சிறிலங்காவை விட்டு வெளியேறிவிட்ட நூறாயிரக் கணக்கான மக்களுடன் இணைந்து சிறிலங்காவுக்கு வெளியே புகலிடம் கோரும் மக்களின் எண்ணிக்கைகள் அதிகரித்திருப்பதையும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். வெள்ளம்போல் வந்திருக்கும் இந்த புகலிடக்

கோரிக்கையாளர்களிடமிருந்து, சிறிலங்கா தீவின் ஆட்சியாளர்கள் அத்தீவை தமிழர் இல்லாத தீவாக ஆக்கும் உத்தேசத்தை கொண்டிருப்பது மற்றும் தீவிலிருந்து தொடர்ச்சியாக தமிழர்கள் வெளியேறுவதை வரவேற்கிறார்கள் என்ற உண்மை உள்ளிட்ட பல தகவல்களை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

**பகிரங்கமாக தூண்டிவிடுதல்**

பின்வருவன போன்ற..... பகிரங்கமான தூண்டிவிடுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. ... "முள்ளிவாய்க்காலில் அகப்பட்டிருப்பவர்கள் பயங்கரவாதிகளின் உறவினர்கள்தான். அவர்களை குடிசார் மக்கள் என்றே கருதமுடியாது" கூட்டரசின் பங்காளிக் கட்சி ஒன்றிடமிருந்து, 2009 ஜனவரி 08ம் திகதி.

**சூழ்சிகள் தொடர்பான விவகாரங்கள்**

ஜெனிவா உடன்பாட்டை முழுமையாக மீறாமல் சிறிலங்கா இராணுவம் வெற்றி பெற்றிருக்க முடியாது என்ற புரிந்துணர்வு தொடர்பான விரிவான சாட்சியங்கள் உங்கள் முன்வைக்கப்பட்டன.

சிறிலங்கா இராணுவமானது புலிகளை வெற்றிகொள்ள முடிந்தாலும் அங்கே தமிழ்மக்கள், தமிழ்மக்களாகவே இருந்திருக்க முடியும் என்ற புரிந்துணர்வு தொடர்பாகவும் நீங்கள் சாட்சியங்களைக் கேட்டிருக்கிறீர்கள்.

ஜெனிவா உடன்பாடுகளை விரிவகல்வாக மீறாமலும் தமிழ்மக்களை இலக்கு வைக்காமலும் எதிரியை முறியடிக்க முடியாது.

"தமிழர்களை இல்லாமல் செய்தல்" என்ற நிகழ்கால அரசியலானது தமிழ் ஈழம் என்ற கருத்தையே நொருக்கும் உத்தேசத்தை முன்வைக்கும், தொடருகின்றதும் வலியுறுத்துகிறதுமான சாட்சியமாக இருக்கிறது.

தமிழ்பகுதிகளில் இடம்பெறும் குடிசனப் பரம்பல்களில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்ற மாற்றங்கள் பற்றியும் ஏற்கனவே நாட்டை விட்டு தப்பியோடிவிட்ட நூறாயிரக் கணக்கானவர்களுடன் இணைந்து கொள்ளும் புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கைகள் அதிகரித்துக் கொண்டிருப்பது பற்றியதுமான விரிவான சாட்சியங்களை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்.

**எது பணயம் வைக்கப்பட்டிருக்கிறது?**

2009 மே 16ம் திகதியளவில் த. வி. புலிகள் படையரீதியாக தோற்கடிக்கப்பட்டு சரண் அடைவதற்கான நிபந்தனைகளை கோரிக்கொண்டிருந்த நிலையிலே, இத்தினத்துக்கு அப்பால் தொடர்ந்தும் பெருந் தொகைகளில் ஈழத்தமிழர்களை முள்ளிவாய்க்காலில் கொன்று கொண்டிருந்தது முழுமையாகவே மூலாதாரமாக இருக்கிறது. த.வி. புலிகளை முறியடிப்பதற்கு குடிசார் மக்களையும் த.வி. பு. உறுப்பினர்களையும் அதற்கு பின் கொல்வதற்கான தேவை இருக்கவில்லை. த.வி. புலிகளோடு தங்கியிருந்து அவர்களோடேயே நகர்ந்து கொண்டிருந்த குழுவினரை அழிப்பது உத்தேசமாக இருந்திருந்தால்தான் அது தேவையாக இருந்திருக்கும். இந்தக் குழுவினரின் எண்ணிக்கை ஆரம்பத்தில் 300,000 மாக இருந்ததெனினும் மே 16ம் திகதியளவில், கிட்டத்தட்ட 150,000 பேர் வரையில் அங்கே இருந்திருக்க வேண்டும். சூனியப் பிரதேசங்களில் எஞ்சியிருந்த மக்களின் எண்ணிக்கையை வேண்டுமென்றே குறைத்துக் காட்டுவதற்கு சிறிலங்கா அரசினால் முயற்சி எடுக்கப்பட்டது. அங்கே 75,000 மட்டிலான மக்களே இருப்பதாக அரசு கூறியது. அதேஅளவினரான மக்களை படுகொலை செய்வதற்கும் அதை மறைப்பதற்கு வசதி ஏற்படுத்தவுமே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அழிக்கப்பட வேண்டியது புலிகள் மட்டும்தான் என்றிருக்கவில்லை. இனரீதியான, அரசியல் ரீதியான குழு என்ற வகையிலான தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்தும் கருத்து மற்றும் தொலை நோக்கு என ஈழத்தமிழர்களால் கருதப்பட்ட தமிழீழ விடுதலை என்ற கருத்தியலும் அழிக்கப்பட வேண்டியிருந்தது. தாயகம், அதாவது ஈழம் என்பது தமிழர் என்ற அடையாளத்துக்கு அடிப்படையானதாக இருந்தது ..... இருக்கிறது.

அத்தீவினுடைய வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும் தமிழர்களின் தாயக நிலம் என்று கூறப்படுவதன் எச்சங்கள் ஏதாவது இருந்தால், அவைதான், இங்கே நாங்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் இந்த வேளை வரையிலும் கூட அழிக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றன. படையினருடைய தாக்குதலினுடைய தெளிவான குறியிலக்காக இனஒழிப்பு ரீதியான கொலை செய்தல் இருக்கிறது. அந்தத் தாக்குதலானது கட்டம் கட்டமாக அவதானமாகத் திட்டமிடப்பட்டது. இறுதிக் கட்டத்திலே நூறாயிரத்துக்கான ஈழத்தமிழர்களை அழித்தொழிக்க கட்டம் கட்டமாக திட்டம் தீட்டப்பட்டது.

இனஒழிப்பு ரீதியான வன்முறையினால் மறுக்கப்பட்ட ஈழத் தமிழ் இனத்தவரது சட்டபூர்வமான போராட்டத்தை உலகினுடைய மக்கள் அங்கீகரிக்க வேண்டும். அவர்களுடைய தன்னார்வ விருப்பம் வேறான ஒரு நாடுதான்

இந்த இனஒழிப்புக்கு எதிராக குரல் கொடுக்கும்படியும் தேசிய சுயநிர்ணயத்துக்கு ஈழத் தமிழருக்கு இருக்கும் சட்டபூர்வ உரிமையை அங்கீகரிக்கும்படியும் நீதிபதிகளின் ஆயத்தினரிடம் விண்ணப்பிப்பதுடன் அனைத்து மனச்சாட்சியுடைய மக்கள், சமூக இயக்கங்கள், உலகமெங்கும் இருக்கின்ற அரசுகள் முதலியோரையும்அவ்வாறு செய்யும்படி அழைப்பு விடுக்கிறோம். இனஒழிப்பை தடுப்பதும் தேசிய உரிமைகளை பெறுவதும் இந்த வழக்கில், ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாதவையாக இருக்கின்றன.

இந்த இனஒழிப்பு ரீதியான திட்டத்தினுடைய ஆக இறுதியானதும் திட்டமிடப்பட்டதுமான உத்தேச பெறுபேறாக தமிழ் ஈழத்தை அழிப்பதாக இருந்தது...... இப்பொழுதும் இருக்கிறது. அது ஒரு பகுதி வெற்றியை அடைந்திருக்கிறது. இதுவரையில் முழுமையாகவோ மாற்ற முடியாத விதத்திலே அது வெற்றி பெறவில்லை. அதனால் தான் தொடர்ந்து கொண்டிருக்கும் இனஒழிப்பை தடுப்பதற்கான இயக்கத்தின் ஒரு பகுதி என்ற வகையிலே இந்த தீர்ப்பாயம் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

ஆண்டி ஹிக்கின்பொட்டம் & கரேன் பார்க்கர்

09 டிசம்பர் 2013 | பிறெம்மன், ஜெர்மனி

குற்றம் சாட்டுபவர்களின் சார்பில் வழக்கை முன்னெடுக்கவென வழக்காளி தரப்பு அணியானது IMRV மற்றும் IFPSL ஆகியவற்றால் நியமிக்கப்பட்டது.

# பின்னிணைப்பு II

புகைப்பட,வீடியோ மற்றும் எழுத்து மூலமான சமர்ப்பிப்புகள்

**அறிமுக விடயப்பகுதிகள்.**

1. எண்ணக்கரு ஆய்வறிக்கை – சர்வதேச மனித உரிமைகள் சங்கம், ஜெர்மனி.

2. குற்றப் பத்திரிகை: இன ஒழிப்பு மற்றும் சர்வதேச உடந்தையாயிருத்தல் தொடர்பாக டப்ளின் தீர்ப்பாயம் தொடர் ஆய்வு செய்கிறது:சிறிலங்கா அரசு மற்றும் அதற்கு உடந்தையாயிருந்தோர் மீது ஈழத் தமிழர்கள் மீது இனஒழிப்பு குற்றம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்படுகிறது, சிறிலங்கா தொடர்பான மக்கள் தீர்ப்பாயம் இ அமர்வு ஐஐ - சர்வதேச மனித உரிமைகள் சங்கம், ஜெர்மனி மற்றும் சிறிலங்காவிலான அமைதிக்கான 'ஐரி' கருத்தரங்கு, அயர்லாந்து.

**தீவினுடைய மூலோபாய ரீதியான முக்கியத்துவம் மற்றும் ஒற்றைக் கட்டமைப்பின் உருவாக்கம்.**

1. தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒழிப்பில் பிரித்தானிய அரசு உடந்தையாயிருந்தது, பகுதி1 சர்வதேச மனித உரிமைகள் சங்கம், ஜெர்மனி.

2. தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒழிப்பில் பிரித்தானிய அரசு உடந்தையாயிருந்தது: 1945 க்கு பின்னானவை, பகுதி 2 – விராஜ் மெண்டிஸ், சர்வதேச மனித உரிமைகள் சங்கம், ஜெர்மனி மற்றும் பில் மில்லர், கோப்பறேற் வோச், பிரித்தானியா.

**பின்சேர்க்கை 1:** நிகழ்வு ஆய்வு, இலங்கையில் பிரித்தானிய கிளர்ச்சி முறியடிப்பு நிபுணர்கள், 1971( பில் மில்லர் எழுதிய 'சிறிலங்காவில் எம்.ஐ 15 – சொல்லப்படாத கதை', திறந்த சனநாயகம், 5 நவம்பர், 2013)
இணைப்பு: <http://www.opendemocracy.net/opensecurity/phil-miller/mi5-in-ceylonuntold-story>

**பின்சேர்க்கை 2:** திருகோணமலைத் துறைமுகத்தின் மீதான பிரித்தானியாவின் ஆர்வம், 1971 ( பாதுகாப்பு அமைச்சு பிரதமர் எட்வேட் ஹீத்-இற்கென 1971 மேயில் இந்த இரகசிய அறிக்கையை தயார் செய்தது.)

'இலங்கைக்கான சோவியத் படைய உதவி: திருகோணமலையில் உள்ள கடற்படை தள வசதிகளை சோவியத்துக்கு வழங்குவதின் பின்விளைவுகள்' தேசிய ஆவணக்காப்பகம்;,FCO 37.∴810

**பின்சேர்க்கை 3:**'சிறிலங்காவுக்கான ஐஇ ஆயுத ஏற்றுமதிகள்: அனுமதிப் பத்திரங்கள்வழங்கப்பட்டுள்ளன......1997-2008', Saferworld இல் இருந்து தரவிறக்கம் செய்யப் பட்டது.
இணைப்பு: <http://www.publications.parliament.uk/pa/cm200809/cmselect/cmquad/178/178we23.htm>

**பின்சேர்க்கை 4:** '2001 இல் இருந்து, சிறிலங்காவுக்கான ஐஇ ஆயுத விற்பனைகள் தொடர்பான ஊடக அறிக்கைகள்.

- " ஐஇ வர்த்தகர்களால் சிறிலங்காவுக்கு 'வெற்றிட குண்டுகள்' விற்பனை", 23 நவம்பர், 2001.
இணைப்பு: <http://www.theguardian.com/world/2001/nov/23/armstrade.srilanka>

- "சிறிலங்காவினுடைய சூட்டு வலுவை வளம்படுத்த, ஐஇ ஆதரவுடன் இஸ்ரேல் ஒப்பந்தம். சந்தேகத்துக்கிடமான ஆயுதப் பேரங்கள் குறித்த சனாதிபதி விசாரணை", 13 டிசம்பர், 2006

இணைப்பு: <http://www.island.lk/2006/12/13/news1.html>

இணைப்பு: <http://www.island.lk/2006/12/21/news16.html>

சுனாமி உதவிக்குச் சமனான சிறிலங்காவுக்கான ஐஇ ஆயுத விற்பனை, 3 மே, 2007

இணைப்பு: <http://www.tamilnet.com/art.html?catid=13&artid=22056>

- தமிழ் புலிகளுடனான முரண்பாட்டின்போது சிறிலங்காவுக்கு பிரித்தானியா ஆயுதங்களைவிற்பனை செய்தது, 2 யூன், 2009

இணைப்பு: <http://www.telegraph.co.uk/news/worldnews/asia/srilanka/5426520/Britainsold-arms-to-Sri-Lankaduring-Tamil-Tiger-conflict.html>

- "வெளிப்படுத்தல்: கொடூரமான சிறிலங்கா அரசுக்கு ஐ இ ஆயுத விற்பனை.", 18 பெப்ரவரி, 2013

இணைப்பு: <http://www.independent.co.uk/news/uk/politics/revealed-uk-sells-arms-to-srilankas-brutal-regime-8498768.html>

**பின்சேர்க்கை 5:** - சிறிலங்காவுடன் பிரித்தானிய பொலிசாரின் தொடர்புகள்.

இணைப்பு: <http://www.belfasttelegraph.co.uk/news/local-national/northern-ireland/toppsni-men-advised-forces-of-bloody-sri-lankan-regime-29659207.html>

இணைப்பு: <http://www.corporatewatch.org/?lid=5076>

இணைப்பு: <www.heraldscotland.com/news/home-news/revealed-how-scots-police-trainedsri-lankan-cops-linked-to-human-rights-abuse.22090150>

இணைப்பு: <http://www.corporatewatch.org/?lid=5009>

**பின்சேர்க்கை 6:** 2007 இல் சிறிலங்காவுக்கு வழங்கப்பட்ட ஐ.இ. படையப் பயிற்சி நெறிகள்.

இணைப்பு: <https://www.gov.uk/international-defence-training-idt>

இணைப்பு: <http://www.army.mod.uk/training_education/24475.aspx>

இணைப்பு: <http://www.royalnavy.mod.uk/Careers/How-to-Join/Royal-Navy-Officertraining>

இணைப்பு: <http://www.royalnavy.mod.uk/Careers/How-to-Join/Royal-Navy-Officertraining>

**பின்சேர்க்கை 7:** படைய தொடர்பாடல் திறன்கள் திட்டம்.

இணைப்பு: கூகிள் தேடல் பதம் : SL MilComSkill proposal 12Jun04.doc

இணைப்பு: Wikileaks cable cited in <http://www.tamilnet.com/art.html?catid=79&artid=3449> இல் குறிப்பிடப் பட்டிருக்கும் விக்கி லீக்ஸ் கேபிள்.

**பின்சேர்க்கை 8:** ஸ்மித், ரீ.ஏ. " தயக்கம் கொண்ட கூலிப்படையினன்: சிறிலங்காவிலான பயங்கரவாத முறியடிப்பு போரில் பங்கு கொண்ட பிரித்தானிய இராணுவ ஹெலி முன்னாள் விமானியின் நினைவுகள்" சுசெக்ஸ்: புக் கில்ட் லிமிட்டட், 2002.

**தமிழ் மக்கள் மீதான இனஒழிப்பு ரீதியான தாக்குதலின் ஆக்கக் கூறுகள், 1930 – 2002**

**பகுதி ஒன்று: குடியேற்றத் திட்டங்கள், பாகுபாடான சட்டங்கள் மற்றும் திட்டமிட்ட படுகொலைகள்**

